விலை ரூபா 20.00



» தலை வைத்தால் நோய் தீரும்

பக்கம் 9



» தோசை 48 அடி!

பக்கம் 11



» ஏங்கும் விவசாயிகள்

பக்கம் 15



» தூக்கி வீசப்பட்ட ரிக்கி பொண்டிங்

பக்கம் 25

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 87

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 10 செவ்வாய்க்கிழமை (21/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜெனிவாவில் தப்ப அரசு எடுத்த இறுதி முயற்சியும் பிசுபிசுத்தது

## இலங்கையின் விசேட விருந்தை புறக்கணிக்க முக்கிய பல நாடுகள் முடிவு

கொழும்பு, பெப்ரவரி 21

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. அமைப்பின் மனித உரிமைகளுக்கான மாநாட்டில் இலங்கைக்கு ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக ஜெனிவாவில் இலங்கை அரசு ஒழுங்கு செய்திருந்த விசேட ஒன்றுகூடல் நிகழ்வை முக்கிய மான பல நாடுகள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் இலங்கையின் இறுதி முயற்சியும் பிசுபிசுத்தது.

ஜெனிவா மாநாட்டிற்கான இலங்கைக் குழுவின் முக்கிய பிரதிநிதியான வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று கொழும்பிலிருந்து சுவிற்சர்லாந்து நோக்கிப் புறப்பட்டார்.

ஜெனிவாவில் ஆரம்பமாகும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. அமர்வில் கலந்து கொள்ளும் இராஜதந்திரிகளுக்கான விசேட ஒன்று கூடலிலும் அமைச்சர் பீரிஸ் கலந்துகொண்டு இலங்கைக்கான ஆதரவைத் திரட்ட இருந்தார்.

எவ்வாறாயினும், லத்தீன் அமெரிக்கா » 27

### பதுங்கிய ஆ(சா)மி பாய்ந்தனர் மக்கள்

தென்மராட்சி, பெப். 21

இரவு வேளையில் சந்தேகத்துக்கிடமான முறையில் வெளியொன்றில் மறைந்திருந்த சிப்பாய் ஊர் மக்களால் பிடிக்கப்பட்டு 'கவனிக்கப்பட்டு' பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் இடம்பெற்றது.

இந்தச் சிப்பாயை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியவேளையில் அந்தப் பகுதி படை முகாமிலிருந்து தப்பியோடி வந்து ஒளித்திருந்ததாகக் கூறினர்.

வெலிகந்தவைச் சேர்ந்த டபிள்யு.வீ.சம்பத் (வயது 22) என்னும் சிப்பாயே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

## ஜெனிவா மாநாடு ஆரம்ப நாளன்று ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.21

இலங்கை விவகாரம் சர்வதேச அரங்கில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள தற்போதைய பரபரப்பான சூழ்நிலையில், ஜெனிவா மாநாடு ஆரம்பமாகும் தினத்தன்று இலங்கைக்கு எதிராகவும், ஆதரவாகவும் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் ஏட்டிக்குப்போட்டியாக நடத்தப்படவுள்ளன.

இலங்கைக்கு எதிராகப் புலம்பெயர் தமிழர்களும், ஆதரவாக புலம்பெயர் சிங்களவர்களும் அலைபோல் திரண்டுவந்து ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட் » 27

## உலக நியதிகளை மதிக்காது இலங்கை ஆட முடியாது

### எச்சரிக்கிறார் மங்கள சமரவீர



கொழும்பு, பெப்.21

''இந்த அரசால் தொடர்ந்தும் நாட்டை நிர்வகிக்க முடியாது. அரசு தொடர்ந்தும் ஆட்சிப்பீடத்தில் இருக்குமானால் நாடு நாசமாகி விடும்'' - என்று அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐ.தே.க. எம்.பியும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மங்கள சமரவீர.

சுயாதீன நாடு என்பதால் உலக நியதி, சம்பிரதாயங்களை மதிக்காமல் ஆடமுடியாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஜனநாயக நாடுகள் வேடிக்கை பார்க்காது. லிபியா, சிரியா போன்ற நாடுகள் உலக நியதியை மீறிச் செயற் » 27

## ஜெனிவா மாநாட்டில் இலங்கையை இலக்கு வைத்தே சிலாபக் கலவரம்

### பின்னணியில் அரச சார்பற்ற அமைப்பு என்கிறார் விமல்

கொழும்பு, பெப்.21

"ஜெனிவா மாநாட்டை இலக்கு வைத்தே அரச சார்பற்ற அமைப்பொன்று மக்களை வீதிக்கு இறக்கி சிலாபத்தில் ஆர்ப்பாட்டத்தை அரங்கேற்றியது. இது மீனவர்களின் தேவைக்காக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றல்ல.''

- இவ்வாறு சிலாபம் சம்பவம் தொடர்பில் புதுவிதமான விடயமொன்றை அம்பலப் படுத்தியுள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ. மத்திய கிழக்கு நாடுகளைப் போன்று இலங்கையிலும் அசாதாரண நிலையைத் தோற்றுவித்து அதனை சர்வதேசத்திடம்காண்பிக்கும் தேவைப்பாடுடனேயே இவ்வாறான சம் பவங்கள் உள்நாட்டில் அரங்கேற் » 27

## புகைக்குண்டுகளை இறக்குமதி செய்கிறது இலங்கைப் பொலிஸ்

கொழும்பு, பெப்.21

இலங்கைப் பொலிஸ் திணைக்களம் மேலும் ஒரு தொகைக் கண்ணீர் புகைக்குண்டுகளை இறக்குமதி செய்யவுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் இவ்வாறு கண்ணீர்ப் புகைக் குண்டுகளைக் கொள்வனவு செய்வதாகவும் அந்த அடிப்படையிலேயே இந்த வருடமும் கொள்வனவு செய்யப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, » 27

### மீனவர் போராட்டம் முடிவு

கொழும்பு, பெப்.21

எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து நீர்கொழும்பு மீனவர்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்த போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்னவுடன் மீனவர் பிரதிநிதிகள் நேற்றுநடத்திய பேச்சுகளின் போது மானியம் வழங்க அமைச்சர் ஒத்துக் கொண்டார்.

இதனையடுத்தே போராட்டத்தைக் கைவிட்டு மீண்டும் இன்று முதல்கடற்றொழிலில்ஈடுபட மீனவர்கள் முடிவு செய்துள்ளனர். (ந)

## மக்கள் போராட்டங்களை நசுக்க முயல்கிறது அரசு



### குற்றஞ்சாட்டுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப்.21

மக்களின் ஆதரவுடன் எதிர்க்கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்களை முடக்கும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியவை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

''மக்களை என்றுமில்லாதவாறு நெருக்கடிக்குள் ஆழ்த்தும் வகையில் அரசு எரிபொருளுக்கான விலையைத் திடீரென உயர்த்தியுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வெளியிடும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியினால் அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டம் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர்.

இலங்கையில் குடிமக்கள் வாழ்வதற் » 27

## ஜனநாயகப் போராட்டத்தை நாங்கள் தடுக்க மாட்டோம்

### சொல்பவர் கோத்தபாய



கொழும்பு, பெப்.21

எந்தவொரு தரப்பினரும் ஜனநாயக நெறிகளுக்கு அமையவே போராட்டங்களை நடத்த வேண்டும். சட்ட மீறல்களில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது.

எனினும் இங்கு ஜனநாயக ரீதியாக நடத்தப்படும் போராட்டங்கள் எதுவும் தடுக்கப்படவில்லை- என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

''எந்தவொரு போராட்டத் » 27

### விஷமானது உணவு 7 பேர் பாதிப்பு

உணவு விஷமடைந்ததனால் இரு தேரர்கள் உள்ளிட்ட ஏழு பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரத்தில் விஹாரையொன்றில் உட்கொண்ட உணவே விஷமடைந்துள்ளது. இரண்டு தேரர்கள், இரு பெண்கள் மற்றும் மூன்று நபர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

### இலங்கை மாணவி உலகில் முதலிடம்

க.பொ.த. உயர்தர (லண்டன்) பரீட்சையில் ஆங்கில இலக்கியத் தரவரிசையில் உலகில் முதலிடம் பெற்றமைக்காக இலங்கை மாணவியான நிஷிகா சமரதுங்க அண்மையில் நடைபெற்ற 'எட்எக்ஸல் ஹைற அச்சீவர்ஸ் 2010/2011' விருதுவழங்கல் வைபவத்தின்போது கௌரவிக்கப்பட்டார். இவர் க.பொ.த. சாதாரணத்தர (லண்டன்) பரீட்சையிலும் உலகில் முதல் 3 இடங்களுக்குள் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

### முன்னேஸ்வரத்தில் திருடர் கைவரிசை

சிலாபம் முன்னேஸ்வரம் கோயிலின் அம்மன் சிலையிலிருந்து ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான தங்க அட்டியலொன்றும் உண்டியலிலிருந்து சுமார் 1 லட்சம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 18ஆம் திகதி காலை இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைமேற்கொண்டுவருகின்றனர்.

### கைக்குண்டு வெடிப்பு மூவர் காயம்

பாறையைப் பிளப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் களுத்தாகம பிரதேசத்தில் மூவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடமையில் இருந்த ஊழியர்கள் கைக்குண்டை சோதித்துப் பார்க்கும் போதே வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் தபுத்தேகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இருவர் அநுராதபுர வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கேதீஸ்வரத்தில் மக்கள் திரள்

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நேற்று சிவராத்திரி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. இதில் லட்சக்கணக்கான மக்கள் பக்திபூர்வமாகக் கலந்து கொண்டனர். 10 லட்சத்துக்கும் அதிகமானோர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்பட்ட போதும் கடும் பனி காரணமாக மக்கள் தொகை குறைவாகவே காணப்பட்டது. இதேவேளை, பக்தர் கூட்டத்தினிடையே திருட்டு முயற்சியில் ஈடுபட்ட சிலரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். பாதுகாப்புப் பணிக்காக கேதீஸ்வரத்தில் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

# ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலையை வேறு இடத்துக்கு மாற்ற எதிர்ப்பு

## மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.21

சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலையைத் தற்பொழுது இயங்கும் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்வதை ஆட்சேபித்து நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான பெற்றோரும், நலன் விரும்பிகளும், மாணவர்களும், பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

காலை 7.00 மணி முதல் 11 மணிவரை இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

* பாடசாலையை இடமாற்றம் செய்யாதே
* நூலகத்தைப் பயன்படுத்த அனுமதி
* ஒலிபெருக்கி வாங்கியது தவறா?
* வயல்வெளியில் கற்பதற்கு மானுடமே துணை போகாதே.

என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்

பெருமளவிலான பொலிஸாரும், ஆங்காங்கே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் காணப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் எஸ். பிரகாஷ் ஆகியோர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.

அப்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியவை வருமாறு.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்ப காலம் முதல், 2008 ஆம் ஆண்டு வரை ஆரம்ப வகுப்பு வரை ஒரு நிர்வாகத்தின் கீழ் ஒரே பாடசாலையாகவே இயங்கியது.

* 2008 ஆம் ஆண்டில் இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆரம்ப வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை எனவும்,
* ஆறாம் ஆண்டு முதல் க. பொ.த. உயர்தரம் வரையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எனவும் தனித்தனி நிர்வாக நடைமுறையின் கீழ் பிரிக்கப்பட்டன.
* தனித்தனியான அதிபர், தனித்தனியான பாடசாலைக் கீதம், தனித்தனியான கழுத்துப்பட்டி என எல்லாமே வித்தியாசம் காட்டக்கூடிய வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன இதன் அடிப்படையில் தனித்தனியான பெற்றோர் ஆசிரியர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் என சங்கங்களும் தனித்தே இயங்குகின்றன.
* 2008 ஆம் ஆண்டில் ஆரம்ப பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது 305 மாணவர்கள் கற்றனர். இப்போது இந்தத் தொகை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.
* வெளியிடங்களில் இருந்தும் மாணவர்கள் ஆரம்ப பாடசாலையில் வந்து இணைகின்றனர் இந்தக் கல்லூரி நிர்வாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது இரு பாடசாலைகளின் அதிபர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று 5.10.2010 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தனித்தனியான நூலகம் அமைக்கப்படும் வரை கல்லூரி நூலகத்தை இரு பிரிவினரும் பயன்படுத்தலாம். விளையாட்டு மைதானம், மாநாட்டு மண்டபம் என்பனவும் பொதுவாகவே இருக்கும்.

ஆரம்பப் பாடசாலை தான் கல்லூரிக்குத் தேவையான மாணவர்களை உருவாக்குகின்றது என்பதையும் சிரேஷ்ட பிரிவுக்கு மாணவர்களைத் தருகின்றது என்பதையும் இரு அதிபர்களும் உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயல்படவேண்டும் எனவும் அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சில மாதங்களின் முன் (சிரேஷ்ட பிரிவு) கல்லூரி அதிபர் ஆரம்பப் பாடசாலையை வேறு இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவித்தார். பாடசாலைப் பொதுநூலகத்தை ஆரம்ப பாடசாலையினர் பயன்படுத்த முடியாது எனவும் தடை விதித்துள்ளார்.

ஆரம்ப பாடசாலைமாணவர்களுக்கு வழங்கப்பட்ட குடி தண்ணீர் இணைப்பையும் துண்டித்து விட்டார்.

கல்லூரி பழைய மாணவர்கள் கல்லூரிக்கு நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டரங்கு ஒன்றை நிர்மாணிக்கவுள்ளதாகவும், ஆரம்ப பாடசாலை கட்டடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் தான் பவிலியன் கட்டப்போகிறோம். எனவே ஆரம்ப பிரிவை வேறு இடத்துக்கு இடம்மாற்ற வேண்டும் எனவும் கல்லூரி அதிபர் கூறியுள்ளார்.



இப்பொழுது ஆரம்ப பாடசாலை மிகவும் சிறப்பான முறையில் இயங்குகின்றது. கல்வி நடவடிக்கைகளும், புலமைப்பரிசில் பெறுபேறுகளும் சிறப்பாகவே இருக்கின்றன. எனவே இந்தப் பாடசாலையை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்வதை வன்மையாக எதிர்க்கின்றோம். ஆரம்ப பாடசாலை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் ஒரு சதுப்பு நிலம். மழை காலத்தில் வெள்ளம் நிறைந்து காணப்படும். சிறிதும் பொருத்தமற்ற காணி என்பதால் இந்தத் திட்டத்தை கடைசி வரை எதிர்ப்போம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரே குரலில் கூறினர்.

இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கல்லூரி அதிபர் ஆறு திருமுருகனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் கூறியதாவது.

என்னால் உருவாக்கப்பட்ட ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை சிதைந்து சீரழிவதை நான் விரும்பவில்லை. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் ஆரம்பப் பாடசாலையை வேறு இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், கட்டடங்கள் இடிக்கப்படவேண்டும் என்று கூறவில்லை.

2005 ஆம் ஆண்டில் தனியாக ஆரம்ப பிரிவை உருவாக்கி, 2008 ஆம் ஆண்டில் இசுரு பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 330 மாணவர்களுடன் ஆரம்ப பாடசாலை நிர்வாகப் பிரிவை புதிய அதிபரிடம் ஒப்படைத்தேன்.

அங்கே கற்பவர்கள் எனது குழந்தைகள். கற்பிப்பவர்கள் எனது பழைய மாணவர்கள் இப்பாடசாலை அழிந்து சிதைந்து போவதைநான்விரும்பவில்லை. என்று அடித்துக்கூறினார்.

இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இரு பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய முன் வந்துள்ளனர். கொழும்பு போன்ற பிரதான நகர் புறங்களில் இருப்பது போல் நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானத்தையும், பார்வையாளர் அரங்கு ஒன்றையும் அமைக்கவுள்ளன. அதே வேளை சகல வசதிகளுடன் கூடிய ஆரம்ப பாடசாலைக்கு புதிதாகவே கட்டடங்களை அமைத்துக் கொடுக்கவும் உறுதியளித்துள்ளனர்.

இந்த ஆரம்ப பாடசாலையை அமைப்பதற்காக எமது கல்லூரிக்கு சொந்தமான 52 பேர்ச்சஸ் காணியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளேன் புதிய கட்டடத்திற்கான வரைபடத்தையும் பழைய மாணவர் ஒருவரே தயாரித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக மாகாண கல்வி அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டது. பழைய மாணவர்களினதும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினதும் வேண்டுகோளின் பேரில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் எமது பாடசாலைக்கு நேரடியாக வந்து இரு பிரிவு அதிபர்களையும் சந்தித்து இவ்விடயம் தொடர்பாகப் பேசி விவரங்களைக் கேட்டுச் சென்றுள்ளார். அமைச்சின பரிசீலனையின் பின் தொடர்பு கொள்வதாக அறிவித்துள்ளார். இது தான் உண்மை நிலை.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கல்லூரி அதிபர் என்ற முறையில் நானோ, அல்லது கல்வித்திணைக்களமோ ஆரம்ப பாடசாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கூறவில்லை உத்தியோகப் பூர்வமான அறிவித்தல்களும் இல்லை.

இந்த நிலையில் ஏன் இப்படியான ஆர்ப்பாட்டங்களைச் செய்கின்றனர்? பச்சிளம் குழந்தைகளைத் தவறான வழியில் ஏன் இட்டுச் செல்கின்றனர் என்பதும் புரியவில்லை. வேதனையாக இருக்கின்றது.

நான் எனது பிள்ளைகளை வயல் வெளியில் கூடாரங்களில் படிக்க ஒரு போதும் இடம் கொடேன். என்றார் ஆறு திருமுருகன். (த-2-5)

# காரைநகர் இராஜஇராஜேஸ்வரி ஆலயத்தில் திருடர் கைவரிசை

## ஐம்பொன் விக்கிரகங்கள் திருட்டு

காரைநகர் பலகாடு இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

ஆலயத்தின் முன்பக்க கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கே பிள்ளையார், அம்மன் ஆகிய ஐம்பொன் விக்கிரகங்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வை சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே. ஆனைமுகன் கருத்து தெரிவிக்கையில், இந்தப் பிரதேசத்தில் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கை திருப்திகரமாக இல்லை. அதனாலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு காரைநகரில் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையால் குற்றச் செயல்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு முறையிட்டும் நேற்று நண்பகல் வரை பொலிஸாரினால் விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை- என்றார்.

# தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியைச் சந்திக்கிறது

யாழ்ப்பாணம், பெப். 21

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஆசிரியர்களின் குறை நிறைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தவுள்ளது.

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதியுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த ஆசிரியர்களுக்கு அல்லது அவர்களது உறவுகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கக்கோரி இந்தச் சந்திப்பின்போது விசேடமாக வலியுறுத்தவுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேந்திரன் தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது தமிழ் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வி நிலையங்கள் அழிவடைந்துள்ளன. இதனை ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தவுள்ளோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச் சங்க உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது கலந்து கொள்ளவுள்ளனர்

ஜனாதிபதி செயலகத்திடம் விடப்பட்ட கோரிக்கைக்கு இணங்கவே சந்திப்புக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாதம் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் சந்திப்பு இடம் பெறலாம் என்றார். (த.05)

# வல்வெட்டித்துறையில் கொல்களம் அமைக்கும் பணி இடைநிறுத்தம்

வடமராட்சி, பெப். 21

வல்வெட்டித்துறை மயிலியதனை மயானத்தில் அமைக்கப்பட்டு வந்த கொல்களத்தின் கட்டுமானப்பணிகளை வல்வெட்டித்துறை நகரசபை உடனடியாக நிறுத்தியுள்ளது.

இந்த மயானத்தில் மாடு வெட்டுவதற்கான கொல்களம் அமைப்பதென ஏற்கனவே தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

வல்வெட்டித்துறை நகரம் இந்து கலாசாரப் பின்னணியில் சைவ ஆகம மரபுகளைக் கொண்ட ஒரு நகரமாக இருப்பதைக் கருத்தில் கொண்டும், மயிலியதனை மயானத்தைப் பயன்படுத்தும் மக்களின் உணர்வுகளுக்கும், விருப்பங்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் கொல்களம் அமைப்பதை சபை மறுபரிசீலனை செய்தும், அந்தக் கட்டுமானப்பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு சபை ஏகமனதாக அங்கிகாரத்தை வழங்கியதாக சபைத் தலைவர் ந. அனந்தராஜ் தெரிவித்தார்.

அதே வேளை குறுகிய அரசியல் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான ஒரு ஊடகமாக அந்த மயான பூமியை எவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (த-08)

# பார்வதியம்மாவின் நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை பார்வதியம்மாவின் முதலாம் ஆண்டு நினைவுநிகழ்வுகள் புலம்பெயர் நாடுகளிலும் தமிழகத்திலும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வருடம் பெப்ரவரி 20ஆம் திகதி உடல் நலக் குறைவு காரணமாக பார்வதியம்மா வல்வெட்டித்துறையில் காலமானார். இறுதிப்போரின் பின்னர் படையினரால் இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பார்வதியம்மா, கணவரான வேலுப்பிள்ளையின் மரணத்தை அடுத்து விடுவிக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் அவர் சிகிச்சை பெறுவதற்காக இந்தியா செல்ல முயன்ற போது அதற்கு இந்திய அரசு அனுமதி அளிக்க மறுத்த நிலையில் இலங்கைக்கே திரும்பிவந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட போது அவர் மரணமானார். (ஙு)

# உரிமைகளை மீட்க தமிழர்கள் அயராது உழைக்க வேண்டும்

## கனடா சர்வதேச மாநாட்டில் வலியுறுத்து

ரொரன்ரோ, பெப்.21

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை உலகம் உணரத் தலைப்பட்டுள்ள இன்றைய நிலையில் தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க அயராது தொடர்ந்தும் உழைக்க வேண்டும் என கனடாவில் நடந்த சர்வதேசமனிதஉரிமைகள்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், தமிழர்களின் நீதியானபோராட்டத்தை வென்றெடுக்க புலம்பெயர்ந்த தமிழர்கள் அயராது தொடர்ந்தும் பணியாற்ற வேண்டிய தன் அவசியம் குறித்தும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

டேவிட் மெற்றாஸ், டெனிலோ ரெயிஸ், டேயிற்றி மக்கோனல், அலிபெய்டுன், தியடோர் ஓர்லின், உலகத்தமிழர் பேரவைத் தலைவர் இம்மானுவேல் அடிகளார், பேராசிரியர் சிறீரஞ்சன் ஆகியோர் உரையாற்றினர்.

இம்மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே என புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர். (த-சி)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## வெளிச்சமான பாதையில் நடப்பதற்கான ஆரம்பம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற சமகாலக் கருத்தரங்கில், தமிழ் மக்கள் தமக்குள் விரும்பும் ஒரு முக்கிய தேவை மெல்லியதாக மின்னித் தெறித்ததை அவதானிக்க முடிந்தது.

அது என்ன, அப்படி என்ன- என்று வாசகர்களில் மிகப்பலர் தமக்குள் தாமே துருவுவார்கள். அந்தச் சமகாலக் கருத்தரங்கில், தமிழ் மக்கள் மத்தியில் செயற்படும் பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒரே மேடையில் அமர்ந்து தமது நிலைப்பாடுகளை வெளியிட்டதையே இங்கு குறிப்பிடுகிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை முன்னணி(ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) மட்டுமன்றி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியவற்றின் தலைவர்களும் குறிப்பிட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு இன்றைய நிலையில் தமிழ் மக்கள் சார்பில் செய்யவேண்டியவற்றையும், ஒரே குரலில் ஒலிக்க வேண்டியன குறித்தும் விரிவாகக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தேர்தல் காலங்களில் மட்டும் கூடிப்பேசி, ஒரே அணியில் அல்லது சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டும் இலக்குடன் பரஸ்பரம் பேசுவதைவிட, தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு கட்சிகளின் தலைவர்கள் ஒரே அணியில் நின்று, ஒரே குரலில், கனதியான கருத்துக்களைச் சர்வதேசத்தின் முன்வைக்கவேண்டிய பெரும் தேவை, எக்காலத்திலும் இல்லாதவாறு இப்போது தோன்றியுள்ளது.

தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, தமது மக்கள் இழந்துநிற்கும் உரிமைகளை- சர்வதேச நியமங்களின் பிரகாரம் எமது மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை- வழங்குவதற்கு, மறுத்து நிற்கும் அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்குமாறு ஒரே அணியில் செயற்பட வேண்டிய, -

சர்வதேசங்களையும், மிகக் குறிப்பாக மனித நீதியுடன் செயற்படும் நாடுகளிடம் குரல் கொடுக்கவேண்டிய- தேவை இப்போது அவசியமானதும் அவசரமானதும் ஆகும்.

நாம் பிரிந்து நின்று எதனையும் சாதித்து விடப்போவதில்லை. நமது தேவை, தமிழன் தமிழனாக நின்று தலை நிமிர்ந்து வாழவேண்டும். நமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்-

நமது விடிவுக்காகத் தொண்டாற்றி, உயிர் நீத்த தியாகிகள், தலைவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைவதற்கு நாம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்-

என்று மூத்த தமிழ் அரசியல் தலைவர் ஆனந்த சங்கரி கூறியதை எமது தலைவர்கள் அனைவரும் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் பாரம்பரிய மொழி, கலாசார, மதக் கோட்பாடுகளைக் கொண்டவர்கள். பாரம்பரியமாக தாம் வாழ்ந்த, வாழும், மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுய நிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகிறார்கள். அவர்கள் இந்த நாட்டின் சம பிரசைகளாக வாழ்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும்-

இந்த நாட்டின் அரசு, இதய சுத்தியுடன், பேச்சுக்களின் மூலம் நின்று நிலைக்கக் கூடிய தீர்வை ஏற்படுத்த வேண்டும். சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், தமிழர்களின் மற்றொரு மிக மூத்த அரசியல் தலைவருமான இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூத்த தமிழ் அரசியல் தலைவர்கள் இருவரினதும் கருத்துக்கள் அரசாங்கத்தால் மட்டுமன்றி, சர்வதேச சமூகத்தினரால் மட்டுமன்றி எமது மக்களாலும் மனதில் கொள்ளப்பட வேண்டியவை.

அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, தமிழ் சிவில் சமூகத்தினரின் பங்களிப்பும் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு பெரிதும் உதவும். இரண்டு தரப்பினர்களுக்கும் இடையேயான, பரஸ்பரக் கருத்துப் பரிமாற்றங்களும் புரிந்துணர்வும் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெறுவதற்கான உந்துதலாகவும், கூட்டு முயற்சியாகவும் அமைந்து, தொடர வேண்டிய ஒன்றே.

இதே வேளை,-

நாட்டின் இரண்டு சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம் மக்களின் பிரதான அரசியல் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகும்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிடக்கூடாது என்ற நோக்குடன் வெளியிட்ட கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றை அரசு நழுவ விடக்கூடாது. அரசு தனக்குள்ள வெற்றிக்களிப்பில் தீர்வை முன்வைக்க முற்படலாகாது- என்று ஹக்கீமும்,-

சிறுபான்மை இனமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உட்பட, உச்சமட்ட அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும். சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது- என்று அக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலியும் தெரிவித்திருந்தனர்.

இவற்றுக்கிடையில், முஸ்லிம் சிவில் சமூகம், இனமீள் இணக்கத்துக்கான சில கருத்துக்களை, யோசனைகளை, முன்வைத்துள்ளது.

மீள் இணக்கத்துக்கான சவால் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை நாம் தவறவிடுவோமானால், ஒரு வரலாற்று வாய்ப்பினை இழந்து விடுவோம். முஸ்லிம் அரசியல்வாதிகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் சமாதானத்தை நோக்கி முன் செல்வதற்கான பொறுப்பினையும் வழிமுறைகளையும் செயல்முறைகளையும் ஏற்று வடிவமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.-

என்று முஸ்லிம் சிவில் சமூகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, மலையகத் தமிழர் தலைமைகளும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நேர் கோட்டில் நிற்கின்றன. அதேபோன்று தென்னிலங்கையிலும், தமிழ் மக்கள் கேட்கும் நியாயமான, அவர்களுக்கு கிடைக்கவேண்டிய ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று நல்லிணக்கத்தை விரும்பும் தரப்புகள் குரல் கொடுத்து வருகின்றன.

இவையாவும், தமிழ் மக்களின், முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் கரிசனை கொண்டவை என்று கணக்கில் எடுக்கப்படக் கூடியவை.

இனப்பிரச்சினைக்கு நியாயமான, நீதியான தீர்வு காண்பதற்கு முதலில் தமிழ் அரசியல் தலைமைகளும், அவர்களுக்கு பக்கத்துணையாக தமிழ் சிவில் சமூகமும்-

அவற்றுக்கு சமாந்தரமாக முஸ்லிம் அரசியல் தலைமைகளும், முஸ்லிம் சிவில் சமூகமும்-

தமக்கிடையே ஆரோக்கியமான பெறுபேறுகளைத் தரவல்ல தீர்வு முறைகளை ஆராய்ந்து கருத்து ஒருமித்தால்-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொறிமுறைகளை உருவாக்கி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கமுடியும். சர்வதேசங்களின் அசல் நல்லிணக்கத்துக்கான அழுத்தமும் சேரும் போது ஆக்கபூர்வமான முடிவு ஒன்று கைக்கு வரும் வாய்ப்பு உண்டு.

அந்த வகையில், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒன்று சேரல், சிவில் சமூக அமைப்பின் பக்கபலம் என்ற ஆரம்பம் வெளிச்சமான ஒரு பாதைக்கு இட்டுச் செல்லும் என்று நம்புவோமாக.

# யாழ். படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் 'யாழ்' கண்காட்சி

## மூன்று தினங்கள் பொது நூலகத்தில்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் சிவில் நிர்வாகக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் 'யாழ்.' புகைப்படக் கண்காட்சி எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை மூன்று தினங்கள் யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் கண்காட்சியின் முதலாம் நாளில் பிரதம விருந்தினராகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், இரண்டாம் நாளில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவும், மூன்றாம் நாளில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரால் எடுக்கப்பட்ட சுமார் 400 இற்கும் அதிகமான புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப் படவுள்ளதாக யாழ். மாவட்டப் படைத் தலைமையகத்தின் ஊடக இணைப்பாளர் கேணல் மல்லவராய்ச்சி உதயனுக்குத் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கும் படையினருக்குமான புரிந்துணர்வை வலுப்படுத்தும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் இதனைப் பார்வையிட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# மீனவர்களுக்கான எரிபொருள் மானிய விவரங்கள் அறிவிப்பு

**டீசலுக்கு 12 ரூபா மானியமும், மண்ணெண்ணெய்க்கு 25 ரூபா மானியமும் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும். மாதாந்தம் மானிய விலையில் எரிபொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், பெப். 21

மானிய விலையில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பலநாள் கலங்கள் பயன்படுத்தும் கடற்றொழிலாளரகளுக்குத் தலா 2 ஆயிரத்து 500 லீற்றர் டீசல் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

அதேபோல, ஒருநாள் கலம் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு தலா ஆயிரத்து 500 லீற்றர் டீசல் மானிய விலையில் வழங்கப்படும்.

கட்டுமரம், வள்ளம் ஆகியவற்றில் இயந்திரம் பயன்படுத்தப்படுமானால் கடற்றொழிலாளர்களுக்குத் தலா 250 லீற்றர் மண்ணெண்ணெய் மானிய விலை யில் வழங்கப்படவுள்ளது.

டீசலுக்கு 12 ரூபா மானியமும், மண்ணெண்ணெய்க்கு 25 ரூபா மானியமும் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும். மாதாந்தம் மானிய விலையில் எரிபொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் 2 ஆயிரத்து 500 லீற்றர் டீசலுக்கு 12 ரூபா வீதம் 30 ஆயிரம் ரூபா பல நாள் கலம் பயன்படுத்தும் கடற் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

ஒருநாள் கலம் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு ஆயிரத்து 500 லீற்றர் டீசலுக்கு 12 ரூபா வீதம் 18 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

அதேபோல கட்டுமரம் மற்றும் வள்ளம் பயன்படுத்துவோருக்கு 250 லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 25 ரூபா வீதம் 6250 ரூபா வழங்கப் படும்.

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து மானிய விலையில் அதனை வழங்கவுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர் அறிவித்த நாளிலிருந்து, மானிய விலையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் தெரிவித்தார். (த-03)

## மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயம்

தென்மராட்சி, பெப்.21

ஏ.9 வீதியில் வேகமாக சென்ற வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிளை மோதி தள்ளி விட்டு தப்பிச் சென்றது. இதனால் மோட்டார் சைக்கிள் சேதங்களுக்கு இலக்கானதுடன் அதில் பயணித்தவர் காயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளிவில் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சிவகாந்தன் (வயது 31) என்பவரே காயமடைந்தவராவார்.

வீதியோரத்தில் காயங்களுடன் காணப்பட்ட அவரை அந்த வழியால் வந்தவர்கள் மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பொலிஸார் இதுகுறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

(ந-9)

## நிகழ்வுகள் இன்று

### ஆண்டு விழா

அச்செழு ஒளிநிலா சனசமூக நிலையமூடாக சமூக முன்னெடுத்தல் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவு விழா பிற்பகல் 2 மணிக்கு அச்செழு தேவிபுரம் ஒளிநிலா பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி ஜெயகாந்தன் தர்சிகா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்துகொள்வார். (த-14)

# மாற்று ஆற்றலுள்ளோருக்கு வாழ்வாதாரத் தொழில் பயிற்சி

வடமராட்சி, பெப். 21

இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் வடமராட்சிப் பிரதேசத்தில் வசிக்கின்ற மாற்று ஆற்றல் உள்ளோருக்கு வாழ்வாதாரத் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிக்கென முதற்கட்டமாக 25 மாற்று ஆற்றல் உள்ள இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை கல்லூரி வீதியில் உள்ள மெதடிஸ்த திருச்சபைக் கட்டடத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பமாகும்.

மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உள்ளோருக்கான வளவாளர் அருட்திரு எஸ்.எஸ். ஞானராஜா இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பித்துவைப்பார்.

ஏற்கனவே ஊர்காவற்றுறை, உடுவில் ஆகிய இடங்களில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் வாழ்வாதாரத் தொழிற் பயிற்சிகள் மாற்று ஆற்றல் உள்ளோருக்கென நடத்தப்பட்டு வருகின்றன. (த-8)

# கலகம் அடக்கும் பொலிஸாருக்கு உபகரணங்கள் கொள்வனவு

கொழும்பு, பெப். 21

கலகங்களை அடக்கும் செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்படும் 15 ஆயிரம் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் மற்றும் உபகரணங்களை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்குப் பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படவுள்ள இப்பொருள்களுள் 4 ஆயிரத்து 700 கண்ணீர்ப்புகைக் குண்டுகள், ஆயிரம் பாதுகாப்பு முகக் கவசங்கள், கலகங்களை அடக்கும் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் தலைக்கவசங்கள், கைகளில் அணியும் பாதுகாப்புத் தகடுகள், இறப்பரினால் தயாரிக்கப்படும் 2 ஆயிரத்து 500 குறுந்தடிகள் அடங்குவதாகப் பொலிஸ் திணைக்களத்தின் விநியோகப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவற்றுக்கு மேலதிகமாகப் 'பிஸ்ரல்கள்' மற்றும் 'றிவோல்வர்'' களுக்கான உறைகள் 7 ஆயிரத்து 500, 10 ஆயிரம் சிறியரக ஊதுகருவிகள் மற்றும் 'சைரன்' ஒலி எழுப்பும் 50 ஊது குழல்கள் என்பனவும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதனிடையே, அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் கலகமடக்கும் பொலிஸ் பிரிவுகளைத் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் பொலிஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (த-22)

# எரிபொருள் விலையேற்றம் அளம்பில் மீனவர்களும் பாதிப்பு

நெடுங்கேணி,பெப்.21

எரிபொருள் விலையேற்றத்தால் அளம்பில் கடற்றொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் அளம்பில் கடற்றொழிலாளர்கள் வழக்கமாக ஆழ் கடலுக்குச் சென்று தமது தொழிலை மேற்கொள்பவர்கள். ஆனால் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலைகள் இவர்களை அதிகம் பாதித்துள்ளனன. இதனால் ஆழ்கடலுக்குச் சென்று தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் இவர்கள் தற்போது உள்ளனர்.

**முல்லைத்தீவு மாவட்டம் அளம்பில் கடற்றொழிலாளர்கள் வழக்கமாக ஆழ் கடலுக்குச் சென்று தமது தொழிலை மேற்கொள்பவர்கள். தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலைகள் இவர்களை அதிகம் பாதித்துள்ளது.**

சிலர் கரையில் நின்று தமது தொழிலை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் ஆழ் கடலில் கிடைப்பது போன்று அதிக மீன்கள் இங்கு கிடைப்பதில்லை. ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் இவர்களின் நிலை இப்போதும் மிக மோசமாக மாறியுள்ளது.

ஏனைய பகுதிகளில் வழங்கப்படுவதாக அறிவித்துள்ள எரிபொருள் மானியத்தைத் தமக்கும் உடனடியாக வழங்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர் காரணமாகப் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்ட இந்த மக்கள் மீள்குடியமர்ந்த பின்னரும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர்.

தற்போது எரிபொருள் விலையேற்றமும் இவர்களை மோசமாகப் பாதித்துள்ளது.

(க-435)

## ஒழுங்கற்ற வகையில் கட்ட வேலைகள்

அக்கராயன்,பெப்.21

யூனியன்குளம் கிராமப் பாடசாலையின் கட்டட வேலைகள் ஒழுங்காக இடம் பெறவில்லையென இங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பாடசாலைக்குத் தற்போது நிரந்தரமாகக் கட்டடங்கள் எதுவும் இல்லை. இதனால் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் பாடசாலை வரலாற்றிலேயே முதல் தடவையாக, 120 அடி நீளமான நிரந்தரக் கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இதனைப் பொறுப்பேற்ற ஒப்பந்தகாரர், கட்டட வேலைகளை ஒழுங்காக மேற்கொள்ளாததால் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

இந்தக் குறைபாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கோட்டக் கல்வி அதிகாரி, கிளிநொச்சி வலயப் பணிமனையின் உயரதிகாரிகள் ஆகியோர் நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

மிகவும் பின் தங்கிய இந்தக் கிராமப் பாடசாலையின் ஒரேயொரு கட்டடமும், சீரான முறையில் அமைக்கப்படாமை குறித்துக் கிராம மக்கள் கவலையும், விசனமும் அடைந்துள்ளனர்.

(க-410)

## மோசமான வீதி

நெடுங்கேணி,பெப்.21

பட்டிக்குடியிருப்பிலிருந்து ஒதியமலை செல்லும் பிரதான வீதி மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த வீதி 1984 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை எந்த விதமான புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்போது இந்த வீதி பற்றைக்காடுகளால் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியை உபயோகித்து வரும் மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் உள்ளனர்.

மேலும் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையும் உருவாகியுள்ளது. அதிகாரிகளின் கடைக்கண் பார்வை இந்த வீதியிலும் விழுமாவெனப் பாதிக்கப்பட்ட மக்கள் காத்திருக்கின்றனர்.

(க-435)



மிகவும் மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படும் கோணாவில் கிராமத்தின் வீதியொன்றில் பெரும் இன்னல்களுடன் மக்கள் பயணிக்கின்றனர். (18)

## ஆசிரியர்களுக்கு விடுதிகள்

நெடுங்கேணி,பெப்.21

பட்டிக்குடியிருப்பு அ.த.க.பாடசாலையில் ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 25 லட்சம் ரூபா செலவில் இந்த விடுதிகள் அமைக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ளன.

1984 ஆம் ஆண்டு நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக இந்தப் பாடசாலை அழிவடைந்தது. மீண்டும் இதன் புனரமைப்பு வேலைகள் இடம் பெற்றன.

ஆனால் ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்படவில்லை. இதனால் வெளியிடங்களிலிருந்து இங்கு வந்து கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் யூ.என்.டி.பி. நிறுவனம் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் இங்கு ஆசிரியர் விடுதிகளை அமைத்துள்ளது.

இதனால் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நடவடிக்கைகளில் சிறப்புடன் ஈடுபட முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-435)

## விறகு வியாபாரம்

நெடுங்கேணி,பெப்.21

முள்ளியவளைப் பிரதேசத்திலுள்ள ஒரு பகுதி மக்கள் விறகு வியாபாரத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் காடுகளுக்குச் சென்று விறகுகளை வெட்டுவதுடன் அவற்றைத் தமது சைக்கிள்களில் எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்கள் அதிக சுமை கொண்ட விறகுகளைத் தமது சைக்கிள்களில் ஏற்றிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

சில வாரங்களுக்கு முன்னர் இத்தகைய விறகுகள் ஏற்றப்பட்டிருந்த சைக்கிள் சிறுவன் ஒருவன் மீது வீழ்ந்ததால் அவன் உயிரிழந்த வேதனை தரும் சம்பவமும் இந்தப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

(க-435)

## பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்புங்கள்

### பெற்றோருக்கு கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

நெடுங்கேணி,பெப்.21

பெற்றோர்கள் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் வீடுகளில் மறித்து வைத்து அவர்களின் கல்விக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டாம்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி.

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்புப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றபோது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது இந்தப் பாடசாலையில் மாணவர்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு மாணவர்களின் பெற்றோரும் காரணமாக உள்ளனர். அவர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலை நாள்களில் ஒரு நாளாவது வீட்டில் மறித்து வைத்திருக்கக் கூடாது. மாறாக ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அத்துடன் தங்களால் இயன்ற உதவிகளையும் பாடசாலைக்கு வழங்கி உதவுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க-435)

## சந்தையில் மாணவர்கள்

நெடுங்கேணி,பெப்.21

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனை மகா வித்தியாலய மாணவர்கள் சந்தை நிலைவரம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

தரம்-5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் கடந்த 15 ஆம் திகதி குமுழமுனைப் பகுதிக்குச் சென்று அங்கு விற்பனை செய்யப்படும் மரக்கறி வகைகளின் விலை தொடர்பாகவும்,விற்பனை செய்யப்படும் முறைகள் தொடர்பாகவும் ஆர்வத்துடன் ஆராய்ந்துள்ளனர்.

அங்குள்ள விற்பனையாளர்களும் மாணவர்களுடன் பரிவுடன் உரையாடியதுடன் விவரங்களையும் வழங்கினர்.

இதனால் மாணவர்கள் சந்தை நிலைவரம் தொடர்பான அறிவினைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

(க-435)

# தறப்பாளின் கீழ் பாலர் பாடசாலை

நெடுங்கேணி,பெப்.21

நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள கீரி சுட்டான் பாடசாலை தற்போதும் தறப்பாள் கூடாரத்திலேயே இயங்கி வருகின்றது.

இந்தக் கிராமத்திலே மக்கள் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி குடியமர்ந்தனர்.

ஆனால் இங்கு இயங்கி வரும் பாலர் பாடசாலை எவ்வித வசதிகளுமற்ற தறப்பாள் கூடாரத்திலேயே தொடர்ந்து இயங்கி வருகின்றது.

இதனால் இங்குள்ள சிறார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் சுகாதார ரீதியிலும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

உரிய அதிகாரிகள் இந்தப் பாலர் பாடசாலைக்குக் கட்டட வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(க-435)

## அலுவலகத்தைப் புனரமைக்க அதிகாரிகள் முட்டுக்கட்டை

நெடுங்கேணி,பெப்.21

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தைப் புனரமைப்பதற்குச் சில அதிகாரிகள் தடையாகவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரியாலயம் 2006 ஆம் ஆண்டு நெடுங்கேணியில் திறந்து வைக்கப்பட்டுள்ள போதிலும் வன்செயல் காரணமாக அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனைப் புனரமைப்பதற்குச் சங்கத்தினர் பல தடவைகள் முயற்சி செய்தனர். ஆனால் இந்த நடவடிக்கைகளைச் சில அதிகாரிகள் தடை செய்து வருவதாகச் சங்கத்தின் முகாமையாளர் செந்தில் செல்வன் தெரிவித்தார்.

**இந்தக் காரியாலயம் 2006 ஆம் ஆண்டு நெடுங்கேணியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

இந்தச் சங்கமானது, நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள், நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் ஆகியவற்றுக்கு உதவிகளைச் செய்து வருகின்றது.

இந்த நிலையில் இந்தச் சங்கத்துக்குக் காரியாலயமொன்று அமைக்கப்படுவதன் அவசியத்தைப் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

(க-435)

# கைவிடப்படும் மேட்டுப் பயிர்கள்

முல்லைத்தீவு,பெப்.21

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேட்டுப் பயிர்களைக் கைவிட வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

எரிபொருள் விலை ஏற்றத்தின் காரணமாக நீர்ப்பம்பிகள் மூலம் நீர்பாய்ச்ச முடியாமையே இதற்கான பிரதான காரணமாகும்.

ஜனவரி மாதத்திலே பயிர்களை நாட்டியவர்கள் அவற்றைக் கைவிடும் நிலை தோன்றியுள்ளது. அத்துடன் மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்ததோடு அவற்றை வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் செய்வதறியாது குழம்பிய நிலையில் உள்ளனர்.

**எரிபொருள் விலையேற்றத்தின் பின்னர் சகல பொருள்களின் விலைகளும் இங்கு உயர்ந்துள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளமுடியாத துன்பத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர்.**

இந்தப் பிரதேசத்திலே அதிகளவான மக்கள் விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர். இதனால் எரிபொருள் விலையேற்றம் இவர்களை அதிகம் பாதித்துள்ளது.

மேலும் மின்சார வசதிகள் இல்லாத இந்தப் பிரதேச மக்கள் மண்ணெண்ணெயை நம்பியே உள்ளனர். அத்துடன் விவசாய இயந்திரங்களுக்கு டீசலையும் உபயோகிக்கின்றனர்.

அத்துடன் எரிபொருள் விலையேற்றத்தின் பின்னர் சகல பொருள்களின் விலைகளும் இங்கு உயர்ந்துள்ளன. இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட இந்த மக்கள் மீள முடியாத துன்பத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர்.

(க)

## அல்லைப்பிட்டி மக்களுக்கு நுளம்பு வலைகள்

யாழ்ப்பாணம், பெப் 21

அல்லைப்பிட்டி பிரதேச மக்களுக்கு ஒரு தொகுதி நுளம்பு வலைகள் வழங்கப் பட்டுள்ளன.

சர்வோதயம் நிறுவனம் இந்த நுளம்பு வலைகளை வழங்கியுள்ளது.

அல்லைப்பிட்டியில் அண்மையில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பிரதேச சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பொது மக்கள் மற்றும் சமூகத் தொண்டு நிறுவன உத்தியோகத்தர்கள் இணைந்து இப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் வீடுகளில் நுளம்பைக் கட்டுப்படுத்த முடியாத சூழல் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆள்கள் இல்லாத இடங்களில் அதிகளவில் வளர்ந்திருக்கும் பற்றைகளே இதற்குக் காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குடியிருப்பாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அல்லைப்பிட்டி கிராம சேவையாளர் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-14)

# அளவுக்கு அதிக மண் அகழ்வதாக விசனம்

தென்மராட்சி, பெப் 21

கொடிகாமம், பாலாவி மற்றும் கெற்பேலி ஆகிய பகுதிகளில் அளவுக்கு அதிகமாக மண் ஏற்றிச் செல்லப் படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் இருந்து மணல் ஏற்றிச் செல்வதற்குத் தடை விதிக்குமாறு சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் பிரதேச செயலகத்தால் இனங் காணப்பட்ட இடங்களில் மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மணல் பெறுவதற்கான அனுமதியும் வழங்கப் பட்டுள்ளது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகள் ஏனைய நாள்களிலும் அங்கிருந்து மணல் அள்ளிச் செல்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அள்ளப்படும் மணலை உழவு இயந்திரங்களில் ஏற்றி வந்து மிருசுவில், தவசிக்குளம் பகுதிகளில் உள்ள பகுதிகளில் சேமித்து வைக்கின்றனர். பின்னர் ஏனையோருக்கு அதிக விலைக்கு வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்துக்கான வீடமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அடுத்த திட்டம் வரும்வரை மண் அகழ்வுக்கான அனுமதி எதையும் வழங்க வேண்டாம் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

**அனுமதியைத் துஸ்பிரயோகம் செய்து அதிகளவில் மண் அகழப்படுகிறது.**

கிடைத்துள்ள அனுமதியை வைத்து வகைதொகையின்றி மணல் அகழப்பட்டு வருவதால் இப்பகுதியில் உள்ள வழங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் மணல் அகழ்வைத் தடுக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-9)

## பனங்கிழங்கின் சீசன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப் 21

யாழ். குடாநாட்டில் தற்போது பனங்கிழங்கு சீசன் ஆரம்பமாகியுள்ளது.

பெரும் எண்ணிக்கையில் யாழ். நகருக்கு கொண்டு வரப்படும் பனங் கிழங்கை சுற்றுலாப் பயணிகள் அதிகம் வாங்கிச் செல்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த பனங் கிழங்குகள் அதிகளவில் தீவுப் பகுதிகளில் இருந்தே எடுத்துவரப் படுகின்றன என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

அத்துடன் இதன் விலையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை அனுராதபுரத்தில் அண்மையில் இடம் பெற்ற தேசத்தின் மகுடம் கண்காட்சியில் யாழ்ப்பாண பனங் கிழங்குக்கு பெரும் வரவேற்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்காட்சிக்கென இங்கிருந்து 10 ஆயிரம் வரையான பனங்கிழங்குகள் கொண்டு செல்லப் பட்டதாகப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ப. சீவரத்தினம் தெரிவித்தார். (ம-14-17)

## வெப்ப நோய்களால் திணறும் குடாநாடு

யாழ்ப்பாணம், பெப் 21

யாழ்.குடாநாட்டில் தற்போது கடும் வரட்சி நிலவி வருவதன் காரணமாக வெப்ப நோய்கள் அதிகரித்துக் காணப் படுகின்றன.

இதனால் வைத்திய சாலைகளில் சிகிச்சைக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தடிமன், சளி, காய்ச்சல், முட்டு போன்றவற்றுடன் அம்மை நோய்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த வெப்ப நோய்களால் சிறுவர்கள் முதல் அனைவருமே பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரவில் நிலவும் பனிக்கால நிலையுடன் பகலில் கடும் வெயில் காணப்படுகிறது.

இதுவே நோய்களால் பெரும் எண்ணிக்கையானோர் பாதிப் படையக் காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-14)

## உற்பத்தியாளர் சந்தையாக பண்டத்தரிப்பு பொதுச் சந்தை

**ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன**

யாழ்ப்பாணம், பெப் 21

பண்டத்தரிப்பு பொதுச் சந்தையை உற்பத்தியாளர் சந்தையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியவிளான் விவசாய சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்தச் சந்தையை உற்பத்தியாளர் சந்தையாக மாற்றுவதற்கான ஆலோசனைகளை விவசாய சம்மேளனம் பெற்று வருகின்றது என்று சம்மேளனத் தலைவர் செ. சிவராஜா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாகவும் இது குறித்த ஆலேசனைகள் பெறப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தின் உற்பத்திகளை நியாயமான விலைக்குச் சந்தைப்படுத்தும் நோக்குடனும் உற்பத்தியாளர்களிடம் சுரண்டலைத் தடுக்கும் நோக்குடனும் இது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

நியாயமான விலையில் உற்பத்தியாளர்களது பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற வகையில் விரைவில் இதற்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப் படும். - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

உலகின் 1 ஆம் தர மஹிந்ரா டரக்டருக்கு*
டிமோவிடமிருந்து எல்லையற்ற சலுகை!



இப்பொழுது விலை : ரூ. 1,149,000/- மட்டுமே



இப்பொழுது விலை : ரூ. 1,199,000/- மட்டுமே

உங்களின் தேவைக்கேற்ப தேர்ந்தெடுப்பதற்கு ட்ரேலர், ரொட்டவேட்டர், கலப்பை உள்ளிட்ட உழவு உபகரங்களை நம்பமுடியாத விலைகளில் பெற்றுக்கொள்ள...

குறிப்பிட்டளவு இருப்புக்கள் மாத்திரமே. இன்றே அழையுங்கள் 0772 107 719 / 0777 373 683

(நிபந்தனைகள் உண்டு)
இக் கொடுப்பனவு 2012 மார்ச் 31ஆம் திகதி வரை மட்டுமே.

(மஹிந்ரா மற்றும் மஹிந்ரா குழுமத்தின் 2011 டிசெம்பர் வரை உலகம் முழுவதிலுமான விற்பனையின் அடிப்படையில்)

dimo TECHNOLOGY
வரையறுக்கப்பட்ட டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி
உழவு உபகரணப்பிரிவு, இல. 661, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.
தொ.பே: 0114 645380 இணையதளம்: www.dimolanka.com

Mahindra
Rise.

# வேலணைக்கு வரும் உல்லாசப் பயணிகள்

யாழ்ப்பாணம்,பெப் 21

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலா மையங்களைப் பார்வையிடுவதற்கு வெளி நாடுகளில் இருந்தும் தென் பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

இவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மண்கும்பான், வேலணை, புங்குடு தீவு ஆகிய இடங்களில் உல்லாசப் பயணிகளுக்கான இளைப்பாறும் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வேலணை பிரதேசத்துக்கு உட்பட்ட சாட்டி வெள்ளைக் கடற்கரை, மண்டைதீவு கடற்பிட்டி, சாட்டி இயற்கை நீர்த்தடாகம், நயினாதீவு, நாகவிகாரை, அராலி கடற்பாதை, புங்குடு தீவு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள் உட்படப் 10 இடங்களைப் பார்வையிட மக்கள் அதிகம் வருகை தருகின்றனர்.

இந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு முதற்கட்டமாக 25 லட்சம் ரூபா செலவில் உல்லாசப் பயணிகளுக்கான இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்படுகிறது.

**இவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மண்கும்பான், வேலணை, புங்குடு தீவு ஆகிய இடங்களில் உல்லாசப் பயணிகளுக் கான இளைப்பாறும் தங்கு மிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ. பிரணவநாதன், உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ ஆகியோர் ஊடாகத் திட்டங்கள் முன்னகர்த்தப்பட்டு வருகின்றன.

நிதி கிடைக்கும் பட்சத்தில் வேலணையில் விரைவில் நவீன வடிவிலான உல்லாசப் பயணிகள் ஆறுதல் மண்டபம் அமைக்கப்படும் என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் சி. சிவராசா தெரிவித்தார். (ம)

# காலபோக வெங்காயம்: விலை நிர்ணயம் செய்க

## சதாவதானி கதிரைவேற்பிள்ளை கடன் வழங்கு சங்கம் கோரிக்கை

வடமராட்சி, பெப்21

அடுத்த மாதம் அறுவடை செய்யப்படவுள்ள காலபோக வெங்காயத்துக்கான விலையை நிர்ணயம் செய்யுமாறு மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் குறித்த சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

காலபோகப் பயிர்ச் செய்கையில் வடமராட்சிப் பிரதேசத்தில் இம்முறை அதிகளவான நிலப்பரப்பில் விசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பனிப்பூச்சிகள் மற்றும் வெங்காயத்தைப் பீடிக்கும் நோய்களின் தாக்கம் இந்த முறை மிகவும் குறைவடைந்துள்ளமையால் இம்முறை வெங்காயம் பெரும் அளவில் அறுவடை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் அறுவடைக்கு முன்னரே வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது இங்குள்ள சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயம் 30 ரூபா தொடக்கம் 40 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

50 கிலோ வெங்காயத்தை ஆயிரத்து 500 ரூபாவுக்குக் கூட விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்ய மொத்த வியாபாரிகள் முன்வராத நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வகையில் காலபோக அறுவடை செய்யப்படும் வெங்காயத்தால் விவசாயிகள் நஷ்டம் அடையாத வகையில் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

விதை வெங்காயத்தின் விலை, பசளைகள், கிருமிநாசினி மற்றும் செலவுகள் தொடர்பான விவரங்கள் கமக்கார அமைப்புகளிடம் திரட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் காலபோக நெற்செய்கையின் மூலம் பெறப்படும் உற்பத்தியை சந்தைப்படுத்தல், அதற்கான விலை நிர்ணயம், விவசாயிகளின் நலன்களை மேம்படுத்தல் தொடர்பில் கலந்துரை

**பனிப்பூச்சிகள் மற்றும் வெங்காயத்தைப் பீடிக்கும் நோய் களின் தாக்கம் இந்த முறை மிகவும் குறைவடைந் துள்ளமையால் இந்த முறை வெங்காயம் பெரும் அளவில் அறுவடை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.**

யாடல்கள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வங்கிகள், கமநல சேவை நிலையங்கள், விவசாயத் திணைக்களங்களின் அதிகாரிகள் ஆகியோருடன் இது குறித்த கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி இந்தச் சந்திப்பை நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# சந்தேக நபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம்,பெப்.21

பொலிஸார் தாக்கல் செய்த மேலதிக அறிக்கைகளில் புதிய விடயங்களோ, விசாரணைகளில் முன்னேற்றமோ காணப்படாத பட்சத்தில், சந்தேகநபர்கள் பிணையில் செல்லப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது எனக்கூறி எதிரி சார்பு சட்டத்தரணி, மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

பிணை விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிவான் சந்தேக நபர்கள் இருவரையும் பிணையில் விடுவித்தார்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. யாழ். பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றைக் களவெடுத்த குற்றச்சாட்டில் ஊரெழுவைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். கடந்த ஏழு மாதங்களாக அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைப் பிணையில் விடுவிக்கக்கோரி சட்டத்தரணிகளான எஸ்.செபஸ்ரீன் மற்றும் ஜோனிமதுரநாயகம் ஆகியோர் மன்றில் பிணை விண்ணப்பம் செய்தனர்.

இரண்டு சந்தேகநபர்களும் ஏழு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக் கெதிராகப் பொலிஸார் தாக்கல் செய்த மேலதிக அறிக்கைகளில் புதிய விடயங்களோ, விசாரணைகளில் முன்னேற்றமோ காணப்படவில்லை. அவ்வாறான நிலையில் சந்தேக நபர்கள் பிணையில் செல்ல பொலிஸார் தொடர்ந்தும் ஆட்சேபனை தெரிவித்து வருகின்றனர். அதனை ஏற்றுக் கொள்ளமுடியாது எனக்கூறி சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்தார்.

அதனைப் பரிசீலித்த நீதிவான் சந்தேக நபர்களைத் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், இரண்டு லட்சம் ரூபா பெறுமதி யான மூன்று ஆள் பிணையிலும் அவர்களில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (த-4)

# விசேட பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம் பெப்.21

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் நேற்றுக் கேரதீவு -சங்குப்பிட்டி பாதையூடாக திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவைகளை நடத்தின.

நாவற்குழி -கேரதீவு பிரதான வீதி பெரும் சேதப்பட்டதால் இந்த வீதியூடான சேவைகள் கடந்த சில நாள்களாகத் தடைப்பட்டிருந்தன .

சிவராத்திரியை முன்னிட்டு இ.போ.ச. விசேட பஸ் சேவைகள் நேற்றுக் கேரதீவு சங்குப்பிட்டி ஊடாக மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு நடத்தப்பட்டதாக யாழ்.சாலை அதிகாரி கூறியுள்ளார்

நேற்றுக் காலை தொடக்கம் திருக்கேதீஸ்வரத்துக்கான விசேட சேவைகள் இடம் பெற்றுள்ளன. (த-17)

# நீர்வேலி மயானத்தில் அடிப்படை வசதியில்லை

யாழ்ப்பாணம்.பெப்.21

நீர்வேலி தெற்கு இந்து மயானம் போதிய அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த மயானத்துக்குச் செல்லும் பாதை பற்றைகள் மற்றும் புற்களால் நிரம்பிக் காணப்படுவதால் சடலங்களை கொண்டு செல்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதனைவிடப் பருத்தித்துறை வீதி அகலிப்பால் மயானதுக்குச் செல்லும் பாதை மிக ஒடுங்கிக் காணப்படுவதால் பெரும் இக்கட்டு நிலை காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

மயானப் பகுதியும் ஒரே பற்றைக் காடாகக் காட்சியளிக்கிறது. அத்துடன் மழை காலங்களில் மயானத்துக்குச் செல்லும் பாதை வெள்ளத்தினால் நிரம்பிக் காணப்படும் எனவும் கூறப்படுகிறது.

மயானத்தின் அடிப்படை வசதிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு வலி கிழக்கு பிரதேச சபை முன்வர வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# வீதிகளில் புழுதிப்படலம்

யாழ்ப்பாணம் .பெப் .21

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளில் ஏற்படும் புழுதி மற்றும் தூசிகளால் பயணிகள் மோசமாகப் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. பருத்தித்துறை வீதி கே.கே.எஸ். வீதி, ஏ-9 பிரதான வீதி என்பனதற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புனரமைப்புப் பணிகளின் போதும் தற்போதய வரட்சியாலும் ஏற்படும் கடும் புழுதி மற்றும் தூசிகளால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்

மோட்டார் சைக்கிள் சைக்கிள் என்பவற்றில் பயணிப்பவர்களின் உடைகள் புழுதியால் அழுக்கடைகின்றன

வீதி புனரமைப்புக்குப் பயன்படுத்தும் செம்மண் காரணமாகவே கூடுதலாகப் புழுதி ஏற்படுகின்றது .

இதன் காரணமாகச் சுவாச நோய்கள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (த-17)

# மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், பெப்21

குடாநாட்டில் மரக்கறி வகைகள் திடீரென வெகுவாகச் சரிவடைந்துள்ளதால் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் ஈடுபடப் பின்னடித்து வருகின்றனர்.

மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பு மற்றும் மரக்கறி விலைகளின் விலைச் சரிவு போன்ற காரணங்களால் விவசாயிகள் தொழில் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் பிரதான சந்தைகளுக்குப் பெரும் தொகையான மரக்கறி வந்து குவிக்கின்றன. இதனால் அவற்றின் விலை இந்த வாரத்தில் மேலும் சரிந்துள்ளது.

திருநெல்வேலி , சுன்னாகம் , மருதனார்மடம் , சாவகச்சேரி, சங்கானை போன்ற பிரதான மரக்கறிச் சந்தைகளில் மரக்கறி வகைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

மண்ணெண்ணெய் 35 ரூபாவால் அதிகரித்தாலும மரக்கறி வகைகளின் விலை இவ்வாறு வீச்சியடைந்ததாலும், தாம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தூர்

**மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பு மற்றும் மரக்கறி விலைகளின் சரிவு போன்றவற்றால் விவசாயிகள் தொழில் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.**

பகுதி விவசாயி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார் .

திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகளின் நேற்றைய விவரம்:

கத்தரிக்காய் கிலோ 20 ரூபா, தக்காளிப்பழம் கிலோ 20 ரூபா, தக்காளிக்காய் கிலோ 10 ரூபா, பீற்றூட் கிலோ 25 ரூபா, வெங்காயப்பூ கிலோ 40 ரூபா, கரட் கிலோ 60 ரூபா, உருளைக்கிழங்கு கிலோ 50ரூபா, பயிற்றங்காய் கிலோ 110 ரூபா, பாகற்காய் கிலோ 60 ரூபா, பூசனிக்காய் கிலோ 30 ரூபா, பச்சை மிளகாய் கிலோ 40 ரூபா, வெங்காயம் கிலோ 50ரூபா, கீரைஒருபிடி 10ரூபா. (த-17)

# திரிபோஷா வந்தது

யாழ்ப்பாணம் பெப்.21

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்துக்குத் திரிபோஷா சத்துணவு பைக்கற்றுகள் எடுத்துவரப் பட்டுள்ளன

கடந்த ஜனவரி மாதத்திற்கான திரிபோஷா பைக்கற்றுகளே இவ்வாறு வந்து சேர்ந்துள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். இந்தத் திரிபோஷா பைக்கற்றுகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊடாக ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப் படவுள்ளன. (த-17)

# அராலிக் கிராம வீதிகளுக்கு மின் கிடைப்பது எப்போது?

யாழ்ப்பாணம்,பெப் 21

அராலிக் கிராமத்தில் உள்ள மக்கள் நடமாட்டம் கூடிய இரு வீதிகளுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சங்கானை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இரு தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டது.

இருந்தும் எமது பின்தங்கிய அராலி கிராமத்தின் இரு வீதிகளுக்கும் மின்சார இணைப்பு வழங்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலைய உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த நூற்றாண்டிலும் நாம் இருளில் வாழ்கின்றோம். ஏனைய அயல்வீதி மக்கள் மின் ஒளியில் இருக்கும் போது நாம் புறக்கணிக்கப் பட்டவர்களாக வாழ்கின்றோம்.

ஜே/163 கிராம அலுவலர் பிரிவில் உள்ள அராலி கிழக்கு அம்மன் வீதிக்கு 200 மீற்றருக்கான மின்கம்பமும், ஏ-எல் மைதான வீதிக்கு 150 மீற்றருக்கான மின் கம்பமும் நடப்பட்டு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிராம அலுவலரும், பொது அமைப்பின் பிரதிநிதிகளாக நாங்களும் இந்தக் கோரிக்கையை விடுத்தோம்

ஆனால் இதுவரை மின் கிடைக்கவில்லை. வலிமேற்கு பிரதேசசபை, பிரதேச செயலகம், மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளர் ஆகியோருக்கும் இந்த விடயம் தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.- என்று கூறினர். (ம)

## தொம்பே பிரதேசத்தில் வர்த்தகர் கொலை

நுவரெலியா,பெப்.21

தொம்பே பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் நேற்று அதிகாலை கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தொம்பே பிரதேசப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வர்த்தகர் வீட்டில் இருந்து அவரது தோட்டப் பகுதிக்குச் செல்லும் வேளையிலேயே கொலை செய்யப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 62 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தொம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கொக்கட்டிச்சோலை புனித பிரதேசமாக பிரகடனம்

**பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

மட்டக்களப்பு,பெப்.21

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொக்கட்டிச் சோலைப் பிரதேசம் புனித பிரதேசமாகப்பிரகடனப்படுத்தப்படுவதாக மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பட்டிப்பளை பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இந்தப் பிரதேசத்தில் தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். (ச)

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

### செல்வராசா எம்.பி. தகவல்



**நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்துகொள்ளாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்துகொள்ளமாட்டா.**

நுவரெலியா,பெப்.21

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு ,வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெல்லாவெளிக் கிராமம் கடந்தகாலப் போரால் தரை மட்டமான கிராமம் என்று எமக்கு மட்டும் அல்ல பல நாடுகளுக்கும் தெரியும். இந்த மக்கள் பல்வேறு துன்பங்களுக்கும் முகம் கொடுத்து 3 தடவைகள் சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்து களுவாஞ்சிக்குடி மற்றும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் வாழ்ந்து வந்தனர். அரசு இவர்களை சிறந்த முறையில் மீள்குடியமர்த்தவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்ளாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து கொள்ளமாட்டா.- என்றார். (ச)



மட்டக்களப்பு மாவட்டத்தின் காங்கேயனோடை பிரதேசத்தில் ஈரான் நாட்டு உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஈரானிய வீட்டுத்திட்டத்தில் குடியிருப்பவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. இந்தநிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கலந்துகொண்டு பயனாளிக்கு உறுதிப்பத்திரம் வழங்குகின்றார்.

## பொலிஸ் அதிகாரம் குறித்து கவலைப்பட வேண்டாம்

### வட மத்திய மாகாண முதலமைச்சர் கூறுகிறார்

நுவரெலியா,பெப்.21

அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே பொலிஸாரின் கடமையாகும். இதனால் பொலிஸ் அதிகாரங்கள் பற்றிக் கவலைப்பட வேண்டிய தேவையில்லை என்று வட மத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்க தெரிவித்தார்.

முதலமைச்சர்களின் 30 ஆவது மாநாடு கண்டி, ரீஜன்ஸி ஹோட்டலில் கடந்த சனிக்கிழமையும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது. இந்தநிகழ்வையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகளைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வது குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்புவதாகச் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இதேவேளை,அனைத்து மாகாண சபைகளும் ஐக்கியத்துடன் மக்கள் நலமேம்பாட்டுத் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் வீதி அபிவிருத்தி ஆகிய துறைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்த மாநாட்டில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று முதலமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை அமைச்சுகளின் மூலமாகவும் மாநாட்டுக்கு சமுகமளித்திருந்த அரச நிறைவேற்று அதிகாரிகள் ஊடாகவும் முன்னெடுப்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அரச கல்விக் கொள்கையின் பிரகாரம் 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் முன்னணிப் பாடசாலைகளின் மேம்பாடு தொடர்பாக அனைத்து மட்டங்களிலும் செயல்படுத்துவது குறித்து இதன்போது தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தோட்டப்புறப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உட்பட பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் முதலமைச்சர்கள் மாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கடல் வளங்களை நல்கும் மீனவர்களைக் கொல்லாதீர்!

மட்டக்களப்பு,பெப்.21

உயிரைப் பணயம் வைத்து கடல் வளத்தை நாட்டுக்கு நல்கும் மீனவரைக் கொல்லாதீர்கள் என்று மட்டக்களப்பு மாவட்ட கடல்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.விவேகானந்தன் தெரிவித்தார். எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சிலாபத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது மீனவர் கொல்லப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீனவர்கள் தமது தேவையின் நிமித்தம் ஜனநாயக நாட்டில் அகிம்சை முறையில் போராடும்போது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லாதீர்கள். சிலாபத்தில் எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து நடைபெற்ற மீனவர் ஆர்ப்பாட்டத்தின் போது அப்பாவி மீனவர் அன்ரனி பெர்னாண்டோ பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதுடன் இதுபோன்ற துன்ப நிகழ்வுகள் இனிமேல் நாட்டில் இடம்பெறாமல் இருக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச)

## பாரம்பரிய பண்பாடுகள் நிறைந்த பூமி திருமலை

திருகோணமலை,பெப்.21

'திருகோணமலை, பண்பாட்டு பாலை வனமல்ல; பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்கள் நிறைந்த பூமி'. இதைத் தங்கள் எழுத்துகளால் புத்திஜீவிகள் நிரூபிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும் என்று திருமலை நகரசபை உறுப்பினர் நந்தகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'திருகோணமலை கலை இலக்கிய வரலாறு' எனும் நூல் அண்மையில் வெளியிடப்பட்ட செய்தி ஆவணப்படுத்தலில் புதிய அத்தியாயத்தை இம்மண்ணில் தொடக்கிவைத்துள்ளது.

ஆவணப்படுத்தல் என்பது தகவல்களையும், ஆவணங்களையும், பொருள்களையும் பாதுகாப்பாகச் சேமித்து மீட்டுக்கொள்ள உதவும் அறிவியல் தொழில்நுட்பமாகும்.

வரலாற்றை, பண்பாட்டு அம்சங்களை நமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல ஆவணப்படுத்தல் அவசியமாகும். திருகோணமலை சமய வரலாறு, தொல்லியல், வரலாற்றுச்சான்றுகள், சகல பௌதீக, மூலவள, நிலப்பரப்பு, கிராமிய பண்பாட்டு அம்சங்கள், கிராமிய மக்களின் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை புத்திஜீவிகள், ஆய்வாளர்கள், சிந்தனையாளர்கள், இம்மண்ணின்மீது பற்றுக்கொண்டோர் ஆகியோர் சகல தளங்களிலும் விஞ்ஞானபூர்வமாக ஆய்வு செய்து ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.- என்றார். (ச)

## தொழிலாளர் தேசிய சங்கத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் இணைவு

நுவரெலியா, பெப். 21

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் தொழிலாளர் தேசிய சங்கத்துடன் இணைந்து கொண்டனர்.

நுவரெலியா பிரதேச சபையின் மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான மலர்வாசகம், கல்யாணகுமார், ரவிச்சந்திரன், அம்பகமுவ பிரதேச சபையின் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உறுப்பினரான டொமினிக் ஆகியோர் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்தனர். ஜனநாயக மக்கள் முன்னணியின் தலவாக்கலை இணைப்பாளர் சுரேசும் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் வட்டகொடை, மடக்கும்பர தோட்டத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் முன்னிலையில் இவர்கள் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டனர் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.(ச)

## சுற்றுலா விசாவில் வர்த்தகம்

### கண்டறிய பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை

அக்கரைப்பற்று, பெப். 21

இந்தியாவிலிருந்து சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வருகைதந்த சில நபர்கள் வியாபாரத்திலும், அறுவடை இயந்திரங்களின் சாரதிகளாகவும் செயலாற்றி வருகின்றனர் என்பதைக் கண்டறிவதில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் தொழிலின் நிமித்தம் செயற்படும் இந்திய சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் இடங்களைக் கண்டறிவதிலும் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். அதிகமான தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அறுவடை காலங்களில் கிழக்கு மாகாணத்தில் முகாமிட்டு வயல் வெளிகளில் தொழிலில் ஈடுபட்டு வருவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## பயிலுநர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

அம்பாறை,பெப்.21

செய்முறைப் பயிற்சிக்காக அரசநிறுவனங்களில்இணைப்புச் செய்யப்படுகின்ற பயிலுநர்களுக்கான கொடுப்பனவு ஒரு நாளைக்கு ரூபா 500 என்ற அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சுற்றுநிருபம் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையின்படி இந்த அதிகரித்த கொடுப்பனவு ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறையில் இருக்கத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்தத்தொகை முன்பு ஒரு நாளைக்கு 300 ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி கந்தசாமி தேவராஜமலர் (மலர்ரீச்சர்)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தேவராஜமலர் (மலர் ரீச்சர்) நேற்று (20.02.2012)திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**சிவன் கோயில் வீதி,**
**சித்தன்கேணி**

*தகவல்:*
*திரு.சீ.கந்தசாமி (கணவர் -ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

### அருட்சகோதரி மேரி விக்ரறின் சுப்பிரமணியம் - தி.கு



யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி விக்ரறின் சுப்பிரமணியம் நேற்று (20.02.2012) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

இவரது பூதவுடல் இன்று (21.02.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:-*
*அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ்*
*மாகாணத்தலைவி*

## வேள்வித் திருமகன் பிரதி வழுங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றைச் சித்தரிக்கும் மாபெரும் தயாரிப்பான திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் நிகழ்வு தவக்காலத்தின் ஆரம்ப நாளான நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறையியல் துறைத் தலைவரான அருட்பணி எஸ்.வீ.பீ.மங்களராஜா அடிகள் கலந்துகொண்டு, ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளையும் ஆசியுரையும் வழங்குவார்.

திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகையில் ஏற்கனவே பங்குகொண்டோரையும், புதிதாகப் பங்குபெற விரும்புவோரையும் பிரதி வழங்கல் நடைபெறும்போது கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் மார்ச் 29, 30, 31, ஏப்ரல் 1 ஆகிய நான்கு தினங்களிலும் மாலை 6.45 மணிக்கு 'வேள்வித் திருமகன்' என்ற திருப்பாடுகளின் காட்சி அரங்கேற்றப்படவுள்ளது.

(ங-0)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.21

எழுத்தாளர் வே.தபேந்திரனின் ''பூத்திடும் பனந்தோப்பு'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் ஆறுதல் இலங்கை நிறுவன இயக்குநர் சு.டிவகலாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகபீடபேராசிரியர் தி. வேல்நம்பி, சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் வி. கணேசராஜா, சென்.சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் மா.ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(288)

## உடைந்த கண்ணாடிக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், பெப்.21

தற்போது உடைந்த கண்ணாடிகள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருவதால் அதற்கான கிராக்கி அதிகரித்துள்ளது.

இதனால் வீதிகளில் அநாதரவாகக் கிடக்கும் மதுபானப் போத்தல்களும் காணாமல் போகின்றன. நாயன்மார்கட்டு, செம்மணி வீதியில் உள்ள வளவு ஒன்றில் வைத்து தனியார் ஒருவர் உடைந்த கண்ணாடித் துண்டுகளை கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### முத்தையா ஞானேஸ்வரி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா ஞானேஸ்வரி அவர்கள் 18.02.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான ஆறுமுகம் - சின்னம்மா தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளை -சின் னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத் தையாவின் அன்பு மனைவியும், மற்றும் மகாலிங்கம் (ஓய்வுபெற்ற வைத் தியசாலை உத்தியோகத்தர்), காலஞ் சென்ற பத்மநாதன் மற்றும் காங்கேசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வராசா மற்றும் தர்மராசா (சுவிஸ்), விமலராஜன் (நோர்வே), சரவணானந்தன் (சுவிஸ்), கலாவதி (நோர்வே), நவநீதன் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்) ஆகியோ ரின் பாசமிகு தாயும், சியாமளாதேவி, வரதலெட்சுமி, விமலாதேவி (ஜேர் மனி), மகேஸ்வரி (சுவிஸ்), பரமேஸ்வரி (நோர்வே), செல்வசுதா (சுவிஸ்), நாகவரலேஸ்வரி (சுவிஸ்), அரசரெத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் தங்கம்மா, காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் கமலாச்சி, காலஞ்சென்ற நாகராசா மற்றும் நாகபூரணம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், விந்துஜா, ஸ்ரீரங்கன் (நோர்வே), ஸ்ரீராகவன் (கனடா), சுதர்சன் (ஜேர்மனி), சதீசன் (ஜேர்மனி), மேனகா (ஜேர்மனி), வினோஜன் (ஜேர்மனி), ரஜீவன் (சுவிஸ்), ஜீவிகா (நோர்வே), அஜிந்தன் (நோர்வே), அனிதா (நோர்வே), அனுஷன் (நோர்வே), ஜெனுஷன் (லண்டன்), சஜிதா (சுவிஸ்), விஜிதன் (நோர்வே), பபிதா (நோர்வே), வினுஜா (நோர்வே), நிதர்ஷிகா (சுவிஸ்), வேணுஷன் (சுவிஸ்), மகிந்தன் (சுவிஸ்), விதுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிந்துஷன் (ஜேர்மனி), மாவின் (ஜேர்மனி), அனுஷா (ஜேர்மனி), அகிலன் (ஜேர்மனி), லெவின் (ஜேர்மனி), மீரா (ஜேர்மனி), அயேஸ் (கனடா), சகானா (கனடா), ரதீஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2012) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு, சல்லி பரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**8ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**தகவல்:**
**மு. மகாலிங்கம் (மகன்)**

## 31ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 25 . 06 . 1967



இறைவன் அடியில்: 22 . 01 . 2012

### அமரர் நடராசா.காசிவேந்தன்

(B.com, M.A, Dip-in-Pds, Dip.in.mgt)
(முகாமைத்துவ பணிப்பாளர் சமுர்த்தி மகாசங்கம் உடுவில்)

கடந்த (22.01.2012) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் நடராசா காசிவேந்தன்** அவர்களது வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.01.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, நாளை (22.02.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இணுவில் சிவகாமி அம்மன் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வங்கியடி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா வேலுப்பிள்ளை 19.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அப்பாக்குட்டி வேலுப்பிள்ளையின் அன்பு துணைவியும் இராசம்மா, ஆறுமுகம், யோகம்மா, சண்முகம் (பிரான்ஸ்), விசாகரத்தினம் (பிரான்ஸ்), தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், செல்வேந்திரன் (ஆஸ்திரேலியா), செல்வரதி (கனடா), சிவேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் கௌசல்யா (ஆஸ்திரேலியா), ஞானேந்திரன் (கனடா), அமிர் தினி (ஆசிரியர், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி) ஆகியோ ரின் அன்பு மாமியும், சாரங்கன், சாருஜா, யாழினி, சங்கவி, தர்மிகா, அனோஜன், நிரோஜன், மலரவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.02.2012) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரி யைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மத்தி,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**அ. வேலுப்பிள்ளை (கணவர்).**

### கந்தையா சுபகிருதன் (நேத்தாஜி)



மில் ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், 569, வளநகர் யோகபுரம் மற்றும் மேற்கு ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுபகிருதன் கடந்த (18.02.2012) சனிக்கிழமை கொலன் டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், மற்றும் றஜனிபிரேமாவின் அன்பு கணவனும், திவ்வியா மற்றும் தினேசின் அன்புத் தந்தையும், தேவிசுதந்திரமீனா (வளநகர்), கிருபாநந்தன் (வளநகர்), முருகவேள் (UK) , மஞ்சுளா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இன்பமலர் (செல்லா), பாலசுப்பிரமணியம் (பாலா), இராஜமோகன் (கோண்டாவில்) ஆகி யோரின் உடன் பிறவாச் சகோதரனும், கிருபாகரன் (சுவிஸ்) மற்றும் தமயந்தி (UK), சிவஞானம் (வளநகர், மற்றும் பகவதி (வளநகர்) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும், கீர்த்தனாவின் (சுவிஸ்) அன்பு மாமனும், சுகித்தின் பெரிய தகப்பனாரும், அஸ்வினின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 25.02.2012 அன்னாரின் இல்லமான WUPPEITAL மேற்கு ஜேர்மனியில் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வளநகர்,**
**யோகபுரம்.**

**தகவல்:**
**தேவிசுதந்திரமீனா**
**கிருபாநந்தன்.**

# சிறையில் கலவரம்; 44 கைதிகள் சாவு



மான்டெரரி,பெப்.21

மெக்ஸிக்கோ சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 44 கைதிகள் கொல்லப்பட்டனர்.

லத்தீன் அமெரிக்க நாடான மெக்சிகோவின் வடக்கு மாகாணமான மான்டெரரி பகுதியில் ஆப்போடாகா என்னும் சிறைச்சாலையில் போதை மருந்துக் கடத்தல், கொலை உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய கைதிகள் உள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இந்தச் சிறையில் இரு கலகக்காரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் கையில் கிடைத்த பயங்கர ஆயுதங்களால் கைதிகள் ஒருவரையொருவர் சரமாரியாகத் தாக்கிக்கொண்டனர். இதில் 38 கைதிகள் கொலையுண்டனர் என அரச செய்தி தொடர்பாளர் ஜோர்ஜ் டொமினி கூறினார்.

அளவுக்கு அதிகமான கைதிகள் இருப்பதே கலவரத்திற்குக் காரணம் என கூறப்படுகிறது. இதனையடுத்துச் சிறையில் இருப்பவர்களை விடுவிக்கக் கோரி கைதிகளின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ந)

# ஈராக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் சாவு

பக்தாத்,பெப்.21

ஈராக்கின் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடந்த கார்க் குண்டுத் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர். 28 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் பாலஸ்டின் நகரில் உள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கட்டடத்தை நோக்கி காரில் வந்த மர்ம நபர் ஒருவர் சோதனை நிலையத் தடுப்பு வேலியை இடித்து தாக்குதல் நடத்தினார்.

இத்தாக்குதலில் கார்க் குண்டு வெடித்தது. இதில் 20 பேர் உயிரிழந்தனர். 28 பேர் காயமடைந்தனர். இத்தாக்குதலுக்கு எந்த அமைப்பு பொறுப்பேற்றுள்ளது என்ற விவரம் தெரியவில்லை. உயிரிழந்தவர்கள், பயிற்சிக்காக வந்த மாணவர்கள் என ஈராக் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று கடந்த ஜனவரி 27ஆம் திகதி மருத்துவமனை மீது நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டனர். அதன்பின் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (ந)

# தண்டவாளத்தில் படுத்தால் நோய்கள் தீரும்



ஜகார்த்தா,பெப்.21

ரயில் தண்டவாளத்தில் மல்லாந்து படுப்பதன் மூலம் பல்வேறு வகையான நோய்களையும் தீர்த்துக்கொள்ள முடியும் என்று இந்தோனேசிய மக்கள் உறுதியாக நம்புகின்றார்கள்.

ரயில் வருகின்ற அதிர்வின் மூலம் நோய்கள் குணமாகின்றதாம்.

ஏராளமான மக்கள் இவ்வாறு நாள்தோறும் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுக்கிறார்கள். இந்தச் சிகிச்சை முறை இந்தோனேசியாவில் புயல் போல் வேகமாகப் பரவி வருகிறது. (ந)

## உறை பனிக்குள் சிக்கியவர் 2 மாதங்களின் பின் உயிருடன் மீட்பு



சுவீடன் நாட்டில் காருடன் உறை பனிக்குள் சிக்கி உயிருக்கு போராடிய நபர் 2 மாதங்களுக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி வடக்கு சுவீடன் பகுதியில் 45 வயதுடைய நபர் ஒருவர் காரில் சென்றார்.

அப்போது பாதை மாறி சென்ற கார் 1 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதிக்குள் சிக்கியது. அங்கு கடும் பனி கொட்டியதால் கார் முழுவதும் பனியால் மூடப்பட்டது. காருக்குள் சிக்கிய அவர் உணவு கூட இல்லாமல், பனிக்கட்டியையும் உருகும் ஐஸ் தண்ணீரையும் பருகியே 2 மாதங்கள் உயிர் பிழைத்துள்ளார்.

இந்நிலையில் தீவிர தேடுதல் வேட்டைக்குப் பின் இவரை மீட்பு படையினர் மீட்டுள்ளனர். (ந)

# தாய்லாந்துக் குண்டுவெடிப்புக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மீட்பு

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நடந்த குண்டுவெடிப்பில், கைதான ஈரானிய நாட்டவர்கள் பயன் படுத்திய மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பாங்கொக்கில், கடந்த வாரம் நடந்த குண்டுவெடிப்பில் தொடர்புடைய ஈரானிய நாட்டவர்கள், மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அவர்கள் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு மோட்டார் சைக்கிளை, பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அந்த மோட்டார் சைக்கிளில், 'செஜீல்' என எழுதப்பட்ட 'ஸ்டிக்கர்' ஒட்டப்பட்டிருந்தது. இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப் பயன்படும் தங்கள் ரொக்கெட்கள் மற்றும் பீரங்கிகளுக்கு 'செஜீல்' என, பலஸ்தீனியர்கள் குறிப்பிடுவர்.

இந்த மோட்டார் சைக்கிளை ஈரானிய நபர்கள் பயன்படுத்தியதாக, தாய்லாந்து பத்திரிகைகள் கூறியுள்ளன. மேலும் , இந்த வாகனம் மூலம் மற்றொரு குண்டுவெடிப்பு நடத்தத் திட்டமிடப்பட்டதா எனப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இக்குண்டுவெடிப்போடு தொடர்புடைய லீலா ரோகனி என்ற ஈரான் பெண்ணையும், மற்றொரு நபரையும், பொலிஸார் தேடி வருகின்றனர்.

# முன்னாள் அதிபரின் மகளுக்கு அமைச்சுப் பதவி



மாலே, பெப்.21

மாலைதீவில் புதிய அதிபர் முகமது வாஹீத் தலைமையிலான அமைச்சரவையில் முன்னாள் அதிபரான மெமூன் கயூமின் மகள் துன்யா மெமூனுக்கு வெளியுறவுத் துறை இணை அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் முக்கிய இலாகாவான வெளியுறவுத் துறைக்கு இன்னும் அமைச்சர் நியமிக்கப்பட வில்லை. இஸ்லாமிய விவ காரத்துறை அமைச்சராக ஷேக் முகமது ஷாகீம் அலி சயீத்தும், வீட்டு வசதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சராக முகமது மியூசும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதவி விலகிய முன்னாள் அதிபர் முகமது நஷீட், விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று குரல் கொடுத்து வருகிறார். இதுபோன்ற நிலையில் புதிய அதிபர் தனது தலைமையிலான அமைச்சரவையை விரிவாக்கம் செய்துள்ளார். மாலைதீவில் புதிய அரசுக்கு எதிராக முகமது நஷீட்டின் ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நாட்டில் அசாதாரண சூழல் நிலவுகிறது.

> **புதிய அதிபர் தனது தலைமையிலான அமைச் சரவையை விரிவாக்கம் செய்துள்ளார்.**

இதனிடையே, மாலைதீவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சியில் கொமன்வெல்த் நாடுகளின் அமைச்சர்கள் குழு ஈடுபட்டுள்ளது. மாலைதீவு புதிய அதிபரை கடந்த சனிக்கிழமை சந்தித்த அக்குழுவினர் விரிவான ஆலோசனை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் போது, மாலைதீவில் அரசியல் குழப்பம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பது குறித்தும், தற்போதைய சூழலுக்கு எவ்வாறு தீர்வு காண்பது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்படுவதற்கான காரணம் குறித்து கொமன்வெல்த் நாடுகள் அமைச்சர்கள் குழு நடத்தும் விசாரணைக்கு தாம் முழு ஒத்துழைப்பு தருவதாக புதிய அதிபர் முகமது வாஹீத் உறுதி அளித்துள்ளதாகவும் அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

# நிதி நெருக்கடி தீர்க்க சீனா - ஜப்பான் நிதியுதவி

பீஜிங்

யூரோ மண்டல பொருளாதார நெருக்கடியில், சர்வதேச நிதியமைப்பு உதவி கோரும் பட்சத்தில், அதற்கு நிதியுதவி அளிக்க சீனாவும், ஜப்பானும் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளன.

சீனத் தலைநகர் பீஜிங்கில், நேற்றுமுன்தினம் சீனத் துணை பிரதமர் வாங் கிஷன் மற்றும் ஜப்பான் நிதியமைச்சர் ஜுன் அஜுமி இருவரும் சந்தித்துப் பேசினர். இதுகுறித்து, கிஷன் கூறியதாவது:

இரு நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பில், நிதி தொடர்பான ஒத்துழைப்பு மிக முக்கியமானது. நிதி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இருதரப்பும், தங்கள் தொடர்புகளையும் கூட்டுறவையும் அதிகப்படுத்தும். இரு நாடுகளும், தங்கள் நிதி சந்தைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, உள்ளூர் நாணயங்களில் முதலீடு மற்றும் வர்த்தகம் செய்வதை குறித்து ஆய்வு செய்யும்.

இந்தாண்டின் இறுதியில், ஜப்பானில் இரு நாடுகளின் உயர்மட்ட அளவிலான பொருளாதார பேச்சு

> **யூரோ மண்டலப் பொருளாதார நெருக்கடி தொடர்பாக, சர்வதேச நிதியமைப் பில் இருந்து சில கோரிக்கைகள் வரலாம் என எதிர்பார்க்கிறோம். வந்தால், இரு நாடுகளும் இணைந்து, அதில் உதவி செய்ய வேண் டும் எனத் தீர்மானித்துள்ளோம்.**

நடக்கும்.இவ்வாறு கிஷன் தெரிவித்தார்.

ஜப்பான் நிதியமைச்சர் அஜுமி தெரிவித்ததாவது;

'யூரோ மண்டலப் பொருளாதார நெருக்கடி தொடர்பாக, சர்வதேச நிதியமைப்பில் இருந்து சில கோரிக்கைகள் வரலாம் என எதிர்பார்க்கிறோம். வந்தால், இரு நாடுகளும் இணைந்து, அதில் உதவி செய்ய வேண்டும் எனத் தீர்மானித்துள்ளோம். அதேநேரம் ஐரோப்பிய நாடுகளும், இதில் இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்- என்றார்.

# காடுகளில் ஏற்படும் தீ விபத்தால் ஆண்டுக்கு 3 லட்சம் பேர் பலி

காடுகள் மற்றும் விலை நிலங்களில் ஏற்படும் தீ விபத்துகளில் சிக்கி வருடத்திற்கு உலகம் முழுவதும் 3.39 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

அறிவியல் முன்னேற்றத்துக்கான அமெரிக்க அமைப்பின் ஆண்டுக் கூட்டம் கனடாவின் வான்கூவரில் நடந்தது.

அதில் தீ விபத்துகள் குறித்த ஆய்வுக் கட்டுரையை ஜோன்ஸ்டன் என்பவர் சமர்ப்பித்தார். அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, காடுகள் மற்றும் விளை நிலங்களில் எதிர்பாராத விதமாக தீ பரவுகிறது. இதனால் ஏற்படும் விபத்துகள் மற்றும் தீயை அணைக்கும் முயற்சியில் தோல்வியடைந்து இறப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 3.39 லட்சமாக உள்ளது.

> **அதில அதிகபட்சமாக ஆபிரிக்காவின் சஹாராவில் 1.57 லட்சம் பேரும், தெற்கு ஆசியாவில் 1.10 லட்சம் பேரும் உயிரிழந்துள்ளனர்.**

அதில் அதிகபட்சமாக ஆபிரிக்காவின் சஹாராவில் 1.57 லட்சம் பேரும், தெற்கு ஆசியாவில் 1.10 லட்சம் பேரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் உலக இறப்பு விகிதத்தில் தீயால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. (ந)




ஸ்பெயினில் புதிதாக நிறைவேற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து, அந்நாட்டு எதிர்கட்சியான கன்சர்வேடிவ் பொபுலர் கட்சியைச் சேர்ந்த மக்கள், தலைநகர் பார்சிலோனாவில் பேரணி நடத்தினர். (ந)

# யுரேனியம் செறிவூட்டலை பலப்படுத்துகிறது ஈரான்

அணுசக்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக இந்த வாரம் சர்வதேச அணுசக்தித் தொடர்பகப் பிரதிநிதிகள் குழு ஒன்று ஈரானுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ள நிலையில் அணு சக்தி நிலையம் ஒன்றில் யுரேனியம் செறிவூட்டலை அதி விரைவாகச் செய்யவல்ல நவீன ரக கருவிகளை நிறுவும் பணியில் ஈரான் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

ஈரானின் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் சந்தேகத்தோடு பார்க்கப்படும் நிலையில் அவை குறித்துக் கடந்த மாதம் இக்குழு ஈரானுக்குச் சென்றிருந்த போது சில அணுசக்தி நிலையங்களை ஆய்வு செய்ய அந்நாட்டு அரசு அனுமதிக்கவில்லை.

**கோம் நகரின் போர்டோ பகுதியில் இயங்கிவரும் யுரேனியம் செறிவூட்டல் நிலையத்தில் நவீன ரகக் கருவிகளை நிறுவும் பணிகள் முழுவீச்சுடன் தொடங்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இம்முறை தடை செய்யப்பட்ட நிலையங்களிலும் இக்குழு ஆய்வு செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யுரேனியம் செறிவூட்டலை மும்மடங்கு தயாரிக்கும் நவீன ரகக் கருவிகள் உட்பட அணுசக்தித் தயாரிப்பில் உள்நாட்டுத் தொழில்நுட்பம் மூலம் பலமடங்கு முன்னேறியிருப்பதாகச் சமீபத்தில் ஈரான் அறிவித்தது.

இதையடுத்துச் சர்வதேச அளவில் ஈரான் மீதான பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தலைநகர் தெஹ்ரானில் இருந்து 156 கி.மீ. தென்மேற்கில் உள்ள கோம் நகரின் போர்டோ பகுதியில் இயங்கிவரும் யுரேனியம் செறிவூட்டல் நிலையத்தில் நவீன ரகக் கருவிகளை நிறுவும் பணிகள் முழுவீச்சுடன் தொடங்கப்பட்டு விட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று முன்தினம் பேசிய இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எகுத் பராக், ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு மத்திய கிழக்கில் ஆயுதப் போட்டியை உருவாக்கும் என்பதால் அந்நாட்டின் மீது சர்வதேச சமூகம் கடும் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

ஈரான் மீதான அமெரிக்கா, மேற்குலக நாடுகளின் நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்திவிட்டதாக ஈரான் எண்ணெய் அமைச்சகம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. (ந)

# பெனாஸீரைக் கொல்ல முஷாரப் சதி செய்தார்





பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸீரைக் கொலை செய்ய முன்னாள் ஜனாதிபதி முஷாரப் இருமுறை சதித் திட்டம் தீட்டியது அம்பலமாகியுள்ளது.

இதுகுறித்துத் தொலைக்காட்சி ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியில், பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் கடந்த 2007ஆம் ஆண்டு நாடு திரும்ப முயன்ற அந்நாட்டு முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோவை கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார்.

இதற்காக நம்பிக்கைக்கு உரிய இரு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தக்ரீக் இ தலிபான் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த பைத்துல்லா மசூத் ஆகியோரின் துணையுடன் இதற்கான சதித்திட்டத்தை தீட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விசாரணை அறிக்கை அந்நாட்டு சிந்து மாகாண சட்டசபையில் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந)

# ஐ.நாவில் வங்க மொழி



வங்க மொழியைப் பேசும் அதிக மக்கள் மற்றும் மொழியின் இலக்கியப் பாரம்பரியம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலக மொழிகளில் ஒன்றாக வங்க மொழியை அங்கீகரிக்க வேண்டுமெனப் பங்களாதேஷ் அதிபர் ஷேக் ஹசீனா விருப்பம் தெரிவித்துள்ளார்.

300 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பேசி வருவதால் வங்க மொழியை ஐ.நாவின் அலுவலக மொழியாக அறிவிக்க வேண்டுமெனக் கடந்த வருடம் ஐ.நா. பொதுக்கூட்டத்தில் ஹசீனா பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது ஆங்கிலம், சீன மொழி, அரபி, ரஷ்ய மொழி, பிரெஞ்ச், ஸ்பானிய மொழி ஆகிய 6 மொழிகள் மட்டுமே ஐ.நாவின் அலுவக மொழிகளாக விளங்கி வருகின்றன.

# பேச்சுக்கு ஆர்வம் காட்டிய தலிபான்கள் கொலை

ஆப்கன் அரசுடன் அமைதிப் பேச்சு நடத்த ஆர்வம் காட்டிய தலிபான்கள் பாகிஸ்தானில் கொல்லப்பட்டனர் எனவும், கைது செய்யப்பட்டனர் எனவும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் முத்தரப்புச் சந்திப்பு நிகழ்ந்தது. இதில் கலந்து கொண்ட ஆப்கான் ஜனாதிபதி ஹர்சாய் பாகிஸ்தான் தரப்பில் முக்கிய அதிகாரிகள், பிரமுகர்களைத் தனித் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

இது குறித்து நேற்றுப் பேட்டியளித்த ஜாமியத் உலேமா இஸ்லாம் (எஸ்) அமைப்பின் தலைவர் மௌலானா சமியுல் ஹக் கூறியதாவது:

ஆப்கான் அரசுடன் அமைதிப் பேச்சு நடத்த விரும்பிய ஆர்வம் கொண்ட தலிபான்கள் சில அதிகார சக்திகளால் பாகிஸ்தானில் வைத்துக் கொல்லப்பட்டனர் எனக் ஹர்சாய் என்னிடம் தெரிவித்துள்ளார்.

இந்த முறை தனது சந்திப்பில் பாகிஸ்தான் தரப்பின் அணுகு முறைகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டைப் பாகிஸ்தான் கைவிட்டால் மட்டுமே, ஆப்கன் அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் பாகிஸ்தானால் உதவ முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## ஹோட்டலில் தீ 37 பேர் காயம்

தாய்லாந்தில் உள்ள புகெட் நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் ஒரு நீச்சல் குளத்தை குளோரின் உள்ள ரசாயன பொருள்கள் மூலம் சுத்தம் செய்த வேளை திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால் புகையுடன் தீப் பற்றி எரிந்தது.

இந்த விபத்தில் 37 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 26 பேர் சுற்றுலா பயணிகள், 11 பேர் ஹோட்டல் ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. காயம் அடைந்த அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.


# இதய அஞ்சலி

**அமரர் கந்தையா ஜெயவீரசிங்கம்**



*(முன்னாள் பிரதம பொறியியலாளர், கிளிநொச்சி)*

எமது இல்லக் குழந்தைகளது நலனில் அக்கறை கொண்டு,
அவர்களுக்காக 15 ஆண்டுகள் ஓடி, ஓடி உழைத்து உதவிய கரங்கள்
சடுதியாக இயற்கை எய்தியது கண்டு சொல்லொணாத் துயர் அடைகின்றோம்.
குழந்தைகளுக்காக உழைத்த
**அமரர் கந்தையா ஜெயவீரசிங்கம்** அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல்ல முகாமைக்குழுவினர்,**
பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(கி/9450) (8-9-19)



# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், மந்துவில்,
புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**சண்முகராசா சந்திரமோகன்**



தோற்றம் 02-01-1980 — பிரிவு 13-02-2010

ஈராண்டு ஈரிருளில் மூழ்கியதே எமது குடும்பம் எனும் தோட்டத்தில் குதூகலித்த அப்பாவே.... உன் அன்பில் நாம் கண்ட கனவுகள் எத்தனையோ அத்தனைக்கும் விடைகாணவோ எம்மை விட்டு வெகு தூரம் சென்றுவிட்டாய் - உன் பிரிவின் துயரில் உன் உருவம் காண்பதற்கு மறு ஜென்மம் எனும் சொல்லைக்கூட மனதார நம்புகின்றோம் நாம்-நீ வருவாயென - உன் விதியை எழுதும் போது இறைவன் உறங்கிவிட்டானே என்னவோ எனினும் மீண்டும் நீண்ட ஆயுளுடன் எம்முடன் மலர்வாய் என்ற நம்பிக்கையுடன் உயிர் வாழ்கின்றோம் இவ்வுலகில்..... சாந்திக்காக வேண்டும்.

கோகுல வீதி, கோண்டாவில்.
0774323260.

கேமா (மனைவி),
குபிதன் (மகன்),
மற்றும் குடும்பத்தினர்.

(12673) (7,10)



# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை கந்தையா

மீசாலை மேற்கு, வங்களா வீதி, மீசாலையைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, வேம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கந்தையா அவர்கள் 19.02.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் பொன்னம்மா தம்பதியரின்அன்பு மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் குணவதனி (கனடா), குணபாலன் (பிரான்ஸ்), குணறாகினி (ஆசிரியர் யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), குணறஜனி (டென்மார்க்), குணதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன் (கனடா), ஜெயபவானி (பிரான்ஸ்), சிவானந்தம் (ஆசிரியர்), தனேந்திரன்(டென்மார்க்), நிறஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை (ஆசிரியர்), சுப்பிரமணியம் (பிரான்ஸ்) காலஞ்சென்ற இராசம்மா ஆச்சிப்பிள்ளை (ஆசிரியர்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசம்மா, நல்லம்மா (பிரான்ஸ்), இராசையா (பிரான்ஸ்), பூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் இந்துஜா,சஞ்சீவன் (கனடா), பரணி, வசீகர், மேனின் (பிரான்ஸ்), பானுஜா, லதுஷா, கலையரசி (யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.மாணவிகள்), தர்சினி (டென்மார்க்), வனஜா,வலன்ரீனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2012) புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

மீசாலை வடக்கு,
வேம்பிராய்,
கொடிகாமம்.

தகவல்:
ந.சிவானந்தம்
(மருமகன்)

# பயங்கரவாதத் தடுப்பு நிலையம் ஒன்பது முதல்வர்கள் கடும் எதிர்ப்பு

**இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, அனைத்து மாநிலங்களிலும் தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்திருந்தது.**

மத்திய அரசின் தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையம் அமைப்பதற்கு நாடு முழுவதும் ஒன்பது மாநில முதல்வர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு, அனைத்து மாநிலங்களிலும் தேசிய பயங்கரவாத தடுப்பு நிலையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்திருந்தது.

இது தொடர்பான அமைச்சரவை ஒப்புதல் பெற்றது. ஆரம்பத்தில் இந்த மையம் அமைப்பதற்கு ஒரிசா முதல்வர் நவீன்பட் நாயக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இவரைத் தொடர்ந்து தமிழ்நாடு, மத்திய பிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநில முதல்வர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தற்போது குஜராத், திரிபுரா, உத்தரக்காண்ட், பஞ்சாப், பீகார் ஆகிய மாநில முதல்வர்கள் உட்பட 9 மாநில முதல்வர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தெரிவித்ததாவது:

கூட்டாட்சி அமைப்பின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் இது - என்றார்.

திரிபுரா முதல்வர் மாணிக் சர்கார் தெரிவித்ததாவது:

மத்திய அரசின் இந்தமுடிவு மத்திய, மாநில அரசுகளிடையே ஒருமித்த கருத்தைச் சிதைப்பதாகும். - என்றார்.

மத்திய அமைச்சர் அம்பிகா சோனி தெரிவித்ததாவது:

இந்த நிலையத்தின்மூலம் பயங்கரவாதத்துக்கு எதிராக அனைவரும் ஒற்றுமையுடன் போராட வேண்டும். இதனை அரசியலாக்க வேண்டாம் என்றும் இந்த நிலையத்தை அமைப்பதன் மூலம் மாநில அரசு விடயங்களில் மத்திய அரசு தலையிடாது என்றும் கூறினார். (வ)

# கின்னஸில் இடம்பிடித்த 48 அடி நீளமான தோசை



மதுரையில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில், 48 அடி நீளத் தோசையை உருவாக்கி கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த சாதனை மூலம், ஏற்கனவே ஆந்திரா மாநிலம் விஜயவாடா ஹோட்டல் அசோசியேசன் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த 38.2 அடி நீளத் தோசை கின்னஸ் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கின்னஸ் சாதனைக்கு முழுமையான ஒத்துழைப்பு அளித்த 20 தோசை மாஸ்டர்கள் மற்றும் மக்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாகச் சாதனை நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் சமையல்கலைஞர் தாமோதரன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சியின் மூலம் கிடைக்கும் பணம், அரசுப் பள்ளிகள் மற்றும் அனாதை இல்லங்களில் படித்து வரும் குழந்தைகளின் கல்விக்காகப் பயன்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## பஸ்-வான் விபத்து; 5 பேர் சாவு



தனியார் பஸ்ஸும் வானும் நேருக்கு நேர் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

திண்டுக்கல் நாகல்நகரைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரர் நடராஜன், அவரது அண்ணன் நாராயணசாமி, மனைவி அருள் ஜோதி, நடராஜனின் மகன் சுரேஷ்குமார் மற்றும் சரவணன் உள்பட 6 பேர் மகா சிவராத்திரியை முன்னிட்டு குலதெய்வ கோவிலில் வழிபாடு நடத்த ஒரு வானில் விருது நகருக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் சாமி தரிசனம் செய்து விட்டு திருச்சுழி புதுப்பட்டியில் உள்ள இன்னொரு கோயிலுக்குச் செல்வதற்காக வந்து கொண்டிருந்தனர். வான் மதுரை-திருமங்கலம் ரிங் வீதியில் வந்து கொண்டு இருந்தது.

அப்போது எதிரே மாட்டுத் தாவணியில் இருந்து விருதுநகர் நோக்கி ஒரு தனியார் பஸ் வேகமாக வந்தது. சம்பக்குளம் பிரிவில் காலை 8.30 மணிக்கு வானும், பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதில் வான் நொருங்கி பஸ்ஸு க்கு அடியில் சிக்கி கொண்டது.

இந்த விபத்தில் வானில் இருந்த நடராஜன், அருள் ஜோதி, நாராயணசாமி, சுரேஷ் குமார் கார் சாரதி உட்பட 5 பேர் சம்பவ இடத் திலேயே உடல் நசுங்கிப் பரிதாபமாக இறந்தனர்.

சரவணன் மட்டும் பலத்த காயம் அடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்.

விபத்துக் குறித்துத் தகவல் அறிந்த மதுரை, திருமங்கலம் தீயணைப்புப் படை வீரர்கள் விரைந்து வந்து உயிருக்குப் போராடிக் கொண்டு இருந்த சரவணனை மீட்டு மதுரை அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் விபத்தில் உயிரிழந்த 5 பேரின் உடல்களையும் சுமார் ஒரு மணி நேரம் போராடித்தீயணைப்புப் வீரர்கள் மீட்டு பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து மதுரை திருநகர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருன்றனர். (வ)

## இத்தாலி மாலுமிகள் கைது

இந்திய மீன்வர்களை சுட்டுக் கொன்ற இத்தாலிய மாலுமிகள் இருவரைக் கேரள பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி கேரளா கடல்பகுதியில் 2 மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அப்பகுதியில் வந்த இத்தாலிய சரக்குக் கப்பல் ஒன்று, மீனவர்களைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்தது.

இதுகுறித்த விசாரணையில் இத்தாலி மாலுமிகள், கடற் கொள்ளையர்கள் என்று நினைத்துச் சுட்டோம் என்று தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இந்தக் கொலையில் தொடர்புடையதாகக் கருதப்படும் இத்தாலியர் இருவரைக் கைது செய்துள்ளனர். அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. (வ)



தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தனது 64 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னையில் நேற்று 64 ஜோடிகளுக்குத் இலவசத் திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருள்களையும் வழங்கினார்.

## சென்னையில் கடும் பனி மூட்டம் போக்குவரத்து பாதிப்பு

**இந்தப் பனி மூட்டம் சென்னை நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் காணப்பட்டதால் மக்கள் அச்சமடைந்தனர்.**

சென்னை, பெப்.21

சென்னை மற்றும் தமிழகத்தின் பல மாவட்டங்களில் நேற்றுக் காலை முதல் கடும் பனிமூட்டம் காணப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்புக்குள்ளானது. வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டது. விமானப் போக்குவரத்திலும் மிகுந்த சிரமம் ஏற்பட்டது.

தமிழகத்தில் தற்போது பனியின் தாக்கம் மிகவும் குறைந்து காணப்படுகிறது. இரவிலும், அதிகாலையிலும் மட்டுமே பனி சற்று அதிகமாக உள்ளது. பகல் நேரங்களில் வெயில் கடுமையாக எறிக்கஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் கடும் பனி மூட்டம் காணப்பட்டது. எதிரில் நிற்பவர்களைக்கூட தெரியாத அளவுக்கு மிக அடர்த்தியாகப் பனிமூட்டம் இருந்தது. இந்தப் பனி மூட்டம் சென்னை நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் காணப்பட்டதால் மக்கள் அச்சமடைந்தனர்.

## நடிகை லட்சுமி மரணம்



சென்னை, பெப்.21

பழம்பெரும் நடிகை எஸ். என். லட்சுமி மரணமானார். 80 வயதான அவர் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், நேற்றுமுன்தினம் நள்ளிரவில் மரணமானார்.

திரையுலகின் நடிப்புத் தாகத்தால் இவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. இவரது உடல் சாலிகிராமத்தில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குகள் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இவரது சொந்தக் கிராமத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

500இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள எஸ். என்.லட்சுமி, பின்னாளில் சிறந்த குணசித்திர நடிகையாகப் பரிணமித்தார். பல திரைப்படங்களில் அம்மா, பாட்டி வேடங்களில் நடித்து தனது சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியவர். குறிப்பாக விருமாண்டி, மகாநதி உள்ளிட்ட படங்களில் அவரது நடிப்பைப் பாராட்டாதவர் இருக்க முடியாது.

திரையுலகில் நலிந்த கலைஞர்களுக்கு உதவும் மனம் கொண்டவர். விழா நேரங்களில் வலியச் சென்று பலருக்கு உதவிகள் புரிந்தவர். (வ)

## தேநீரில் கலப்படம் குழந்தை உட்பட 4 பேர் சாவு

கலப்படத் தேநீர் பருகிய 5 வயது பெண் குழந்தை உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலம் பாரன் மாவட்டத்தில் உள்ள கோயாலா கிராமத்தில், நேற்று முன்தினம் காலை தேநீர் பருகிய 5 பேர் பலியான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டதில், கலப்படத் தேநீரே, உயிர்ப் பலிக்குக் காரணமாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் விஷம் கலந்துள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த 5 பேரில், ஒருவர் 5 வயது பெண்குழந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 5 பேர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## விளையாடிய குழந்தையை கௌவிச்சென்ற சிறுத்தை



உத்தரக்காண்ட் மாநிலத்தில் வீட்டுத் திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்த 4 வயதுக் குழந்தையை சிறுத்தை கௌவிக் கொண்டு சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து குழந்தையை தேடும் பணியில் வனத்துறையின் ஈடுபட்டு வருகின்றனர்.

உத்தரக்காண்ட் மாநிலம் டெஹரி கர்வால் மாவட்டத்தில் பஹாலிங்கானா பகுதியைச் சேர்ந்த ஜோதிர்குமாரி (வயது 4) இவர் சம்பத்தன்று தனது வீட்டுத் திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் கிராமப் பகுதிக்குள் நுழைந்த சிறுத்தை ஜோதிர் குமாரியை, கழுத்துப்பகுதியைப் பிடித்துக் கௌவிச் சென்றது. இதனை பார்த்த அவரது தாய், பாட்டி ஆகியோர் அலறியடித்து கூச்சல் போட்டனர். எனினும் கண்ணிமைக்கும் நேரத்தில் குழந்தையுடன் வனப்பகுதியில் மறைந்தது. தகவலறிந்த வனத் துறையினர் மற்றும் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை வரை குழந்தையைத் தேடினர்.

இந்த நிலையில் வனப் பகுதியில் குழந்தை கிடைத்ததாகவும், அவரது உடல் மீட்கப்பட்டு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# 'செலான் பரிசு மேல் பரிசு'




செலான் வங்கியின் பிரமாண்டமான 'செலான் வங்கி பரிசு மேல் பரிசு' (Seylan Thagi pita Thagi) வெகுமதி வழங்கல் திட்டத்தின் முதல் தொகுதி அதிஷ்டசாலி வெற்றியாளர்கள் 10 பேர், கொள்ளுப்பிட்டியில் உள்ள வங்கியின் தலைமை அலுவலகத்தில் வைத்து தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட, நிறைவேற்றுப் பணிப்பாளர் என். நடராஜா மற்றும் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன ஆகியோரிடமிருந்து தமக்குரிய வெகுமதிகளைப்பெற்றுக்கொண்டனர்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்திருந்த இவர்கள் - நிலந்த தேசப்பிரிய, திருமதி எம்.ஏ. எம்.பெரோ, எம்.எச்.எம். ஹபாஸ், எச்.கே.ஜி. ரூபசிங்க பெரேரா, பிரசாந்த அபேகோன், திருமதி எஸ்.ஏ.என். மல்காந்தி, டாக்டர் அனுஷா விக்ரமாராச்சி, நிலங்க பெர்ணாண்டோ, யூ.ஏ.எச். குமார மற்றும் எம்.ஜே.எம்.ரொஷ்மி ஆகியோராவர்.

ரூபா ஒரு மில்லியன் ரொக்கப் பணத்தைப் பரிசாக வெற்றி கொண்டவரான நிலந்த தேசப்பிரிய தான் வெற்றிபெற்றது குறித்து உணர்ச்சி வசப்பட்டவராகக் காணப்பட்டார். பக்திமிக்க ஒரு பௌத்தரான இவர், தனது மாமியின் கிராமமான கஹட்டகஸ்திகிலியவில் அமைந்துள்ள விகாரையின் புனரமைப்புப் பணிகளுக்கு தான் வழங்கிய பங்களிப்பே இந்த அதிஷ்டத்தைத் தனக்கு கொண்டு வந்துள்ளதாக நம்புகின்றார். ''ஆம், நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தவனாக இருக்கின்றேன். குறித்த பணத்தை செலவு செய்வதற்கான எந்தத் திட்டங்களும் இப்போது என்னிடம் இல்லை. எனவே ரூபா 1 மில்லியன் என்ற அனைத்துப் பணத் தொகையையும், எனது கணக்குக் காணப்படும் செலான் வங்கியின் கல்கிசைக் கிளையில் நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது'' என்று அவர் கூறினார்.

திருமதி எம்.ஏ.எம். பெரேரா 125 இஇ மோட்டார் சைக்கிள் ஒன்றினை வென்றிருந்த போதிலும், அதிஷ்டசாலியான அவரது கணவர் டொனால்ட் மற்றும் அவரது பேரப்பிள்ளையான ரொஷான் ஆகியோரினாலேயே அந்த மோட்மார் சைக்கிள் அதிகளவில் பயன்படுத்தப்படும். ''எமது முழுக் குடும்பமும் செலான் வங்கியுடன் வங்கியியல் நடவடிக்கைகளைப் பேணி வருகின்றது. இவ் வங்கியின் மீது நாம் உயர்ந்த மட்டத்திலான நம்பிக்கையைக் கொண்டிருப்பதுடன், அனைத்து விதமான நெருக்கடி நிலைகள் ஏற்பட்ட காலப்பகுதியிலும் செலான் வங்கியுடன் இணைந்திருந்தோம்.

வங்கியின் கம்பஹா கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் அனைத்துக் காலப் பகுதியிலும் ஆற்றிய உன்னதமான சேவைகளுக்காக அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்'' என்று அவர் குறிப்பிட்டார்.

(த)

# அநுராதபுரத்தில் DIMO கிளை



டீமோ தனது புதிய கிளையை அநுராதபுர நகருக்குச் சமீபமாக உள்ள சம்புத்த்வ ஜயந்தி மாவத்தையில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

கஹனத் பண்டிதகே, விஜித பண்டார, மகேஷ் கருணாரத்ன, கிஹான் பெர்ணான்டோ மற்றும் அநுராத புரக்கிளை முகாமையாளர் ஹேமால் ரத்னாயக்க ஆகியோர் முன்னிலையில் திரு. திருமதி ரஞ்சித் பண்டிதகே ஆகியோர் இந்தப் புதிய கிளையைத் திறந்து வைத்தார்கள். இதன்படி, டாட்டா வர்த்தக வாகனங்கள், டாட்டா பயணிகள் வாகனங்களின் விற்பனை, விற்பனைக்குப் பின்னரான சேவைகள், அசல் உதிரிப்பாகங்களின் விநியோகம் ஆகியவற்றை மேற்கொள்வதற்குப் புதிய கிளை அலுவலகம் தயாராக உள்ளது. இவற்றுடன் 14 திருத்தப் பட்டறைகள், 3 சுத்திகரிப்பு நிலையங்கள், வர்த்தக வாகனங்கள் மற்றும் பயணிகள் வாகனங்களுக்கான 2 தூக்கிகள் ஆகியவை இந்நிலையத்தில் காணப்படுகின்றன. இதற்கு மேலாக நவீன வசதிகளைக்கொண்ட வாடிக் கையாளர் காத்திருப்பு பிரதேசம், வாகனங்கள் திருத்தும் மற்றும் பழுது பார்க்கும் நவீன கருவிகள், சிற்றூண்டி நிலையம், பணியாளர்கள் ஆடை மாற்றும் நிலையம், ஓய்வறை, நீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற வனவும் இந்நிலையத்தில் காணப்படுகின்றன.

பழைய கிளை நிலையம் அமைந்திருந்த இடத்தில் விபத்துக்களுக்கு 'முகம் கொடுத்த அனைத்து டாட்டா வாகனங்களும் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதனால் வர்த்தக வாகனங்களை டீமோ, சியம்பலப்பே நிலையத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவை குறைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக டீமோ டாட்டா, டாட்டா நனோ உள்ளடங்கலாக டாட்டா வாகனங்களின் அதிகரித்த விற்பனையினால் உருவாகும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு இந்த ஏற்பாடு பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்புதிய கிளையில் நாளொன்றுக்கு 70 வரையான வாகனங்கள் சேவைக்குட்படுத்தக் கூடிய வசதி இங்கு காணப்படுகின்றது.

அநுராதபுரத்துடன் யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், அம்பாறை, அக்கரைப்பற்று, குருநாகல், கண்டி, மாத்தறை, தம்புள்ளை, யக்கல, இரத்தின புரி, எம்பிலிப்பிட்டிய, அம்பலங்கொட, ஹட்டன், பதவியா, ஹொரணை போன்ற இடங்களிலும் டீமோ தனது கிளைகள் ஊடாக சேவை வழங்கி வருகின்றது.

# வஸ்கடுவையில் புதிய ஹோட்டல்

Citrus Leisure நிறுவனமானது 93 ஆடம்பர அறைகள் கொண்ட Citrus Hikkaduwa விடுதியை ஆரம்பித்த கையோடு தனது புதிய 150 அறைகள் கொண்ட 5 நட்சத்திர ஹோட்டலுக்கான நிர்மாணப்பணிகளை வஸ்கடுவையில் ஆரம்பித்துள்ளது. இவ்விடுதியானது 2012 இறுதியளவில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்க்ஷமன் யாப்பா அபேவர்த்தனவினால் நடப்பட்டதுடன் இந்நிகழ்வில் விசேட அதிதிகள், Citrus Leisure நிறுவனப் பணிப்பாளர்கள், மற்றும் பல அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

Citrus வஸ்கடுவ கொழும்பில் இருந்து 45 நிமிட தூரத்தில் அழகிய கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. இங்கு பல கடல்சார் அனுபவங்கள் மையப்படுத்தப் பட்டுள்ளன. அத்துடன் கொழும்பின் பரபரப்புச் சூழலில் இருந்து விடுபட்டு அமைதியான இரவு போசனத்தை விரும்புபவர்களுக்கும் இது மிகவும் ஏற்றதாகும். Citrus வஸ்கடுவ பல்வேறு தரப்பட்ட அறைகளுடன் 500 பேருக்கு தங்குமிட வசதி வழங்கும் ஆற்றலில் நிர்மாணிக்கப்படும். இங்கு 24 மணிநேர கோப்பி சொப், BBQ உணவகம், நீச்சல் பார், ஆடம்பர 5000 சதுர Foot spa என்பன அடங்கியுள்ளன.

Citrus Leisure இலங்கை சுற்றுலாத்துறைக்கு வாக்களித்த 600 அறைகள் வசதியின் ஓர் அங்கமே வஸ்கடுவையில் அமைந்துள்ள விடுதி.

எதிர்வரும் ஆண்டுகளினுள் தனது ஆடம்பர அறைகள் 600 இனை ஏற்படுத்துவதை Citrus Leisur இலக்காகக் கொண்டுள்ளது. (த)

# சம்பியன்சிப் போட்டியில் 10 இளம் சாரதிகள்




AMW நிறுவனத்தின் அனுசரணையில் த ஸ்பீட் 2012 சம்பியன்சிப் போட்டி கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பன்னல பந்தயத் திடலில் புதிய 10 சாரதிகளின் பிரசன்னத்துடன் ஆரம்பமாகியது. 2011 இல் ஸ்பீட் ட்ரோம் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ப்ரே கார்டிங் சம்பியன் போட்டியினூடாக இந்த இளம் சாரதிகள் இதில் கலந்து கொண்டனர்;.

மூன்றுபெண்கள் உள்ளிட்ட 26 இளம் சாரதிகள் 2012 ஜனவரியில் கடுமையான பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர். வழிகாட்டிக் குறிப்பு செயன்முறை போன்ற பயிற்சிகளிள் இந்தியாவின் FIA பயிற்சியாளர் அக்பர் இப்ராஹிம்மால் பன்னல பந்தயத் திடலில் வழங்கப்பட்டது. 2012 ஸ்பீட் சம்பியன்சிப் போட்டியில் கலந்து கொண்டு சிறந்த 10 போட்டியாளர்களைத் தெரிவுசெய்யும் சுற்று மக்லேரன்ஸ்; போர்முலா 1300 CC வகையில் நடத்தப்பட்டது. இதில் இப்ராஹிம் ஒரு தெரிவாளராக இருந்தார். சிறந்த 10 போட்டியாளர்களில் தரிந்து கமகே மிகவும் குறைந்த நேரத்தில் சுற்றினை நிறைவு செய்துமுதல் நிலையில் உள்ள அதேவேளை ஏனைய 9 பேரும் நேர வரிசையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்பீட் சம்பியன்சிப் 2012 போட்டியாளர்கள் தேசிய சம்பியன் சிப் 2012 போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். இப்போட்டி இலங்கை வாகன விளையாட்டு அமைப்புக்களால் ஒழுங்கு செய்யப்படும்.புள்ளி அடிப்படையில் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இதே வேளை 2011 ஸ்பீட் சம்பியன்சிப் போட்டியில் சாரதிகள் புதிய மக்லேரன்ஸ்; அல்டோ KIO கிண்ண போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள். இந்தக் கார்கள் அசோசியேட் மோட்டார் வேய்ஸ் நிறுவனத்திடமிருந்து மக்லேரன்ஸ் மற்றும் ஸ்பீட் ட்ரோம் நிறுவனத்தால் விஷேட்மாகக் கொள்வனவு செய்யப்பட்டது. மோட்டர் பந்தயப் போட்டிகளை அடுத்த தரத்திற்கு உயர்த்துவதற்கு AMW ஆர்வம் காட்டி வருகின்றது. அத்துடன் இலங்கையில் அதிகளவில் விற்பனையாகும் சுசுகி மாருதியின் செயற்பாட்டினை வெளிக்காட்டுவதற்குரிய சிறந்த களமாகவும் AMW இதனைப் பயன்படுத்துகின்றது.

# IPM இன் கற்றைநெறிகள் யாழ்.மண்ணில் ஆரம்பம்

மனித வளமுகாமைத்துவ கற்கைநெறிகளை வழங்குவதில் இலங்கையில் முன்னோடியாக திகளும் Institute of Personnel Management (IPM) எதிர்வரும் மார்ச் மாதம் முதல் தனது கற்கை நெறிகளை யாழ். ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு மேலாக அமைந்துள்ள தனது பிராந்திய நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்.கல்வி வரலாற்றில் ஒரு புதய பரிணாமமாக க.பொ.த சாதாரண தரத்துடன் மிகக்குறுகிய காலத்தில் M.B.A. பட்டப்படிப்பை இலங்கை அல்லது இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் பயிலுவதற்கு மாணவர்களை வெவ்வேறு நிலைகளினூடாக தயார்ப்படுத்தும் ஒரு அரிய வாய்ப்பினை IPM அறிமுகப்படுத்துகின்றது.

மேலும் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களும் அவர்களது கல்வித்தகைமை, தொழில் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்குரிய முகாமைத்துவக் கற்கை நெறிகளை தெரிவுசெய்து பயிலவும் IPM நிறுவனத்தால் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

1959ஆம்ஆண்டு ஒரு புத்திஜீவிகளின் குழுவினால் பணியாளர் மேலாண்மை, தொழில்வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனமானது இன்று ஆசிய பிராந்திய மக்களின் மனிதவள முகாமைத்துவ அபிவிருத்தியில் ஒரு மாபெரும் சக்தியாக வளர்ச்சிகண்டு நிற்கிறது. ஆசிய பசுபிக் மனிதவள முகாமைத்துவ கூட்டமைப்பு (Asia Pacific Federation of Human Resource Management) மற்றும் உலக பணியாளர் மேலாண்மை முகாமைத்துவக் கூட்டமைப்பு (World Federation of Personnel Management Associations) ஆகியவற்றின் உறுப்புரிமையைக் கொண்டுள்ள IPM ஆனது தனது வாடிக்கையாளர்களின் உறுப் புரிமை தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது.

30 ஆண்டுகால யுத்த நெருக்கடிகளின் பின் யாழ். சமூகமானது இன்று ஒரு திறந்த சமூகமாக மாறி வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இந்தநிலையில் மனித வள அபிவிருத்தி என்பது தவிர்க்கமுடியாத தேவையாக பரிணமித்து நிற்கின்றது. பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச தனியார் நிறுவனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு தமது முதலீடுகளைச் செய்துவரும் சூழலில் அவர்களது பணியாளர் தேவைகளை உள்ளூரிலேயே பூர்த்தியடையச் செய்யக்கூடிய வகையில் யாழ்.சமூகம் தன்னை அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே பிராந்திய தேசிய மற்றும் சர்வதேச சவால்களை எதிர்கொள்ளத் தயாராகும் எம் சமூகத்துக்கு IPM இன் மனிதவள முகாமைத்துவக் கற்கைநெறிகள் ஒரு ஊன்றுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

(த)

# மகிழ்ச்சி நமக்கு எங்கே இருக்கிறது?

ஒன்றை இழந்துதான் மற்றொன்றைப் பெற வேண்டும். தன்னுடைய இளம்பருவத்தை வறுமையில் கழித்தவர்கள் வசதிக்காக ஏங்குகிறார்கள். எந்தப் பணம் அவர்களைத் துன்பத்திலும், சோதனையிலும் தவிக்க விட்டு வேடிக்கை பார்த்ததோ, அந்தப் பணத்தை திகட்டுமளவு சம்பாதிக்கும் ஆசை அவர்களுக்கு வந்து விடுகிறது. தங்கள் தூக்கத்தை இழந்து, ஓய்வை இழந்து, பல இனிய அனுபவங்களை இழந்து பணத்தைக் குவிக்கிறார்கள்.

எண்ணம் சக்தி வாய்ந்தது. ஆயுதத்தை விட மதிப்பு மிக்கது. எண்ணத்தில் இருந்தே செயலுக்கான தூண்டுதலை நாம் பெறுகிறோம். நல்ல எண்ணங்கள், நல்ல விளைவுகளையும், தீய எண்ணங்கள் தீய விளைவுகளையும் தத்தம் செயலின் வழியே கொண்டிருக்கும். எண்ணமே வாழ்க்கையை வடிவமைக்கிறது.பணத்தின் மீது விருப்பம் இருக்கலாம், ஆசை இருக்கலாம். ஆனால் அதுவே வெறியாகி விடக்கூடாது.



நீங்கள் எதை வேண்டுமானாலும் அடுத்தவர் தலையில் கட்டிவிட முடியும். ஆனால் உங்கள் கவலையை மற்றவர்கள் மீது சுமத்த முடியாது.

மனிதர்கள் இரண்டு வகை. எதற்குமே கவலைப் படாதவர்கள், எடுத்ததற்கெல்லாம் கவலைபடுகிறவர்கள் என இரண்டு வகை. நியாயமான கவலைகள் மனித இயல்பு. நேற்று வரை தொலைந்து போன பணத்துக்காகக் கவலைப்படுவதும், அடுத்து தொலைத்ததை விட பணக்கார உறவினர் மூலமாக அதிகபணம் ஈட்டி விட முடியுமா என்று எதிர்பார்ப்பதும் எப்படி நியாயமான கவலையாகும்?

வாங்கிய கடனை எப்படிக் கொடுப்பது? கொடுத்த கடன் திரும்ப வருமா? பைக்கில் சென்ற கணவன் பத்திரமாக வீடு திரும்புவானா? இப்படி கணக்கில்லாத கவலைகளும் சிலருக்கு எட்டிப்பார்க்கும்.

கவலைகள் காளான்களாய் முளைக்கும். விட்டு வைத்தால் மலையாக மாறி நம்மை மலைக்கச் செய்யும்.

அநாவசியக் கவலைகளுக்கு இடமளிக்க வேண்டாம். அவை உங்கள் கனவுகளின் வண்ணங்களை இழக்கச் செய்யும். கவலை உங்களுடைய ஊக்கத்தை நலியச் செய்து விடும். ஊக்கத்தை இழந்தால் நீங்கள் வெற்றியில் இருந்து வெகுதூரம் விலகி நிற்கும்படியாகி விடும்.

இதைப் புரிந்து கொள்கிறவரை வாழ்க்கையில் உண்மையான எதிர்பார்ப்பு மற்றும் திருப்தி எது என்பதை நாம் உணர முடிவதில்லை.

எமக்கு மகிழ்ச்சி என்பது பொருள்களில் இல்லை. அவற்றைப் பெறுவதில் இருக்கிறது. அதனால் தான் நாம் கடைகடையாக ஏறி, நமக்கு பிடித்தமானதை வாங்குகிறோம். மகிழ்ச்சி எங்கெல்லாம் இருக்கிறது? ஒலிக்கின்ற அருவியில், உலவுகின்ற காற்றில், அழகு பூக்களில், கவலை சிறிதுமில்லாத குழந்தையின் முகத்தில் இப்படி எண்ணற்ற இடங்களில் மகிழ்ச்சி பரவிக் கிடக்கிறது

சவால் என்பது சாதாரணமல்ல ஒரு சவாலை நீங்கள் எதிர்கொள்கிற போது அது உள்ளடக்கிய அநேக பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சவால்கள் வளர்ச்சிக்கு அவசியம். அவற்றை வெல்கிற போது நீங்கள் வளர்ச்சி அடைகிறீர்கள் என்று அர்த்தம்..

நம்முடைய ஆற்றலை உறுதியான முறையில் பயன்படுத்துகிறபோது, நமது வாழ்விலும் அற்புதங்கள் நிகழும்.

நீங்கள் எப்படிச் சிந்திக்கிறீர்கள், எப்படி உணர்கிறீர்கள், நம்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்களுடைய வெற்றி நிர்ணயிக்கபடுகிறது. உங்களுடைய வழக்கமான சிந்திக்கும் முறைதான் வெற்றி அல்லது தோல்விக்கான விதையை உங்கள் மனதில் ஊன்றுகிறது.

வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு, உங்களுக்குள் ஏராளமான திறன்கள் காத்திருக்கின்றன என்றாலும் அதைக் கண்டுகொள்ள வேண்டும், அதை கருத்தாய் வளர்க்க வேண்டும். நம்முடைய திறமையைக் கொண்டு பல உன்னதங்களை நாம் நிகழ்த்த முடியும் என்று நம்புங்கள்.

எதுவுமே இல்லாதிருப்பதை விட ஏதாவது ஒன்றை பெற்றிருப்பது மேலானது என்பார்கள். நம்பிக்கை என்பது விரும்பய விதத்தில் எண்ணமிடுவது அல்ல, ஒன்றைத் திடமாக நம்புவது.

ஒரு எண்ணத்தை, ஒரு திட்டத்தை, ஒரு செயலால் உங்களால் உருவாக்க முடியும். பின்னணியில் வலுவான நம்பிக்கை இருந்தால் எதுவும் சாத்தியம்.

ஒரு விதையளவு நம்பிக்கை இருந்தால் போதும். சிறிய விதைதான். ஆனால் அது விதைக்கப்பட்டு விடுகிறபோது அது செல்வத்தையும், ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவந்து விடுகிறது

**சேவையாளன்.**

# ஆசிரியர்களின் திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுப்போம்

## விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

**மாணவர்களை மையப்படுத்திய கல்விச் செயற்பாடுகளில், ஆசிரியர்களுக்குள்ள பிரச்சினைகள், சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.**

யாழ்ப்பாணம்,பெப்.21

போட்டி நிறைந்த தொழில்நுட்ப உலகுக்கு ஏற்ப மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்குடன் ஆசிரியர்களால் முன்வைக்கப்படும் திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கப் பின்னடிக்க மாட்டோம் என வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனையை நேற்று முன்தினம் யாழ். நகரில் திறந்து வைத்த பின்னர், பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தும்போதே சத்தியசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

ஆசிரியத் தொழில் புனிதமானது, உன்னதமானது. நிர்வாக சேவைக்குள் நுழைவதற்கு முன்னர் 10 வருடங்கள் ஆசிரியர் சேவையில் இருந்த என்னைத் தற்போது ஆசிரியர் எனச் சொல்லிக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

ஆசிரியர்களுக்கான கௌரவம் கிடைக்கவும் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் தூரநோக்குடன் செயற்பட்டு நல்லதொரு சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்தும் உழைக்கவேண்டும்.

மாணவர்களை மையப்படுத்திய கல்விச் செயற்பாடுகளில், ஆசிரியர்களுக்குள்ள பிரச்சினைகள், சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆசிரியர்களின் உயர்கல்வி வாண்மை விருத்திக்காக ஆசிரியர் தொழிற்சங்கங்களினால் வழங்கப்படும் சிபார்சுகளில் அதிக கவனம் செலுத்துவோம்.

ஆசிரியர் நலனில் அக்கறையுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பணிகள் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்- என்றார். (எ-03)

# நியமனம்

தென்மராட்சி .பெப் .21

சாவகச்சேரி நகரசபையில் செயலாளராகக் கடமையாற்றிய கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் கிளிநொச்சிப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் .

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற இவர் கடந்த மாதம் ஜனவரி முதலாம் திகதி கொழும்பில் நடைபெற்ற பயிற்சிவகுப்பில் பங்குபற்றியதன் பின்னர் கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற பிரபாகரன் முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் . (எ- 09)



*சரசாலை வடக்கு நித்தியா மகளிர் ஐக்கிய நாணய சங்கத்தின் 28ஆவது ஆண்டு விழாவில் சங்கத்துக்கும் கிராமத்துக்கும் அபிவிருத்திக்காக சேவையாற்றிய ஆறுபேர் சங்கத்தினால் பொன்னாடை போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பேராசிரியர் ப.சிவனேசன், வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் திருமதி வி.ஸ்ரீகாந்தரூபன், மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், சாவகச்சேரி மக்கள் வங்கி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் ச.ஞானலிங்கம் ஆகியோருடன் சங்கத் தலைவி திருமதி க.ஞானச்சந்திரன், சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய அதிபர் திருமதி ப.தர்மகுலசிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-9)*

# பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கு பௌதீக வளங்கள் உதவும்

## நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவிப்பு

தென்மராட்சி.பெப்.21

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போர்க் காலச் சூழலிலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி சிறப்பாக இயங்கி பல கல்வியாளர்களை உருவாக்கியுள்ளது. தென்மராட்சிப் பிரதேசப் பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் இக் கல்லூரி முன்னிலையில் இருந்தாலும் யாழ். மாவட்ட ரீதியில் உள்ள கல்வி வலயங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின் தங்கிய நிலையில் வன்னிப் பாடசாலைகளின் கல்வித் தரத்தின் அளவுக்குக் காணப்படுகிறது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வண்மைப் போட்டி கடந்த 17 ஆம் திகதி அதிபர் ஆ.கயிலாயப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு அங்குள்ள பௌதீக வளங்கள் அத்தியாவசியமாகின்றன. கல்வி வளர்ச்சியில் அபிவிருத்தியைக் காணவேண்டுமாயின், பௌதீக வளங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். சாவகச்சேரி இந்துக் கல்லூரி கடந்த 30 ஆண்டு காலமாகப் பல்வேறு பாதிப்புகளுக்கு இது உள்ளாகியது அனைவரும் அறிந்த விடயம். ஏ.9 வீதியில் இது அமைந்துள்ளதால் இக் கல்லூரி பல தடவைகள் நலன்புரி நிலையங்களாகவும் இடைத்தங்கல் முகாமாகவும் மாறியதுடன் ஒரு காலத்தில் யாழ். மாவட்ட செயலகமாகவும் இயங்கியுள்ளது. போர் யுத்த காலத்தில் படைத்தளமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு சேதங்களைக் கல்லூரி கண்டுள்ளது.

இக் கல்லூரி பல தரப்பட்ட கல்வியாளர்களைப் பிரசவித்துள்ளது. இன்று யாழ்.மாவட்டத்தில் உயர் பதவிகளில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. குறைந்த பௌதீக வளங்களுடன் சிறந்த கல்வி வழங்கும் கல்லூரியைச் சிறந்த கல்வித் தளமாக உருவாக்குவது இங்கு பயிலும் அனைத்து மாணவர்களின் கைகளில் தங்கியுள்ளது. வளப்பற்றாக்குறை ஒருபுறம் இருப்பினும் எமக்குக் கிடைக்கும் கல்வி வளங்களைப் பயன்படுத்தி நல்லதொரு எதிர்காலத்தை இக் கல்லூரிக்கு ஏற்படுத்திக் கொடுப்பது ஒவ்வொரு மாணவனினதும் தலையாய கடமையாகும். இக்கல்லூரிக்குப் பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுக்க நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னால் முடிந்த வரையில் பாடுபடுவேன்.

இதே போன்று இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களாகப் புகழ் பூத்த நிலையில் உள்ள கல்வியாளர்களும் பாடசாலைச் சமூகமும் தம்மாலியன்ற பங்களிப்பினை மேற்கொள்ள வேண்டும். பாடசாலையின் நிகழ்வுக்குப் நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்தால் நிச்சயம் ஏதும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருக்கிறது.

எனக்கு அது தெரியும்: இந்தக் கல்லூரியின் எதிர்பார்ப்பு மிகவும் அதிகமாகவே உள்ள போதிலும் அவற்றினை முழுமையாக உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க முடியாத போதிலும், ஆயிரம் பாட சாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தில் இக் கல்லூரி அடங்கியுள்ளதால் இதன் பௌதீக வளங்களை விருத்தி செய்யப் பாடுபடுவேன் என்றார். (எ-09)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## வேறுயாருமல்லர் அவரேதான்

ஜெனிவாவில் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகி மார்ச் மாதம் மூன்றாம் வாரம் வரையில் நடக்க உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அரசுக்கு நெருக்கடி இருக்கும் என்ற பரவலான எதிர்ப்புக்கு மத்தியில், அங்கு அத்தகைய சிக்கலை அரசுக்கு ஏற்படுத்துவதற்காகவே உள்நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த சிலரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முயற்சிக்கின்றன என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

கடவத்தையில் சனியன்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து மக்கள் நடத்திய போராட்டங்கள் குறித்தே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் என்பது வெளிப்படையானது.

எரிபொருள் உயர்வை எதிர்த்து மக்கள் ஆர்பாட்டம் செய்வதால் ஜெனிவாவில் ஒருபோதும் அரசுக்கு நெருக்கடி ஏற்படாது. ஜனநாயக ரீதியில் நடைபெறும் அந்த ஆர்ப்பாட்டங்களைக் கொடூரமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் அரசு அடக்க முற்படும்போதே அதற்கு ஜெனிவாவில் நெருக்கடி ஏற்படும்.

இது தெரிந்திருந்தபோதும் அரசு ஆர்ப்பாட்டங்களையும் மக்களின் ஜனநாயக எதிர்ப்பையும் இரும்புக்கரம் கொண்டே நசுக்கி வருகிறது. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம், புத்தளத்தில் 'கிறிஸ் பூதம்' தொடர்பான ஆர்ப்பாட்டம், கடைசியாக எரிபொருள் விலை ஏற்றத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என்று ஜனநாயக ரீதியான மக்கள் போராட்டங்களை இந்த அரசு கொடூரமாக உயிர்ப் பலி வாங்கியே அடக்கியது.

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடர்கள் நாடுகளின் இத்தகைய மனித உரிமை மீறல்களை, சட்ட விரோத செயற்பாடுகளையே எதிர்க்கிறது. அவற்றைச் செய்ய வேண்டாம், உலக நாடுகளுக்கான மனித உரிமைச் சட்டங்களையும் சாசனங்களையும் மதித்து நடவுங்கள் என்றே கேட்கிறது.

எனவே ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற உள்ளூரில் எவரும் சதி செய்ய வேண்டியதில்லை. ஏற்கனவே இலங்கை அரசு செய்துள்ளவையும் இப்போது செய்து கொண்டிருப்பவையும் மட்டுமே போதுமானவை. மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கை அரசு மீறிய மனித உரிமைகளுக்காகவே ஜெனிவாவில் இப்போது அது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து தப்புவதற்கும் நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்குமான வழிவகைகள் மிக இலகுவானவை. மனித உரிமைகளைப் பேணி, ஊடக சுதந்திரத்தை மதித்து, மக்களின் கருத்து மற்றும் ஜனநாயகச் சுதந்திரங்களை அனுமதித்தாலே போதுமானது. எந்த ஒரு இனத்தையும் குறிப்பாகத் தமிழர்களை ஒடுக்காது, அவர்களுக்கு நீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் கொடுப்பதும் ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களை ஏற்றுக்கொண்டு அவற்றுக்குப் பரிகாரம் தேடுவதுமே தற்போதைய நெருக்கடியில் இருந்து மீண்டு விடுவதற்குப் போதுமானது.

இத்தகைய இலகுவான வழிகளை விட்டுவிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை நாட்டின் சிங்கள மக்களுக்கு எதிராகச் சர்வதேசச் சதி வலை ஒன்று பின்னப்படுவதாகவும் அதில் உள்நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சேர்ந்து விட்டார்கள் என்றும் சிங்கள மக்களை நம்ப வைக்க முயற்சிக்கிறார்.

மொத்தத்தில் இலங்கை நாட்டை நெருக்கடிக்குள் தள்ளும் சதியை மஹிந்த ராஜபக்ஷதான் செய்கிறாரே தவிர, வேறு யாருமல்லர்.

# பந்து இப்போது இந்தியாவிடம்

■ *நித்தியபாரதி*

**'தி வீக்எண்ட் லீடர்' என்ற ஆங்கில ஊடகத்தில் வெளியான கட்டுரையின் தமிழ் மொழியாக்கம் இது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடர் அடுத்த வாரம் ஆரம்பமாகிறது. இதில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்ற அமெரிக்கா தலைமையில் மேற்குலகு முயற்சிக்கிறது, இந்திய அரசு இந்த விடயத்தில் தீர்மானத்துக்குச் சாதகமான நிலைப்பாட்டையே எடுக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

மே 2009 இல் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 11 ஆவது கூட்டத் தொடரிலும் இலங்கைக்கு எதிராக 17 நாடுகள் பிரேரணை ஒன்றை முன்வைத்தன. அதனை எதிர்ப்பதில் இந்தியா விடாப்பிடியாக நின்றது. அதனால் அந்தப் பிரேரணை பின்னர் இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணையாக மாற்றப்பட்டது.

இலங்கையின் இறுதிப் போரின் கடைசியில் அரச படைகளாலும், தமிழ் புலிகளாலும் மிக மோசமான மீறல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை 2009 மே பிரேரணையில் சுட்டிக்காட்டி இருந்த 17 நாடுகளும், இடம்பெயர்ந்த மக்களுக்கு உரிய பராமரிப்பு, மனிதாபிமான அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றல், ஊடக சுதந்திரத்தை மதித்தல், பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாப்பாளர்கள் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளல் போன்றவற்றை இலங்கை அரசு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தின.

மனித உரிமைகள் சபையின் 11 ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கை அரசுக்கு ஆதரவாக வாக்களித்திருந்த இந்தியா, "மேற்கு நாடுகள் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, மூன்றாம் உலக நாடுகள் தீவிரவாதத்தை ஒழிக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது எவ்விதத்தில் நியாயமானது?" எனக் கேள்வி எழுப்பி இருந்தது.

இந்தியாவால் இலங்கைக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட இந்தப் பரப்புரை வெற்றியடைந்தது. இதன் மூலம் இலத்தீன் அமெரிக்க நாடுகள், அரபு நாடுகள் போன்றவை இலங்கைக்கு ஆதரவாக தமது வாக்குகளை வழங்கின.

இதன் பின்னர், அந்தக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக இலங்கை அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்தது. விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டியது.

இலங்கைப் படைகள் மேற்கொண்ட மனித உரிமை மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அன்று நிறைவேற்றப்பட்ட பிரேரணையின்போது கருத்தில் எடுக்கப்படவில்லை.

47 நாடுகளைக் கொண்ட மனித உரிமைகள் சபையில் இலங்கையை ஆதரித்து 29 வாக்குகளும் எதிர்த்து 12 வாக்குகளும் வழங்கப்பட்டன. 06 உறுப்பு நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்றிருக்கவில்லை.

பிராந்திய அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டே அப்போது இலங்கைக்கு ஆதரவாக இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தியது. ஆனால் இப்போது நிலைமைகள் அப்படியல்ல.

கடந்த மாதம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கைக்கு பயணம் செய்திருந்தார். பெருந்தொகையான நிதியை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக வழங்குவதற்கான உடன்படிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குகின்ற, இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கையின் ஜனாதிபதி உடன்பட்டுள்ளார் எனவும் அறிவித்தார். இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால், கிருஷ்ணா இலங்கைக்கான தனது "வெற்றிகரமான பயணத்தை" முடித்துக் கொண்டு இந்தியா திரும்பி ஒரு நாள் ஆவதற்குள் 600 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழ் நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதலை மேற்கொண்டது. இந்தத் தாக்குதலில் 200 படகுகள் வரை சேதமடைந்தன. தமிழ் நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கற்களைக் கொண்டு சரமாரியான தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் அறிக்கைகள் தெரிவித்துள்ளன. இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டேயுள்ளன. இதற்கான தீர்வுகள் இன்னமும் எட்டப்படவில்லை.

இலங்கை என்ற மிகச் சிறிய நாடானது, வல்லரசான இந்தியாவை எதிர்த்து நிற்பதானது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கைக் கடற்படையால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை இந்திய அரசு கவனத்தில் எடுக்காததாலேயே, தற்போது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கிருஷ்ணாவிடம் மஹிந்த ராஜபக்ஷவால் எந்தவொரு வாக்குறுதியும் வழங்கப்படவில்லை என வெளிப்படையாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் "இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புதிய பரிந்துரையானது வெளிநாட்டு சக்திகளிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக இருக்கக்கூடாது. அது இலங்கையின் நாடாளுமன்றில் உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்" எனவும் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இது இந்தியாவை வெளிப்படையாக எதிர்க்கின்ற செயல்.

எனவே இலங்கை தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை இந்தியா மீளாய்வு செய்யவேண்டிய காலம் நெருங்கி விட்டது.

இந்த மாதத்தின் இறுதியில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரின்போது இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணையை எதிர்த்து இந்தியா வாக்களிக்குமா? இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பிலான தனது நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக் கொள்ளுமா? பந்து இப்போது புதுடில்லியின் அரங்கிலேயே உள்ளது.

*(நன்றி: புதினப்பலகை)*

# தணியுமா பதற்றம்?

■ *தி.மணி*

உலக நாடுகள் அனைத்தின் கவனமும் இப்போது ஈரான் மீது குவிந்துள்ளது. அணு ஆயுதம் தயாரித்து விட்டதாக ஈரான் சொல்லவில்லை என்றாலும், யுரேனியத்தைச் செறிவூட்டும் திறனை மும்மடங்கு உயர்த்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. இதுதான் உலகின் கவனக் குவிவுக்குக் காரணம்.

ஈரானின் அணு உலைத் திட்டங்கள் எரிசக்தி மற்றும் புற்றுநோயைக் குணப்படுத்தும் அறிவியல் நோக்கங்களைக் கொண்டது என்று அதன் அதிபர் மெஹ்மூத் அகமத் நிஜாத் கூறுகிறார். உலக நாடுகள் அந்த வார்த்தைகளை முழுமையாக நம்பவில்லை. இஸ்ரேலும் அமெரிக்காவும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

இந்தப் பொருளாதாரத் தடை அந்த நாட்டை ஒன்றும் செய்துவிடாது என்று ரஷ்யா கூறுகிறது. இருந்தாலும் கூட, இந்தப் பொருளாதாரத் தடையின் காரணமாக, ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்புத் திட்டம் வெகுவாகத் தாமதப்படும் என்பது ஐரோப்பிய நாடுகளின் எதிர்பார்ப்பு.

சதாம் ஹுசைன் காலத்தில், ஈரான் - ஈராக் போரில் சில லட்சம் உயிர்களையும் பல நூறு கோடி இழப்புகளையும் சந்தித்த ஈரான், தனக்கான போர்த் திறனை மேம்படுத்திக் கொள்வதில் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருவதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஈரான் தனது சொந்த முயற்சியில் பீரங்கிகள், ஏவுகணைகள் என பல போர்க் கருவிகளைத் தயாரித்து வைத்திருக்கிறது. இப்போது அணு ஆயுதத்திலும் தன்னை பலப்படுத்தி, தன்னை ஒரு பலமான சக்தியாக நிறுவிக்கொள்ள முயல்கிறது.

இந்தியாவும்கூட, பொக்ரான் அணுஆயுதச் சோதனையை நிகழ்த்திக் காட்டி, வளர்ந்த நாடுகளின் எரிச்சலுக்கு ஆளானது. அன்றைய தினம், ரஷ்யா ஆதரவாக நின்றது. இந்தியாவுக்கு என்ன நெருக்கடிகள் இருந்தனவோ அதே நெருக்கடிகள் இன்று ஈரானுக்கு இருக்கின்றது என்கின்றன புதுடில்லி வட்டாரங்கள். அதனால்தான் ஈரானுக்கு எதிரான நிலையை இந்தியா மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல, நீண்டகால இந்திய - ஈரான் உறவும் ஒரு காரணம். இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் கச்சாய் எண்ணெயில் 12 விழுக்காடு ஈரானிலிருந்துதான் கிடைக்கிறது என்பது இன்னொரு காரணம்.

ஆனால், இந்தியா அணு ஆயுதம் தயாரித்தபோது தீவிரவாதம் தலையெடுக்கவில்லை *(22ஆம் பக்கம் பார்க்க)*

# “நல்ல விலைக்கு” ஏங்கும் விவசாயிகள்

■ பா.திவாகரன்

கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். ஆனாலும் இங்குள்ள விவசாயிகள் பல்வேறு சிரமங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களில் ஏறத்தாழ எழுபத்தைந்து வீதமானவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். ஏனைய தொழில்களைச் செய்பவர்கள் மிகவும் குறைந்த அளவினராகவே உள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதி விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். இதனால் விவசாய உற்பத்திகளைக் கொண்டு விவசாயிகள் லாபம் ஈட்ட முடியாத நிலையே காணப்படுகிறது.

இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளம், அக்கராயன் குளம், கல்மடுக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், புதுமுறிப்புக் குளம், பிரமந்தனாறுக் குளம், வன்னேரிக் குளம், கனகாம்பிகைக் குளம் ஆகிய எட்டு பெரும் நீர்ப்பாசனக் குளங்களின் கீழும், ஏனைய சிறுகுளங்களின் கீழும் உள்ள நிலங்கள் மற்றும் மானாவாரி நிலங்கள் என சுமார் ஐம்பத்தி ஆறாயிரம் ஏக்கர் (56,000) நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செய்கை பண்ணப்பட்ட நிலப்பரப்பின் அளவைவிட இது அதிகம். ஆனாலும் சரியான சந்தை வாய்ப்பில்லாததால் தமக்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு காலபோகத்திலும், சிறுபோகத்திலும் எதிர்பார்த்த விளைச்சல்கள் இன்மையால் விலை தொடர்பான பிரச்சினை பெரிய அளவில் ஏற்படவில்லை. ஆனால் இந்த முறை விலை குறைந்து போய்விட்டது என்பதே விவசாயிகளின் கவலை.

“போரால் இடம்பெயர்ந்து, அனைத்தையும் இழந்து அகதிகளாக முகாம் வரை சென்ற நாங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியர்ந்தபோது கைகளில் எந்த முதலும் இருக்கவில்லை. கிளிநொச்சியில் உள்ள தனியார் மற்றும் அரச வங்கிகளில் இருந்து ஒரு ஏக்கருக்கு இருபத்தி ஐயாயிரம் (25,000) ரூபா வீதம் கடன் பெற்று எமது காலபோகத்தை விதைத்தோம். சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு விதைப்பு முதல் அறுவடை வரை கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபா வரை செலவாகும். ஆனால் நெல் அறுவடை செய்த பின் தற்போதைய நிலையில் ஒரு முப்பதாயிரம் ரூபாவே கிடைக்கிறது. செலவு இருபதாயிரம், குத்தகைக் காணியாயின் ஏழாயிரம் போகும். ஆக மொத்தத்தில் மூவாயிரம் ரூபாதான் மிச்சமாக வரும். சில வேளைகளில் அதுவும் இல்லை.'' என்று நிலைமையை விளக்கினார் குஞ்சுப் பரந்தனில் 4 ஏக்கர் வயல் காணியை வைத்துள்ள விவசாயி ஒருத்தர்.



நெல்லுக்கு ஒரு நிர்ணய விலை இருந்தால் விவசாயிகளுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும் என்பது அவரது கருத்து.

அத்துடன் செய்கைக்கான சிபாரிசு செய்யப்பட்ட நெல்லினங்களின் விளைச்சலை விற்பனை செய்வதிலும் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

''விவசாய விதை அத்தாட்சிப்படுத்தும் சபையினால் அங்கிகரிக்கப்படாத ‘ஆட்டக்காரி' என்ற நெல்லுக்கு, நல்ல கிராக்கி உள்ளது. கூடிய விலையில் விற்க முடிகிறது. ‘ஆட்டக்காரி' மூடை 1800 ரூபா வரை போகின்றது. ஆனால் பரிந்துரைக்கப்பட்ட பிஜி (BG) - 300 , பிஜி - 303, 406 போன்ற நெல்லினங்கள் மூடை 1,300 முதல் 1,600 ரூபா வரையே போகின்றது'' என்றார் பரந்தனைச் சேர்ந்த விவசாயி.

விளைச்சல் அதிகம் என்று கூறியே நல்லின நெல் ரகங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்றாலும் அவற்றுக்கு நல்ல விலை கிடைக்காதபோது, அதிக விலை கிடைக்கக்கூடிய ரக நெல்லையே இனிவரும் காலங்களில் தாம் நாட நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

கிளிநொச்சியில் தற்போது அறுவடைசெய்கின்ற நெல்லை உடனடியாகவே விற்பனை செய்ய விவசாயிகளும் அவற்றை உடனடியாக வாங்க வர்த்தகர்களும் முயற்சிக்கின்றனர்.

இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்யும் நெல்லை இரண்டு நாள்களுக்குள் பதப்படுத்த அனுப்பத் தவறினால் ஈரத்தன்மையுடைய நெல் பழுதடைந்து அதன் தரம் குன்றிவிடும் என்பதே அதற்கான காரணம். ஆனால், ஒரே நேரத்தில் இப்படி பெருமளவு நெல்லைக் குற்றுவதற்கான ஆலைப் பற்றாக்குறை கிளிநொச்சியில் இருப்பதாக வர்த்தகர்கள் கூறுகிறார்கள். அத்துடன் நெல்மூடைகளை நகர்த்துவதில் போக்குவரத்துச் சிரமங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை முழுமையாக கொள்வனவு செய்து அதனை சரியாக சந்தைப்படுத்தக் கூடிய வசதியோ, பதப்படுத்தக்கூடிய வசதிகளோ இல்லை என்று அரிசி ஆலை முதலாளிகள் கூறுகின்றனர்.

''மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நாங்களும் ஓரளவு கொள்வனவுகளை செய்கின்றோம்'' என்றனர் அவர்கள்.

இந்த விடயங்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரனிடம் கேட்டபோது, நெல்லுக்கான விலை ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

“நிர்ணயிக்கப்பட்ட விலையில் மாற்றம் எதுவும் கொண்டு வரப்படவில்லை. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது. அதற்காகத் திறைசேரியில் இருந்து நிதி பெறப்படுகிறது. அதற்கிடையில் வியாபாரிகள் எழுந்தமானத்தில் பல்வேறு விலைகளில் கொள்வனவு செய்கின்றனர். இதனால். விவசாயிகள் நட்டத்தை எதிர்கொள்கின்றனர் என்பது புரிந்து கொள்ளக்கூடியதே. அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக விற்பனை செய்யாது அதனைப் பதப்படுத்தி நன்கு காயவைத்துக் களஞ்சியப்படுத்தி வைத்துச் சரியான சந்தை வாய்ப்பு கிடைக்கும்போது விற்பதற்கு விவசாயிகள் பழக வேண்டும்'' என்றார் அரச அதிபர்.

''வங்கிகளில் கடன்களை பெற்று விவசாயம் செய்யும் போது குறித்த கால எல்லைக்குள் அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. பின்னர் எப்படி நாங்கள் காத்திருந்து நல்ல விலைக்கு விற்க முடியும்?'' என்று கேட்கிறார்கள் கடன்பட்ட விவசாயிகள்.

அத்துடன் அறுவடை செய்த நெல்லை காயவைத்து, பதப்படுத்தி, களஞ்சியப்படுத்தக்கூடிய வகையில் வீட்டு வசதிகள் பெரும்பாலான விவசாயிகளுக்கு இல்லை என்பதும் அவர்களால் கூடுதல் லாபம் ஈட்ட முடியாமல் போவதற்கான ஒரு காரணம்.

பல இடங்களில், அறுவடை செய்யப்பட்ட நெல் வீட்டு முற்றத்திலும், வயல் நிலங்களிலும் கூரை விரிப்புக்கள் மீதும் பரவப்பட்டுக் காயவிடப்படுகிறது. மழையில் இருந்து பாதுகாக்கவும் இரவு நேரங்களில் பாதுகாக்கவும் படங்குகளையே விவசாயிகள் நம்பி இருக்கின்றனர்

இதனால் பல்வேறு வகையான சேதங்களையும், சிரமங்களையும் விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு, நெல்லை விளைவிப்பதற்கும் பின்னர் அதனை விற்பனை-செய்வதற்கும் ஒவ்வொரு விவசாயியும் ஏதோ ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அரச அதிகாரிகள், வியாபாரிகள், விதைகள் சந்தைப்படுத்தல் சபை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்பன இணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். விவசாயம் மூலம் போதிய வருமானம் கிடைக்காத நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலையே ஏற்படும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

# தியாகராஜ சுவாமிகள் உற்சவத்தின் மேன்மை

■ கலாபூசணம்
வ. செல்லத்துரை

ஸ்ரீ தியாகப் பிரம்மம் என்று அழைக்கப்படும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் தஞ்சை மன்னரான சரபோஜி ஆண்ட காலப் பகுதியில் திருவாரூரில் பிறந்தவர். அந்த ஊரில் வசித்து வந்த இராமப் பிரம்மம் என்பவருக்கும் தாயார் சாந்தை அம்மையாருக்கும் மூன்றாவது புதல்வனாக கி.பி. 1767இல் (-1848) பிறந்தார்.

தந்தையார் வறுமை காரணமாக திருவையாற்றில் குடியேறினார். தியாகராஜர் அங்கிருந்த நாளில் சங்கீதத்திலும் சமஸ்கிருதத்திலும் தேர்ச்சி பெற்றார். நுட்ப புத்தியும் சகல வல்லமையும் பெற்று ஸ்ரீ ராம பிரானில் பக்தியும் கொண்டவராக சீதாராம இலட்சுமண விக்கிரகங்களை வைத்துப் பூசை செய்து வந்தார். அங்கு வாசஞ் செய்த வெங்கடராமையரிடம் சங்கீதம் பயின்று அவரின் நல்லாசிகள் பெற்று சங்கீத சம்பிரதாயங்களையும் இலட்சண கிரந்தங்களையும் கற்றறிந்தார்.

அவரையே ஞானசிரியனாகப் பெற்ற திவ்ய தாராக மந்திரமாகிய ''ஸ்ரீ ராம நாமத்தை 96 கோடி தடவைகள் செபித்து வருவாயாக!'' என்று உபதேசித்தார் தியாகராஜர்.

ஸ்ரீ ராம பிரானின் அருளினால் “ஸ்வரார்வணம்” என்னும் சங்கீத கிரந்தப் புத்தகத்தை ஸ்ரீ நாரதர் நேரில் காட்சி தந்து அவரிடம் கொடுத்தருளினார் என்று கதைகள் உண்டு.

தியாகராஜ சுவாமிகள் சங்கீதத்தில் சிறந்த ஞானம் பெற்று பல தலங்களையும் தரிசித்து அங்குள்ள தெய்வங்கள் பெயரில் அநேக கீர்த்தனங்களைப் பாடினார். விநாயகர், சிவன், அம்மன் பெயர்களிலும் கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இவற்றுள் தாய் ராகங்களிலும் ஜன்யராகங்களான வக்ர, வர்ஜ, ஔடவ ஷாடவ சம்பூர்ண ராகங்களிலும் அபூர்வ ராகங்களிலும் கீர்த்தனைகள் இயற்றியதோடு இவற்றுக்கு மகுடம் வைத்தாற் போல் கனராகங்களில் “பஞ்சரத்தினக் கீர்த்தனை''களையும் இயற்றியருளியுள்ளார்.

ஸ்ரீ தியாகராஜ ஆராதனைக்கு பஞ்சரத்தினங்களே உகந்ததெனக் கருதி இந்தியாவில் பல மாநிலங்களிலும் யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் வருடாந்தம் தியாகராஜர் ஆராதனை விழாவினை நடத்தி வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் வட இலங்கைச் சங்கீத சபையினராலும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட சமூகத்தினராலும் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சென்ற வருடம் கலை கலாசார விழா ''இசைவேள்வி'' என்ற விளம்பரத்தோடு நடத்தப்பட்டது. பல இசைக் கலைஞர்கள் வாத்தியக் கலைஞர்களோடு விழா நடத்தி முடிக்கப்பட்டது. அநேக இரசிகர்கள் வந்திருந்து விழாவினைப் பார்த்துச் சென்றனர். இரசிகர்களில் ஒரு கலாரசிகர் விழாவைப் பார்த்துவிட்டு மனவேதனையோடும் கவலையோடும் வந்து மறுநாள் ‘உதயன்' பத்திரிகைக்கு மிகக் கவலையோடும், விசனத்தோடும் விமர்சித்து எழுதியிருந்தார்.

அரிய பொக்கிஷமான கீர்த்தனைகளை மனனஞ் செய்யாதிருந்துவிட்டு, அன்றைய தினம் கொப்பிகளைக் கைகளில் பிடித்தபடி பாடமாக்குவது போல் தலை நிமிராது இருந்து பாடகர்கள் பாடினர் எனவும், பாடகர்கள் சிறிதும் ஒத்திகை இன்றிப் பாடியதால் குழப்பங்கள் ஏற்பட்டதாகவும், நடுவில் ஒருவர் நந்தி மறைத்தது போல இரண்டு கைகளையும் உயர்த்தி இரசிகர்களை மறைத்திருந்ததாகவும் வர்ணித்து எழுதியிருந்தார்.

முன்பு இளங்கலைஞர் மன்றம் வருடா வருடம் தியாகராஜ சுவாமிகளின் ஆராதனையை நடத்தி வந்தது. பொன். சுந்தரலிங்கம் வெகு சிறப்பாக அதனை நடத்தி இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்றார். சங்கீத வித்துவான் ஒ.கே. கருணாகரன் கொழும்பில் “ஆலாபனா” என்ற மன்றத்தை உருவாக்கி மூர்த்திகள் ஆராதனை விழாக்களை நடத்தி வருகின்றார்.

1968-1969இல் யாழ் நுண்கலைக்கழகத்துக்கு தென்னிந்திய வித்துவானும் இசைப் பேராசிரியருமான அ.கல்யாண கிருஷ்ண பாகவதர் வந்திருந்தார்.

இரண்டு வருடங்களிலும் நானும் அவரிடம் இருந்து பஞ்சரத்தினக் கீர்த்தனைக் கற்றறிந்தேன். அங்குள்ள மாணவர்கள் அனைவருக்கும் வீணை, வாய்ப் பாட்டு சொல்லிக் கொடுத்து, ஒத்திகை பார்த்து ஆராதனை விழாக்களை மிகச் சிறப்பாக நடத்தி வாழ்த்துப் பெற்றார்.

மங்கள வாத்தியமாக உலகப் புகழ்பெற்ற தவில் மேதை. அளவையூர். லயஞான குபேர பூபதி வி.தெட்சணாமூர்த்தி, இணுவையூர் என்.ஆர்.சின்னராசா நாச்சிமார் கோயில் கே. கணேசன் அளவையூர் என். குமரகுரு ஆகியோருடன் நாதஸ்வர கானம் சிறந்தொலிக்க ஆராதனை விழாவினைச் சிறப்பாகச் செய்து இரசிகர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுச் சென்றார்கள்.

இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் ஆராதனை விழாக்களில் கலந்து பாடி வரும் கலைஞர்களில் இசைத் துறையில் உயர் பதவி வகித்து இளைப்பாறியவர்களும் தற்போது இசைத்துறையில் உயர் பதவிகளில் இருப்போரும் பாடிவருகிறார்கள். அவர்களும் நித்திறம்படவே பாடல்களைப் பாடி வருகிறார்கள்.

இவற்றை நாம் இசை இலட்சண வாயிலாக அறிந்திருக்கிறோம். எனினும் ஆராதனை விழாக்களில் ஸ்வரசாகித்தியம் சுத்தமாகப் பாடம் பண்ணி சபையில் சமர்ப்பிப்பது வேண்டியது வேண்டற்பாலது. கீர்த்தனைகளில் வரும் நாமங்கள் இரா நாமங்களே.

# வாஸ்து பெரிசா தர்மம் பெரிசா

ஒரு நண்பர் வீட்டில் கிரஹப் பிரவேசம் .. புதுமனைமப் புகுவிழா.. மனிதர் சும்மா இராமல் அரைகுறை அறிவாளிகள் அத்தனை பேருக்கும் அழைப்பைத் தந்துவிட்டார். வந்தவர்கள் அவரவர் வயிற்றெரிச்சலைக் கொட்டி மனிதரின் அமைதியைக் கெடுத்துவிட்டுப் போய் விட்டார்கள் . நான் போன போது மனிதர் வாடி வதங்கி வற்றலாகிக் கிடந்தார்.

''என்ன நடந்தது ?''என்றேன் . வீடு வாஸ்துப்படி இல்லை என்று நண்பர்கள் பலர் (!) சொல்லி விட்டார்களாம் .பரிகாரத்திற்கு வாஸ்து யந்திரம், மீன்தொட்டி , திருஸ்டி கணபதி என்று ஏகப்பட்ட யோசனைகள் (!) தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஜப்பானிய வாஸ்து, சீன வாஸ்து இப்படி பல வாஸ்து தெரிந்தவர்கள் இங்கிதம் மட்டும் தெரியாமல் - மனிதரை நோகடித்து விட்டுப் போய்விட்டார்கள். மனிதர் நொந்து நூலாகிவிட்டார்.

''சமையல் அறை இங்கே இருக்கக்கூடாது .. படுக்கை அறை அங்கே இருக்கக் கூடாது .. பூசை அறை இங்கே இருக்கக் கூடாது'' என்று சொல்லிவிட்டார்களாம். என்ன அர்த்தம்.. அந்த மனிதர் அந்த வீட்டில் இருக்கக் கூடாது என்பதுதான் அவர்கள் வெளியிட்ட கூட்டுப் பிரகடனம். அடக்கடவுளே .. யார்தான் எந்த விஷயத்தில் கருத்துச் சொல்வது என்கிற விவஸ்தை வேண்டாமோ. முட்டாள்கள் சமூகம்..

வாஸ்து சாஸ்திரம் என்பதே பொய் என்பது என் கட்சி அல்ல.. அது ஒரு கடல் . அதில் எந்த அலையும் தெரியாத அரைகுறைகள் எல்லாம் இன்று ஊரையே பைத்தியம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் .

மனையடி சாஸ்திரத்தில் 16 அடி மிகுந்த செல்வம், 12 அடி செல்வம் குழைந்து போகும் என்று போட்டிருக்கும். இந்த அடி அங்குலம் என்பவை பின்னால் வந்த கணக்கு. எனவே இந்த 16 அடி, 12 அடி என்பதெல்லாம் ஸ்கேல் அடியே அல்ல.. வீட்டு எஜமான் கால் அடி. அவர் காலால் 16 அடி நடக்க அதுதான் மனை அடி சாஸ்திரம் என்று ஒரு வாஸ்து நிபுணர் சொல்கிறார். 16 அடி வைத்து கட்டியவன் கதி என்னாவது? இது உண்மை என்றால் அப்பா தனது காலடியில் 16 அடி பார்த்த வீட்டில் அப்பா இறந்து மகன் எஜமான் ஆனால் வாழமுடியாது. காரணம்,காலடி அளவு மாறிப் போய் விடாதா? என்ற கேள்வி எழும். ஆனால் அப்பா பிள்ளை உடல் வாகு ஒரேமாதிரி இருக்க அதிக வாய்ப்பு உண்டு என்று வாஸ்து பதில் சொல்லும் .

வாஸ்து ஒரு விஞ்ஞானம். அதை நான் மறுக்கவில்லை. அதன் விஞ்ஞானக் கூறுகளை உணருவது அவசியம். ஒரு முக்கியமான விளக்கம்; கேரளாவில் மலையாளத்தில் வாஸ்து நூல் உண்டு. அப்படியே ஆந்திராவில் கர்நாடகத்தில் அந்த அந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஆந்திர வாஸ்துவைத் தமிழ்நாட்டில் செயற்படுத்தக்கூடாது. கேரளவாஸ்து தமிழ்நாட்டுக்குப் பொருந்தாது. சின்னச் சின்ன வேறுபாடுகள் மண்ணின் தட்ப வெப்பம்,நீரோட்டம், கடல் உயரம் காரணமாக ஏற்படும். இவையெல்லாம் உளறுகிற உள்ளூர் வாஸ்துவுக்கு உறைக்கவா போகிறது! தமிழ்நாட்டு வாஸ்து நிபுணர்கள் மேற்கேயிருந்து கிழக்கே தண்ணீர் ஓட்டம் இருக்க வேண்டும் என்பார்கள். ஏன் தெரியுமா? நமது நதிகள் எல்லாம் மேற்கே உற்பத்தியாகி கிழக்கே வங்காள விரிகுடாக் கடலில் கலப்பவை. ஆனால் கேரளாவுக்கு இந்த வாஸ்து செல்லாது. அங்கே நதிகள் கிழக்கே உண்டாகி மேற்கே அரபிக் குடாவில் கலக்கின்றன. அங்கு நீரோட்டம் கீழ் மேல். தமிழ் நாட்டில் மேல் கீழ். அது மாதிரியே மழை, வெயில் கணக்குப் பார்த்து வீடுகட்ட இலக்கணம் வகுத்தனர் முன்னோர். இப்போது எந்தத் தர்ம நியாயமும் இல்லாத அடுக்குமாடிக் குடியிருப்புகள் வந்துவிட்ட பிறகு எதை அளவுகோலாய் வைத்துக் கொண்டு பேச.. எழுத!

பூமி வடகிழக்கில் சற்று சாய்ந்த நிலையில் சுழலுவதால் வடகிழக்கில் பாரம் கூடாது என்பது பொதுவான வாஸ்து. இந்தியாவில் வடக்கு நோக்கிய காந்த ஈர்ப்பு இருப்பதால் பூசையறையில் வடக்கு நோக்கி இருப்பது தியானத்துக்கு நல்லது.இது இந்தியாவுக்குப் பொருந்தும். ரஷ்யாவுக்குப் பொருந்தாது! நம் உள்ளூர் வாஸ்து ரஷ்யா போய் இதையே உளறுவது அசிங்கமாக இல்லையா? வடக்கு ஞானதிசை என்பதால் தெற்கு பார்த்து பீரோ வைத்தால் கொஞ்சம் சில்லறை சேர சான்ஸ் உண்டு. இந்த யோசனை சீனாவுக்குச் செல்லாது!

காற்றோட்டம்,வெப்ப ஓட்டம்,சூரிய உதயம், நீரோட்டம் இவற்றைக் கணக்கிட்டு வீடுகட்டுவது அவசியம். பூமியைத் துண்டாடும் போது சக்தி அலை சரியாகத் துண்டாடப்படுவது அவசியம். எல்லாவற்றையும் விட எண்ணத்தூய்மையுடன், தருமம் சிதறாமல் வாழ்ந்தால் எந்த வீடும் நல்ல வீடுதான்.

பஞ்சபாண்டவருக்கு, வாஸ்து சாஸ்திரம் தோற்றுவித்த மயன் கட்டிக் கொடுத்த மாளிகையில் பாண்டவர்கள் வாழ முடிந்ததா? பதின்மூன்று வருடம் காட்டிலும் மேட்டிலும் பிச்சையல்லவா எடுத்தார்கள்? வாஸ்து அவர்களை வாழவிட்டதா? வாஸ்து சாஸ்திர பகவான் மயனே கட்டினாலும் தருமத்திற்கு விரோதமாகச் சூதாடத் துணிந்ததால் பாண்டவர் தெருவில் நிற்க வேண்டியதாயிற்று. வாஸ்து சாஸ்திரத்தைவிட தர்மசாஸ்திரம் வலிமையானது. வாசலையும் ஜன்னலையும் மாற்றினால் துயரங்கள் தீராது. வாழ்வையும் எண்ணங்களையும் மாற்றுங்கள்! வாஸ்தவமான வாஸ்து அதுதான்!



சுகி.சிவம்

# உபதானிய உற்பத்தியை அறிமுகமாக்கிய சதாவதானி சி.க.கூ.சங்கம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்கம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டவேளை 20 அங்கத்தவர்களே இருந்தனர். ஐந்து ஆண்டுகளில் இந்தச் சங்கம் பெரிதும் வளர்ச்சிகண்டு தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் வேகமாக வீறு நடைபோட ஆரம்பித்தது.

1990-1991ஆம்ஆண்டு காலப்பகுதியில் 220 உறுப்பினர்களாக இருந்த சங்க உறுப்பினர் தொகை 320 உறுப்பினர்களாக உயர்ந்தது. இதே ஆண்டு காலப்பகுதியில் சங்கத்தால் அறிமுகப்படுத்தப் பட்ட உபதானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் 85 பேர் உறுப்பினர்களாக இணைந்து கொண்டனர். உபதானிய உற்பத்தித் திட்டத்தை இந்தச் சங்கத்துக்கு உலக கெயர் நிறுவனமும், சமாசமும் இணைந்து அறிமுகம் செய்து வைத்தன.

இந்தக் காலப் பகுதியில் உறுப்பினர்களின் மாதாந்த சேமமாக ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 743 ரூபா 98 சதமாக இருந்தது. வைப்புத் தொகைக்கு 14 வீதம் வட்டி வழங்கப்பட்டு வந்தது. விசேட சேமமாக 47 ஆயிரத்து 257 ரூபா 11 சதம் வைப்பிலிடப்பட்டிருந்தது. இது தவிர உறுப்பினரல்லாதோரால் விசேட சேமமாக 56 ஆயிரத்து 124 ரூபா 7 சதம் சங்கத்தில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

சங்கத்தின் சேம அதிகரிப்பு சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், போரூட் நிறுவனம் ஆகியவற்றின் சேமிப்புக்கு எதிரான கடன் அதிகரிப்பால், சங்கத்தைச் சேர்ந்தோருக்கு கடன் வழங்கும் தொகையும் இந்த வருடத்தில் மேலும் அதிகரிக்கப்பட்டது.

இதன்படி மூன்று மாதகாலத்தைப் பூர்த்தி செய்த உறுப்பினர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவும், ஆறு மாதகாலத்தைப் பூர்த்தி செய்த உறுப்பினர்களுக்கு மூவாயிரம் ரூபாவும், ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் கடனாக வழங்கப் பட்டது.

அத்துடன் 2 வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 7 ஆயிரம் ரூபாவும், ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 8 ஆயிரம் ரூபாவும், 4 வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 9 ஆயிரம் ரூபாவும், 5 வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், கடனாக வழங்கப்பட்டன. இதே காலப் பகுதியில் விபத்து நிதியாகச் சங்கத்தில் 10 ஆயிரத்து 762 ரூபா இருந்தது. தொடர்ச்சியாக ஒரு வருடம் மரண சகாய நிதியைக் செலுத்தி வந்தோரே மரணச் சகாய நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்ச்சியாக மூன்று மாதகாலம் மரண சகாய நிதியைச் செலுத்தாத உறுப்பினர்கள் இந்த நிதியிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தால் நவராத்திரி விழாவை ஒட்டி இந்த ஆண்டில் மாணவர்களிடையே சைவசமய அறிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அனுசரணையாளர்களால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இதே ஆண்டு காலப்பகுதியில், முதலாம் தரம் தொடக்கம் 7 ஆம் தரம் வரை மாணவர்களுக்குப் பிரத்தியேகக் கல்வியை வழங்கும் பொருட்டு சதாவதானி கதிரைவேற்பிள்ளை கல்வி நிலையம் என்ற பெயரில் ஒரு கல்வி நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. இந்தக் கல்வி நிலையத்தில் கல்வி பயின்று தவணைப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்த மாணவர்களுக்குப் போரூட் நிறுவனம் பரிசில்களை வழங்கி ஊக்குவித்து வந்தது.

**கர்ணன்**

அகில உலக கெயர் நிறுவனம் யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக இந்தச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களான விவசாயிகளுக்கு, உதவும் பொருட்டு தானியவகைகள், உரம், மண்ணெண்ணெய் ஆகியவற்றை இலகுவான கடன் அடிப்படையில் வழங்கியது. விவசாயிகள் தோட்டங்களுக்கு நீரிறைக்க வசதியாக நான்கு நீரிறைக்கும் இயந்திரங்களும் சங்கத்துக்கு வழங்கப்பட்டு அவை விவசாயிகளால் பயன் படுத்தப்பட்டு வந்தன.

இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்கள் தொகை அதிகரித்ததைத் தொடர்ந்து சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டங்கள் 1990 ஆம் ஆண்டு முதல் சங்கத்துக்கு அருகில் உள்ள தம்பசிட்டி மெ.மி. த.க.பாடசாலையில் நடத்தப்பட்டு வந்தன.

1993 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சங்கத்தின் 6 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் புதிய அங்கத்தவர்களை இணைப்பது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சங்கத்திலிருந்து விலகிய அங்கத்தவர்களுக்குப் பதிலாக ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு, விலகிய அங்கத்தவர்களின் பின் உரித்தாளிகள் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக்காலப் பகுதியில் 14 அங்கத்தவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் விபத்து நிதி சங்கத்தினால் வழங்கப்பட்டதுடன், விவசாயிகளாக உள்ள அங்கத்தவர்கள் சிலருக்கு போரூட் நிறுவனம் மூலம் மண்வெட்டிகள், கிருமி நாசினிகள், உரம், நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பன நியாய விலைக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

விபத்து நிதித் திட்டத்தில் பெண் அங்கத்தவர்களுக்கு முதல் பிரசவத்துக்கு மகப் பேற்று நிதி வழங்குவது போல, ஆண் அங்கத்தவரின் மனைவிக்கும் முதல் பிரசவத்துக்கு மகப்பேற்று நிதி வழங்குவதென இக் காலத்தில் தீர்மானிக்கப் பட்டதுடன் நிரந்தர சேமிப்பை மேற்கொண்டுள்ள ஒருவருக்கு அவர் வைப்புச் செய்துள்ள தொகைக்கு எதிராக வைப்புத் தொகையின் 90 வீதம் எதுவித பிணையுமின்றிக் கடனாக வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

குறுகிய காலத்தில் வளர்ச்சி கண்ட இந்தச் சங்கம் கிராமிய மக்களுக்கு அளப்பரிய பல்நோக்குச் சேவைகளை வழங்கி, அவர்களை வாழ்வாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்து வரும் காலகட்டத்தில் சங்கத்துக்கான பணிமனை, பாலர் பாடசாலை, கலை, கலாசார நிகழ்வுகளை நடத்தக் கூடியதான மண்டபம் என்பனவற்றைக் கொண்டதாக சங்கத்துக்கென காணி ஒன்றைக் கொள்வனவு செய்து அதனைக் கட்ட வேண்டும் என்று சங்கத்தின் நான்காம் ஆண்டு பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, காணி கட்டட நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கென குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(தொடரும்)

**சங்கத்தால் நவராத் திரி விழாவை ஒட்டி இந்த ஆண்டில் மாணவர்களிடையே சைவசமய அறிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அனுசரணையாளர் களால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.**

# மண்ணெண்ணெய் மானியம் மக்களுக்குப் பயனளிக்காது

கொழும்பு,பெப்.21

இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடத்தப்பட்ட நிலையில் முக்கிய தொழில் துறைகளுக்கு மானியம் வழங்குவதாக அரசு தெரிவித்துள்ளது.

200 ரூபா மண்ணெண்ணெய் மானியம் மலையக மக்களுக்குப் பயனளிக்காது என்று தொழிற்சங்கத் தலைவர் கே.வேலாயுதம் குற்றம் சுமத்தியுள்ளார்.

**அதிகரித்த எரிபொருள் விலைகளுடன் ஒப்பிடும்போது இந்த மானியங்கள் தமக்கு ஒருவகையிலும் உதவப்போவதில்லை என்று தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.**

பஸ் போக்குவரத்துத் துறையினருக்கும் மீனவர்களுக்கும் எரிபொருள் மானியங்களை வழங்குவதாக அறிவித்த அரசு, சுமார் ஐந்து லட்சம் கிராமப்புற குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய்க்கான மானியம் வழங்கவுள்ளதாக நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

ஆனால் அதிகரித்த எரிபொருள் விலைகளுடன் ஒப்பிடும்போது இந்த மானியங்கள் தமக்கு ஒருவகையிலும் உதவப்போவதில்லை என்று தொழிற்சங்கங்கள் விமர்சிக்கின்றன.

இலங்கையில் மண்ணெண்ணெய் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை மலையக பெருந்தோட்டப் புற மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்று கூறிய சில தொழிற்சங்கங்கள் அண்மையில் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

## தண்டனை வழங்க சர்வதேசத்தால் முடியாது

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு,பெப்.21

இலங்கை இராணுவத்துக்கு தண்டனை வழங்க எந்தவொரு சர்வதேச சக்தியாலும் இயலாது. நாட்டுக்கு எதிரான தீர்மானங்களுக்கு தலைமை தாங்கும் அமெரிக்காவுக்கு எதிராக அனைத்து இன மக்களும் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாலைதீவின் சூழலை இலங்கையிலும் நடத்திவிடலாம் என்று நினைப்பது மேற்குலக நாடுகளின் பகல் கனவாகும். வலய நாடுகள் எதிர்கொள்கின்ற ஆபத்துகளுக்கு ஆசியநாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகச் செயற்படுவது இது முதற்தடவையல்ல.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை இராணுவத்தை சர்வதேச விசாரணைகளுக்குள் உட்படுத்த இடமளிக்கப் போவதில்லை.

ஆசிய வலயத்தின் மீது குறிவைத்த மேற்குலக நாடுகள் காய் நகர்த்தி வருகின்றன. ஆசிய வலய நாடுகளின் பொருளாதாரத்தை சீரழிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

நாட்டைப் பாதுகாப்பது அனைத்து மக்களினதும் பொறுப்பாகும். அரசுக்கு எதிரான போராட்டங்களை விட அமெரிக்க தூதரகம் முன்பதாகவே கூடுதலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசையும் இராணுவத்தையும் பாதுகாக்க வேண்டியது இந்த நாட்டு அனைத்து இன மக்களினதும் கடமையாகும். இதற்காக ஓரணியில் திரள வேண்டும்- என்றார். (ச)

## எரிபொருள் மானியம் வேண்டாம்

கொழும்பு,பெப்.21

அரசு அறிவித்துள்ள எரிபொருள் நிவாரணம் தமக்கு வேண்டாம் என்று மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரசிடம் தெரிவித்துள்ளனர்.

விலை அதிகரிப்புக்கு முன்னர் விற்பனை செய்த பழைய விலைக்கே எரிபொருள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு, தம்மிட்ட கார்தினல் குரே நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அரசிடம் இதனை வற்புறுத்திக் கூறியுள்ளனர்.

இந்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் நாளை புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமது முடிவை தெரிவிப்பதற்கு இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது சாதகமான பதில் கிடைக்காவிட்டால், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று ஐக்கிய மீனவர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.



கடவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை திறந்து வைத்தார். இந்த நிகழ்வுகளில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## அரசியல் கட்சிகள் இணைந்து விரைவில் புதிய இயக்கம்

### ஐ.தே.க. பிரதித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,பெப்.21

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு அரசியல் கட்சிகள் விரைவில் இயக்கமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டதை அவர் கண்டித்துள்ளார்.

ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அரசியலமைப்பில் மக்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமையானது அரசின் இந்த நடவடிக்கையினால் மீறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மீனவர்கள் புறக்கணிப்பு

கொழும்பு,பெப்.21

எரிபொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து சிலாபம் மீனவர்கள் தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகளைப் புறக்கணித்து வருகின்றனர்.

எரிபொருள்களுக்கான விலை ஏற்றத்தை கண்டித்து சிலாபம் மக்கள் கடந்தவாரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது மாலுமி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது இறுதிக் கிரியைகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. அவரது இறுதி ஊர்வலத்தின் போது ஆர்ப்பாட்டங்கள் எவையும் மேற்கொள்ளக் கூடாது என சிலாபம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த நிலையிலேயே மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளைப் புறக்கணித்து வருகின்றனர். (ச)

## அடுத்தவாரம் முதல் ஆராய விசேட குழு

**நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யாது அதிக விலைகளில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்**

கொழும்பு,பெப்.21

அத்தியாவசியப் பொருள்களை நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு ஏற்ப விற்பனை செய்யாது மேலதிக விலைக்கு விற்பனை செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் கூட்டி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார். உரிய விலையில் விற்பனை செய்யாது அதிக விலைகளில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். இதுதொடர்பில் தேடுதல் நடவடிக்கைகளை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

## நெல் கடத்தும் முயற்சி முறியடிப்பு

பொலநறுவை, தியபெதும நெல் களஞ்சியத்திலிருந்து 25 மெற்றிக்தொன் நெல்லைக் கடத்த நெல் சந்தைப்படுத்தும் சபை அதிகாரி ஒருவர் மேற்கொண்ட முயற்சியை வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முறியடித்துள்ளார்.

தனக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததைத் தொடர்ந்து அப்பகுதிப் பொலிஸாருக்கு அறிவித்தவுடன் அவர்களும் நன்கு செயற்பட்டு இந்த லொறிகளை மடக்கியதாக அவர் குறிப்பிட்டார். (ச)

## இரத்தினக்கல் கண்டெடுக்கப்பட்ட பகுதிக்குள் மக்கள் நுழைய முடியாது

### வீதியை மூட உத்தரவு

கொழும்பு,பெப்.21

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் இரத்தினக்கற்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களைப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இரத்தினக்கற்கள் தேடுவதற்காக மக்கள் திரண்டதையடுத்து கதிர்காமம்-லுனுகம்வெஹர வீதியை நாளை வரை மூடிவைக்குமாறும் அப்பகுதிக்குள் வாகனங்களையோ, மக்களையோ செல்ல அனுமதிக்க வேண்டாம். இந்தப் பகுதி குடியிருப்பாளர்களை மாத்திரம் அனுமதிக்குமாறும் மாவட்ட நீதிபதி சஞ்சீவ ரம்யகுமார உத்தரவிட்டுள்ளார்.

இரத்தினக்கற்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டத்துக்குள் அனைத்து நிர்மாண மற்றும் அகழ்வுப் பணிகளையும் இடைநிறுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வீதி நிர்மாணப் பணிக்காக தோண்டப்பட்ட மண்ணிலிருந்து பிரதேசவாசியொருவர் இரத்தினக்கல்லொன்றைக் கண்டுபிடித்தார். அதையடுத்துப் பெரும் எண்ணிக்கையான மக்கள் அங்கு செல்லத் தொடங்கினர்.

வீதி நிர்மாணத்துக்காக கொண்டுவரப்பட்ட மண்ணை இரத்தினக்கற்கள் தேடுவதற்காக மக்கள் அகற்றத் தொடங்கிய நிலையில் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டியேற்பட்டதாகக் கதிர்காமம்பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.எச்.ரி. பண்டார தெரிவித்தார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினர் அப்பகுதி காணிகளை மதிப்பீடு செய்யும்வரை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்களைக் கதிர்காமம் பொலிஸ் பொறுப்பதிகாரி கோரியுள்ளார். (ச)

## பொலிஸாரே இப்படியென்றால் மக்களை எப்படித் தண்டிப்பர்?

கொழும்பு,பெப்.21

ஹசலக்க பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 24 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பிரத்தியேக மோட்டார் சைக்கிள்களுக்குச் செல்லுபடியான அனுமதிப்பத்திரம், வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவற்றை வைத்திருக்காததால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கண்டி பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.என்.பி. அம்பன்வெலவின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்களில் உதவி இன்ஸ்பெக்டர்கள், சார்ஜன்ட்டுகள், கான்ஸ்டபிள்கள் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். (ச)


fems தங்க மில்லியன்
மில்லியனுக்கும் அதிக பெறுமதியான தங்க ஆபரணங்கள்
வாரத்துக்கு 3 தங்கச் சங்கிலிகள்
இறுதிக் குலுக்கலில்
ரூ.250,000 பெறுமதியான தங்க ஆபரணம்
ஆறுதல் பரிசுகள்
10 தங்கப் பெண்டன்கள்
போட்டி விதிகள் மற்றும் நிபந்தனைகள்
• பரிசுக்கு பதிலாக பணம் அல்லது வேறு பரிசு வழங்கப்பட மாட்டாது.
• பரிசின் வடிவம் இருப்புக்கமைய வேறுபடலாம்.
• வழங்கப்படும் பரிசுகள் தொடர்பாக எவ்வித பொறுப்பையும் ஹேமாஸ் நிறுவனம் ஏற்காது.
• ஹேமாஸ் மெனு∴பெக்சரிங்(பிரைவேட்) லிமிட்ட் மற்றும் ∴பீனிக்ஸ் நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் பங்குபற்ற முடியாது.
• இப் போட்டியில் ஒருவர் எத்தனை தடவைகளும் பங்குபற்ற முடிவதுடன் அது தொடர்பான விண்ணப்பங்கள் அனைத்தும் தனித்தனியாக அனுப்பப்பட வேண்டும்.
• போட்டி தொடர்பாக நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
PHOENIX O&M WP/GT/3435
விங்ஸ் உடனான ∴பெம்ஸ் நப்கின்கள் 10 அடங்கிய மேலுறை ஒன்றை அல்லது 5 அடங்கிய மேலுறைகள் இரண்டினை இன்றே இம் முகவரிக்கு அனுப்புங்கள்.
∴பெம்ஸ் தங்க மில்லியன் - த.பெ. 793, கொழும்பு.
2012 பெப்ரவரி 24 வரை மட்டுமே
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
புதிய fems
உடலுக்கும் உள்ளத்திற்கும் சௌகரியம் தரும்




யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும். ஏனைய மூன்று மாவட்டங்களிலும் வானம் தெளிவான இருக்கும்.

# மீள்குடியமர விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்

யாழ்ப்பாணம், பெப்.21

வலி.தெற்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு செய்யப்படாத குடும்பங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக மீள் குடியமர்வு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

வலி.தெற்கு உயர்பாதுகாப்பு வலயத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசித்து வருவோர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர விரும்புபவர்கள் மீள் குடியமர்வுக்கான பதிவுகள் தற்போது இடம்பெற்று வருவதால் அதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மையில் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு (ஜே/208), குப்பிளான் வடக்கு (ஜே/211) ஆகிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களும், மீள் குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்படாத குப்பிளான் வடக்கு (ஜே/211) கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்குமான பதிவு நடவடிக்கைகள் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்று வருகின்றன. (ந-14)

**குடியமர்வுக்கான பதிவுகள் தற்போது இடம்பெற்று வருவதால் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர விரும்புபவர்கள் மீள் அதற்கான பதிவுகளை மேற்கொள்ளலாம்.**

# புலம்பெயர்ந்த சிறுவர்கள் பிரிட்டனில் சிறைவைப்பு

தங்கள் சொந்த நாடுகளை விட்டுப் புலம்பெயர்ந்து பிரிட்டனுக்கு வந்த 40 குழந்தைகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்யுமாறு கோரிக்கை எழுந்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்தோரைச் சிறை வைப்பது இதுவே முதல்முறை என்றும், சிறையில் இருக்கும் இந்தச் சிறுவர்கள் ஆப்கானிஸ்தான், ஈரான், இலங்கை, நைஜீரியா, எரித்திரியா, உகண்டா, சோமாலியா மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரபல ஆங்கில பத்திரிகையான 'கார்டியன்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து பிரிட்டனின் எல்லைப் பாதுகாப்புச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது, உள்ளூர் அதிகாரிகள் இவர்களை 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று உறுதி செய்த பின் சிறையில் வைக்கப்படுவார்கள் என்றும், இவர்களின் நலன் குறித்து அரசு மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். வயதுக் கணிப்பு சமூகநலப் பணியாளர்களைக் கொண்டு நடத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

அகதிகள் குழுவின் தலைமை நிர்வாகியான டோனா கோவி, இரண்டாண்டுகளுக்கு முன்பே சிறுவர்களை இனிச் சிறை வைப்பதில்லை என்று அரசு முடிவெடுத்தது. ஏனெனில் தமது நாடுகளில் அதிக துன்பத்துக்குள்ளாகிய சிறுவர், சிறுமியரை மீண்டும் இங்கு சிறை வைப்பது ஏற்க முடியாதது -என்றார்.

மேலும் இது போன்ற சிறை வைப்பு இந்தச் சிறுவர்களின் மன நலத்தையும், உடல் நலத்தையும் பெரிதும் பாதிக்கும். எனவே இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ந)

# நெடுந்தீவு–குறிகாட்டுவான் படகுக் கட்டணம்

யாழ்ப்பாணம், பெப்.21

நெடுந்தீவு-குறிகாட்டுவானுக்கான படகுச் சேவைக் கட்டணம் கடந்த 16 ஆம்திகதி முதல் 60 ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து படகு உரிமையாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்குச் செல்லும் ஒருவருக்கு ஒருவழிக்கு 60 ரூபாவும், 50 கிலோ கிராம் பொருள்களை ஒரு வழியாகக் கொண்டு செல்வதற்கு 60 ரூபாவும், தனியார் வாடகைக்கு அமர்த்திச் செல்வதற்கு ஒருதடவைக்கு 8ஆயிரம் ரூபாவும் என கட்டணங்கள் அறவிடப்படும் என நெடுந்தீவுப் பிரதேச செயலர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

(ந-14)

# முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், பெப்.21

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரம் புதிய குடியிருப்புப் பகுதியில் இரண்டு மாடிகளைக் கொண்ட முன்பள்ளிக் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டி புதிய குடியிருப்புப் பகுதியில் அண்மைக் காலமாகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கமையப் புதிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த மழலைகளின் கற்றல் தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின்உதவியுடன் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப கட்டப் பணிகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய குடியிருப்புத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளில் ஒன்றாகக் கடந்த மாதம் மின்சார இணைப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மீள்குடியமர்வின் பின்னர் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த அபிவிருத்திப் பணிகளால் அப்பகுதி மக்கள் நன்மை அடைந்து வருகின்றனர். (ந-14)

## 90 ஆம் நாள் நினைவு



தோற்றம் 03 . 10 . 1983 — மறைவு 25 . 11 . 2011

அமரர்

**மகேந்திரநாதன் பிரதீபன்**

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எமைவிட்டுப் பிரிந்து தொண்ணூறு
நாட்கள்ஆனதே
உயிரோடும் உணர்வோடும் கலந்து விட்ட
உன்நினைவுகள்
என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும்

கோண்டாவில் வடக்கு,
சென்செபஸ்தியார் லேன்,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15 . 10 . 1948 — இறப்பு 10 . 03 . 2005

அமரர்

**செ. தனேந்திரகுமாரன்**

(கான இசைமணி ரங்கன்)

என்றும் எங்கள் உள்ளத்தில்
நின்று நிழலாடிக் கொண்டிருக்கும்
எங்கள் அன்பு அப்பாவின்
ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்

16/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, குருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(14752) (45-6)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் கனகசபை விஜயரெத்தினம்**

24.01.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கனகசபை விஜயரெத்தினம் அவர்களின் செய்தியறிந்து எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்து. ஆறுதல் வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (21.02.2012) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றியில் இடம்பெறுவதுடன், நாளை மறுதினம் (23.02.2012) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரது இல்லத்தில் இடம் பெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

யாழ் நகரில்!
வாடகைக்கு
கார்கள், வான்கள்
Rent a Car



சாரதியுடன் வாகனம்
சாரதியில்லாமல் வாகனம்
திருமண வைபவங்கள், சுற்றுலாக்களுக்கு
வெளியூர் பயணங்களுக்கு
கார், வான், கனரக வாகனங்கள்
வாராந்த மாதாந்த வாடகைக்கு

K.J Enterprises

105/06, சி.பொன்னம்பலம் லேன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Hotline : 0759463632,
0750422904
Office : 021320 2198

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். உறவினர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். தொழில் ரீதியாக வரவேண்டிய கடன் மிகுதிகள் வந்து சேரலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் அகலக் கால் வைக்காமல், எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்தி கேட்கலாம்.

**இடபம்:** வீட்டுத்தேவைகள், குடும்ப உறுப்பினர்கள் ஆசைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்கள் வீட்டுக்கு வரலாம். தொழில் ரீதியாக சிலரிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். நீண்ட நாள்களாக மறைத்து வைத்திருந்த ரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் வெளிப்படுத்துவீர்கள். சோம்பல் அதிகரிக்கும்.

**மிதுனம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை, சிலர் உங்களிடம் காட்டலாம். அதிகவிலை கொடுத்து சில பொருள்களை வாங்கியும், அதில் திருப்தி இல்லாமல் போகலாம். சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும்.

**கடகம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டம் போடுவீர்கள். சில நாள்களுக்கு முன்னர் உருவான பிரச்சினை ஒன்று இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். நண்பர்களுக்காக மனம் உவந்து செலவு செய்வீர்கள். பிரியமானவர்கள் சிலருடன் சந்தோஷமாக பொழுதைக் கழிக்கலாம். நீங்கள் எதிர்பார்த்த சில உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம்.

**சிங்கம்:** தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் ரீதியாக புதியவர்களின் நட்பைப் பெறலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் வரலாம். சிலரின் தகுதிக்கு மீறிய செயல்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் பேச்சைக் கேட்காமல் செயல்படுவதால், அவர்களின் கோபத்துக்கு ஆளாகலாம்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் திடீர் பணத்தட்டுப்பாடு உண்டாகலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். வெளியில் சொல்ல முடியாமல், உங்களுக்குள்ளேயே சில விஷயங்களைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். வயிறு, வாயு உபாதைகளைச் சந்திக்கலாம்.

**துலாம்:** சிக்கலான பிரச்சினை ஒன்றை சாமர்த்தியமாக செயற்பட்டு முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர் வழியில் செயற்பட வேண்டும். மற்றவர்கள் தலையீட்டால், உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். அடுத்தவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர்கள். குடும்ப விவகாரங்களில் வீண் பேச்சைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** தொழில் ரீதியாக கணிசமான வருமானம் பெறலாம். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். மாற்று மத நண்பர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். பல நாள்களாகப் பார்க்காத சிலரை திடீரெனப் பார்க்கலாம். புதிய ஒப்பந்தங்கள்போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அனுகூலமான நாள்.

**தனுசு:** மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். வசதி படைத்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உங்களின் யோசனைகளுக்குக் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் ஆதரவு பெருகும். செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகரிக்க வேண்டும். சிலர் உங்களிடம் கடன் வாங்கலாம். சிவாலய வழிபாட்டின் மூலம் சிறப்புப் பெறலாம்.

**மகரம்:** மற்றவர்களை நம்பாமல் எந்தக் காரியத்தையும் நீங்களே சுயமாகச் செய்வீர்கள். பெண்கள் குடும்ப பெரியவர்களின் அன்பைப் பெறுவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். தேக ஆரோக்கிய விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். நீங்கள் எதிர்பாராத தரப்பிலிருந்து திடீரென உதவி கிடைக்கலாம்.

**கும்பம்:** சிலர் உங்களுக்காகச் செலவு செய்ய முன்வந்தும், அதை வேண்டாம் என மறுப்பீர்கள். முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். உங்களுக்குப் பிடித்த ஒன்று மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். விரதம், வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். நீண்ட நேரம் தூங்கலாம்.

**மீனம்:** மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடக்கலாம். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். நண்பர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் கூடும். கலகலப்பாகப் பேசி, மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**நாளை**

மாசி 10 புதன்கிழமை 22.02.2012
திதி:பிரதமை பி.இ. 05.14 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ. 01.58 வரை
சுபநேரம்: 05.01- 06.31 வரை,
ராகு காலம்: 12.31- 02.01 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | 1 | 9 | | 4 |
| 5 | | | | 7 | 4 | | 8 | 1 |
| 8 | 4 | | | 6 | | | 7 | |
| | | | | | 8 | | 9 | 3 |
| | 6 | 5 | | | | 1 | 2 | |
| 9 | 1 | | 3 | | | | | |
| | 8 | | | 9 | | | 5 | 6 |
| 1 | 7 | | 6 | 8 | | | | 2 |
| 6 | | 2 | 4 | 3 | | | | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 4 | 1 | 9 | 8 | 2 | 7 | 5 |
| 2 | 8 | 9 | 5 | 7 | 4 | 6 | 3 | 1 |
| 7 | 1 | 5 | 3 | 2 | 6 | 9 | 8 | 4 |
| 1 | 7 | 2 | 9 | 6 | 5 | 8 | 4 | 3 |
| 6 | 4 | 3 | 8 | 1 | 2 | 7 | 5 | 9 |
| 9 | 5 | 8 | 7 | 4 | 3 | 1 | 2 | 6 |
| 8 | 3 | 6 | 2 | 5 | 9 | 4 | 1 | 7 |
| 4 | 2 | 1 | 6 | 3 | 7 | 5 | 9 | 8 |
| 5 | 9 | 7 | 4 | 8 | 1 | 3 | 6 | 2 |

# முதலாம் ஆண்டு நினைவாக

தோற்றம் மறைவு
14-10-1933 04-03-2011



அமரர்

## வீரசிங்கம் இராசமணி

**திதி: அமாவாசை**

தெய்வத்தின் சந்நிதியில் தெய்வமான எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தி நிகழ்வுகள் இன்று (21-02-2012) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு பிரார்த்தனை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*198/5, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்

(14796) (10)

# அழகான வீதியை அசிங்கப்படுத்தும் கழிவு



ஏ- 9 வீதியிலிருந்து நாயன் மார்கட்டுச் சந்திவரையான செம்மணி வீதி தற்போது கழிவுகளால் நிரம்பி வழியும் இடமாக மாறி வருவதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சேதமான நிலையிலிருந்த் இவ்வீதி கடந்த வருடம் ''காப்பெற்'' வீதியாக மாற்றப்பட்டு போக்குவரத்துக்கு இலகுவாக்கப்பட்டதுடன் வீதியின் இரு பக்கமும் நெல்வயல்கள் இருப்பதனால் இயற்கையில் மிக அழகானதாக இருக்கும் நிலையில் உல்லாசப் பயணிகளும் இவ்விடத்தைத் தினமும் வந்து பார்த்து ரசிக்கின்றனர். தற்போது இவ் வீதியில் பல இடங்களில் இருந்து வரும் குப்பைகள், மிருகக் கழிவுகள் எனப் பெருந்தொகையான கழிவுப்பொருள்கள் இங்கு தினமும் கொட்டப்படுகின்றன. அவை வீதிகளிலும் வயல்களிலும் பரவிக் காணபடுவதுடன். இவற்றிலிருந்து துர் நாற்றம் வீசுவதாகவும் கூறப்படுகின்றது.

இவ் வீதியில் பகல் நேரத்தில் பகிரங்கமாகவே உழவு இயந்திரங்களிலும் ஏனைய வாகனங்களிலும் கழிவுகள் தினமும் கொண்டு வந்து கொட்டப்படுகின்றன. எனினும் பயம் காரணமாக அங்குள்ளோர் அதனைத் தடுக்காது செல்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே, இவ் விடயத்தில் வலி.கிழக்கு பிரதேச சபையும், நல்லூர் பிரதேச சபையும் இணைந்து உடனடி நடவடிக்கை எடுத்து இவ்வீதியில் கழிவுகள் கொட்டப்படுவதனைத் தடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ந-288)

# யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் அவசர நடவடிக்கையால் மக்கள் அதிருப்தி

தென்மராட்சி, பெப்.21

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் பங்களிப்புடனான வேலைத்திட்டங்களை மேற் கொள்ள யாழ்.உள்ளூராட்சித் திணைக்களம் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டமை மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள 10 கிராம அலுவலர் பிரிவுகளில் வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வழங்கப்பட்ட கால அவகாசம் குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மக்கள் பங்களிப்புடனான வேலைத் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பான கூட்டத்துக்கு பி.ப.1.30 மணிக்கு ஒலிபெருக்கி மூல அழைப்பை விடுக்கப்பட்டு அருகில் உள்ள பாடசாலைக்கு பி.ப.2 மணிக்கு கூட்டம் நடைபெறுமென பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தின் மூலம் தமது பரிவுக்கு செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான விவரங்களைக் கொடுக்க அல்லது சொல்லக் கூடிய பொதுஅமைப்புகள் கலந்துகொள்ள முடியாத நிலையில் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளது. அரை மணித்தியால முன்னறிவித்தலில் எந்தவொரு செயற்றிட்டங்களுடம் பொதுமக்களால் சமர்ப்பிக்க முடியாது நிலையில் கூட்டங்கள் திட்டமிட்டு நடத்தப்படுவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**அரை மணித்தி யால முன்னறிவித்தலில் எந்த வொரு செயற்றிட்டங்க ளுடம் பொதுமக்களால் சமர்ப்பிக்க முடி யாது நிலையில் கூட்டங்கள் திட்ட மிட்டு நடத்தப்ப டுவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.**

ஐந்து வருட வேலைத் திட்டங்கள் என்பதால் ஒவ்வொரு பொது அமைப்புகளும் பல்வேறு செயற் றிட்டங் களை மக்கள் பங்களிப் புடன் செய்வதற்கு ஆயத்தநிலை இருந்த போதிலும் யாழ். உள்ளூராட்சித் திணைக்களமும் சாவகச்சேரி பிரதேச சபையும் இணைந்து திட்டமிட்டு பலவேலைத்திட்டங்களைமேற் கொள்ள முடியாத நிலைக்கு பொது அமைப்புக்களை திட்டமிட்டு இக் கூட்டங்களுக்கு வரமுடியாத படி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டபோது இவ்வாறான வேலைத்திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பாக நேற்று முன்தினம் மு.ப.9 மணிக்கு பிரதேச சபையில் நடைபெற்றவிசேட கூட்டத்தில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் தெரிவிக்கப்பட்டு பாடசால்லைகளில் நடத்தப்படும் கூட்டங்களில் பங்குபற்றுமாறு தெரிவிக்கப்பட்டதாக உறுப்பினர்களால் கூறப்பட்டது. ஒரே நேரத்தில் 10 பாடசாலைகளில் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதால் எந்தப் பாடசாலைக்கு செல்வதென்ற நிலை தமக்கு எற்பட்டதாகவும் தெரிவித்தன.(ந)

## திட்டமிடல் சேவை தரம் III இற்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.21

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம்3 வகுப்பில் ஆண்களை நிய மிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு 22-28 வயதுக்கு உட்பட்டவர்களும் எந்தத் துறை யிலாவது முதலாம்,இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்த பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியும்.

திறந்த போட்டி பரீட்சை ,மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை என இரு தெரிவுகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான பரீட்சைகள் எதிர்வரும் மேமாதம் கொழும்பில் நடைபெற உள்ளன்.

(ந-14)

## விசேட பூசை வழிபாடுகள்

பருத்தித்துறை ,கட்டைவேலி சேகரப்பிரிவில் உள்ள மெதடிஸ்த திருச்சபை தேவாலயங்களின் தவக்காலத்தை முன்னிட்டு 40 தினங்களும் விசேட பூசை வழிபாடுகள் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நாளை மறுதினம் 22ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 40 தினங்களும் இந்தப் பூசை வழிபாடுகள் தேவாலய முகாமைக்குரு அருட் திரு கே.சி. தங்கராசா தலைமையில் நடைபெற உள்ளன.

(ந-8)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். வண்ணையம்பதி நல்ல தண்ணீர்க் கிணற் றடி ஸ்ரீ சாமுண்டாள்சமேத ஞான வைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும். திருவிழாக் காலத் தில் தினமும் மாலை 4.45 மணிக்கு விசேட பூசைகள், அபிஷேகங்கள் இடம்பெறும்.

திருவிழாவின் இறுதிநாளான அடுத்த மாதம் எட்டாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகமும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

ஆலயத்தின் திருவிழா உற்சவக் கிரியைகளை கொக்குவில் சிவஸ்ரீ செ. இரத்தின சபாபதிக் குருக்கள் நிகழ்த்துவார்.

(ந-14)

**மணப்பெண் அலங்காரம்**

* மணப்பெண் அலங்காரம் And Make up
* Bridal Beauty care (Before Wedding)
* Wedding Cake Icing Structure

போன்றவை உங்கள் இடங்களுக்கு வந்து செய்து கொடுக்கப்படும்.

Bridal Dressing By Priya Santhosh,
Appointment For Ladies Only, T.P. 0775944593

**வீடு உடனடி வாடகைக்கு**

யாழ்.நகரின் மத்தியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு அப்போலோ மருத்துவ மனைக்கு முன்பாக 1/13, 2 ஆம் ஒழுங்கை, பலாலி வீதியில் உடனடியாக வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: 0778767947

**தேவை**

இயந்திரத்தினால் கொங்கிறீற் கற்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை. இன்று 9 மணி தொடக்கம் 5 மணிவரை நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
0773296407,
021 222 8193

**MOORTHY GUEST HOUSE**
**மூர்த்தி கெஸ்ற் கவுஸ்**
250 ஆசனங்களுடன் குளிரூட்டப்பட்ட மண்டபம்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
T.P:- 021 221 9399
A/C ,Non A/C Rooms, hall



**திறப்பு விழா அழைப்பு**

நிகழும் மங்களகரமான கரவருடம் 10ஆம் நாள் நாளை (22-02-2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் உள்ள சுப வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**K.B. Balan Damage Glass Purchase & Export Agent**

எனும் வியாபார ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணையுடன் திறந்து வைக்கவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொலித்தீன் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களும் கொள்வனவு செய்யப்படும்

செம்மணி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
0779583587

தங்கள் நல்வரவை நாடும்:
K.B.பாலன் குடும்பத்தினர்
(குட்டி, லதன்)



**வாழும் கலை பயிற்சி**

மூச்சு பயிற்சி, பிராணாயாம, சுதர்சன கிரியா யோகா, தியானம்
இன்று 21.02.2012
அறிமுகவுரை மாலை 5 மணி
இடம்:
மகேஸ்வரன் மணிமண்டபம்
பயிற்சி:
22.02.2012 - 26.02.2012
நேரம்: 3.00 - 5.30 Pm. 6.00 - 8.30 Pm.
T.P: 0777740593
(14875)(2-19-9)

**German, Swiss, Deutsch மொழிகள்**

Goethe Institute னால் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு ஏற்றவாறு பிரபல்யமான ஆசிரியர் குழாம் மூலம் கற்றுத்தரப்படும்.

எமது கல்வி நிலையம் பல வருடங்களாக இயங்கி வருகின்றது அத்தோடு பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

* யாழ்ப்பாணத்தில் வகுப்பு ஆரம்பம் - 27.02.2012
  மு.ப. 9.00 மணி Academy of Logic
  பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கருகில்.
* கிளிநொச்சியில் வகுப்பு ஆரம்பம் - 02.03.2012
  பி.ப. 1.30 மணி Sun British Business College
  இல.40, கனகபுரம் பிரதான வீதி, கிளிநொச்சி.

T.P: 077 962 9296
(14872) (10)

**யு.கே விசாவுக்காக அடிப்படையிலிருந்து ஆங்கிலம்**

இலக்கண வேதனையற்ற மிகவும் இலகுவான. வீடியோ.ஓடியோ முறை மூலம் ,தனிப்பட்ட முறையில் கல்வி.வெளிநாடுகளில் சர்வதேச பல்கலைகழகங்களில் பணியாற்றிய இங்கிலாந்து ஆங்கிலக்கல்வி முறையில் கற்பிக்கும் பட்டதாரி பயிற்றுனரின் பயிற்சிகள்.ஒரு முறை வருகை தந்து KU ஏன் வித்தியாசமானது என்பதையும் பல நூறு மாணவர்கள் நம்புவதற்கு காரணம் என்ன என்பதையும் அறியுங்கள். KU-UK Visa English Specialists

திருமணம் மூலமாக யு.கே செல்வோருக்கான (Settlement Visa )A1 சான்றிதழுக்கான பரீட்சைக்கும் பயிற்சிக்கும் யாழ்நகரில் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம்.

Ku's Spoken English© ESOL | IELTS | Key Exam
(No Grammar) (A College Managed by Qualified people)



அழையுங்கள் :077-6458253 www.kugroup.info
City Guilds
நொலிட்ஜ் யூனிவேர்ஸ்
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

# இலங்கைத் தாதியருக்கு கோவையில் கடும் எதிர்ப்பு

## பெரியார் திராவிடர் கழகம் போராட்டம்

**தகவல் அறிந்த பொலிஸார் விரைந்து வந்து முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட 20 பேரைக் கைது செய்தனர்.**

இலங்கைத் தாதியர்களுக்குப் பயிற்சி அளித்ததைத் கண்டித்து கோவையில் திருச்சி வீதியில் உள்ள ஆரிய வைத்தியசாலை முன்பு நேற்று முன்தினம் பெரியார் தி.க.வினர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவையை அடுத்த நவக்கரையில் ஆரிய வைத்திய மருந்தகம் உள்ளது. இங்கு இலங்கையைச் சேர்ந்த 5 தாதியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகப் பெரியார் தி.க. பொதுச்செயலாளர் ராமகிருஷ்ணனுக்குத் தகவல் கிடைத்தது. இதற்குக் கண்டனம் தெரிவித்த அவர் ஆரிய வைத்திய சாலையை முற்றுகையிடுவோம் என்று அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து பயிற்சி பெற்ற இலங்கை தாதியர்கள் 5 பேரும் கேரள மாநிலம் திருச்சூரில் உள்ள ஆரிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எனினும், கோவையில் இலங்கை தாதியர்களுக்குப்பயிற்சிஅளித்ததை கண்டித்து கோவையிலுள்ள உள்ள ஆரிய வைத்தியசாலை முன்பு பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்த பொலிஸார் விரைந்து வந்து முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட 20 பேரைக் கைது செய்தனர்.

இதுகுறித்து ராமகிருஷ்ணன் தெரிவித்ததாவது:

இந்த வைத்தியசாலையை நடத்தி வருபவர் தமிழர்களுக்கு விரோதமாகவே நடந்து கொள்கிறார். 'டேம் 999' படத்தை எடுத்த இயக்குநருக்குப் பாராட்டு விழா நடத்தியவரும் இந்த கேரளக்காரர். அதேபோல இப்போது தமிழ் இனத்தை அழித்த இலங்கையைச் சேர்ந்த தாதியர்களைக் கூட்டி வந்து பயிற்சி அளித்துள்ளார் என்று குற்றம் சாட்டினார்.

இதற்கு முன்னதாக இலங்கை மருத்துவர்களுக்கு, இந்தியாவில் பயிற்சி வழங்கப்பட்ட வேளையிலும் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.(வ)

# 15 நாளாகத் தொடர்கிறது நீதிக்கான நடைப் பயணம்



இலங்கைத் தமிழர்மீது போர்க் குற்றம் புரிந்த இலங்கை அரசுக்கு முற்றுப் புள்ளி வைக்க 15 ஆவது நாளாகவும் தொடர்கின்றது நீதிக்கான நடைப் பயணம்.

காலம் காலமாகத் தமிழின அழிப்பை மேற்கொண்டு வருகின்ற ராஜபக்ஷ அரசின் கொடுமைகளுக்கு சர்வதேச சமூகம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பெல்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான நடைப் பயணம் தொடர்கிறது.

நேற்று முன்தினம் 37 கிலோமீற்றர் வரை நடந்துசென்ற இவர்களை உற்சாகப்படுத்தும் முகமாகச், சுவிஸ் நாட்டில் இருந்து சென்ற 13 தாயக உணர்வாளர்கள் இவர்களோடு இணைந்து 13 கிலோமீற்றர் வரை நடந்து தமது ஆதரவினையும், ஒத்துழைப்பையும் நல்கினர்.

பிரான்ஸ் நாட்டில் தொடர்ந்து கொண்டிருகின்ற பயணத்தை அங்குள்ள பொலிஸார் ஆர்வத்துடன் விசாரித்து நீதி கேட்டு நீங்கள் நடத்தும் இந்தப் போராட்டம் வெற்றிபெற வேண்டும். அதற்கான ஆதரவையும் வாழ்த்துக்களையும் தாம் தெரிவிப்ப தாகக் கூறிப் பாதுகாப்பான முறையிலே உரிய இடத்தை அடையுங்கள் என்று அறிவுரையும் கூறினர்.

புலத்தில் வாழ்கின்ற தமிழ உறவுகளே எங்கள் தேசத்தின் விடிவுக்காக நடத்தப்படுகின்ற இந்த நடைப்பயணத்தில் நீங்களும் கரம் கோர்த்து எம்மோடு இணைந்து வாருங்கள். ஐக்கிய நாடுகள் சபையிடம் மார்ச் 5 ஆம் திகதி ஒன்று பட்ட இனம் தமிழினம் என்பதை மீண்டும் ஒருதடவை உலகிற்கு உணர்த்துவோம். எழுச்சி மிக்க உணர்வோடு வாருங்கள் என்ற உணர்ச்சி அலையோடு தொடர்ந்து செல்கின்றது நீதிக்கான நடைப் பயணம். (வ)

# கனடாவின் சிறந்த குடியேற்றவாசியாக இலங்கைப் பெண்

கனடாவின் சிறந்த குடியேற்றவாசிகளுள் இலங்கைத் தமிழ் பெண்ணொருவர் தெரிவு செய்யப்பட்டார்.

கனடாவின் சிறந்த குடியேற்றவாசிகளாக 75 பேரை 'இக்னேடியன் இமிக்ரேஷன்' சஞ்சிகையானது தெரிவு செய்துள்ளது.தெரிவு செய்யப்பட்ட குடியேற்றவாசிகள் 75 பேரில் தமிழ்ப் பெண்ணான மெலனி டேவிட் என்பவரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சிறந்த குடியேற்றவாசி என்ற சிறப்பைப் பெற்ற முதல் பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த மெலனி டேவிட் கனடாவில் குடியேறி, சட்டப் படிப்பை முடித்து, சட்டவல்லுனராகி கனடாவில் லோ ஓஃபிஸ் எனும் சட்ட நிறுவனத்தை நடத்தி வருகிறார். அத்துடன் இவர் வேறு பல தொழில் நிறுவனங்களையும் நடத்தி தமிழர்களுக்கும் வேறு இனத்தவர்களுக்கும் வேலை வாய்ப்புக்களையும் வழங்கி வருகின்றார்.

இவருக்குக் கிடைத்த இந்தச் சிறப்பு புலம் பெயர் தமிழ்ப் பெண்களுக்கு ஓர் உந்து கோலாக அமைவதுடன் புலம் பெயர் தேசங்களில் வாழும் தமிழ்ப் பெண்கள் இலைமறை காயாகச்செய்து வரும் சாதனைகளை உலகறியச் செய்யவும் இன்னும் பல மைல் கற்களைக் கடக்கவும் உதவும் என்பதில் ஐயமில்லை. இதேவேளை, தெரிவு செய்யப்பட்ட இந்த 75 குடியேற்றவாசிகளில், 25பேர் வெற்றியாளர்களாக வாக்குப் பதிவு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மெலனி டேவிட் என்பவருடன் கனடாவில் குடியேறி வாழும் சேவியர் பெர்னாண்டோ எனும் தமிழ் பொறியியலாளரும் 75 பேரில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(வ)

# இல்ல மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்.கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் நவோதயா பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் வி.ஞானகாந்தன் தலை மையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற வெளிநாட்டு சேவை அலுவலர் எ.தர்மகுல சிங்கமும் சிறப்பு விருந்தினராகப் பொறியியலாளர் ஈ.சத்தியசீலனும் கலந்துகொள்வர்.

(வ-16)

# திருநெல்வேலிப் பொதுச் சந்தை கழிவுநீர்க் குழி திறந்த நிலையில்

## நுளம்புப் பெருக்கமும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

திருநெல்வேலி பொதுச் சந்தைக்குப் பின்புறமாகவுள்ள கழிவு நீர்க்குழி திறந்த நிலையில் காணப்படுவதால் நுளம்புக்குடம்பிகள் உற்பத்தியாகி வருகின்றன. அந்தக் குழியின் மேற்பரப்பை மூடுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர்ப் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் தலைவருக்குப் பலமுறை எழுத்து மூலமாக இந்த விடயம் அறிவிக்கப்பட்டும் அந்தக் குழியின் மேற்பரப்பை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

நுளம்புக் குடம்பிப் பெருக்கத்துடன் கழிவு நீரால் நிரம்பிக் காணப்படும் கழிவு நீர்க் குழி தொடர்பாக நல்லூர்ப் பிரதேச சபைக்கு எழுத்து மூலமாக இது வரை ஆறு தடவைகள் அறிவித்திருக்கிறோம். இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேவேளை, சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள நீர்த்தாங்கியிலிருந்து வெளியேறும் மேலதிக நீர் தேங்கி நிற்கும் கால்வாயிலும் நுளம்புக் குடம்பிகள் காணப்படுகின்றன. அதுவும் சீர் செய்யப்படவேண்டியுள்ளது.

அது மட்டுமன்றி சந்தையின் புதிய கட்டடத் தொகுதியிலிருந்து மழை நீரை வெளியேற்றுவதற்குரிய கால்வாய் வசதிகளையும் ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்தனர்.

(த-3)

# வடமராட்சி கிழக்கு மீனவருக்கு மீன்பிடி உபகரணம் கையளிப்பு

வடமராட்சி பெப் , 21

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியேறிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுவிஸ் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாசிக் நிறுவனம் 105 மீனவர்களுக்கு மீன்பிடித் தொழிலை மேற்கோள்வதற்கான மீன்பிடி உபகரணங்களை அண்மையில் வழங்கியது.

இந்த உதவிக்கென வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி , வத்திராயன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 105 மீனவர்கள் கடற்றொழில் பரிசோதகர்களின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் 75 ஆண் பயனாளிகளும் 39 பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பயனாளிகளும் அடங்கியுள்ளனர். இவர்களில் 39 பயனாளிகளுக்கு கட்டுமரம், வலை உபகரணத்தொகுதியும், 66 பயனாளிகளுக்கு வலை உபகரணத்தொகுதியும் மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. என். திருலிங்கநாதன் தலைமையில் நடைபேற்ற நிகழ்வில் வைத்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினன் சில்வேஸ்திரி அலென்ரினால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் சுவிஸ் நிறுவன அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட அலுவலர் எஸ். மோகன், பிரதேச கடற்றொழில் அலுவலர் வி.கலிஸ்ரன் மற்றும் பாசிக் நிறுவன அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இந்த வாழ்வாதாரத் திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகளுக்கு அடிப்படைக் கணக்கியலும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகளும் கடந்த மாதம் வழங்கப்பட்டன. (8)

# தணியுமா பதற்றம்?

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் இன்று அரசியல் சூழல் மாறியுள்ளதால் அணுஆயுதம் என்பது வெறும் நாடுகள் தொடர்புடையதாக மட்டுமில்லை என்றும் புதுடில்லி அதிகாரிகள் கூறுகிறார்கள்.

அணு ஆயுதங்களைத் தீவிரவாதிகளும் பெற முடியும் கையாள முடியும் என்கின்ற நிலை உருவாகியுள்ளமையே நாடுகள் குறிப்பாக முஸ்லிம் நாடுகள் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்வதைத் தடுப்பதன் நோக்கம் என்று மேற்குலக அதிகாரிகள் தொடர்ச்சியாகக் கூறுகிறார்கள்.

தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக ஈரான் மீது இஸ்ரேல் மிகப்பெரும் குற்றச்சாட்டை முன்வைக்கின்றது. இந்தியா, ஜோர்ஜியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் கடந்த வாரம் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல் தொடர்பாகக் கைதானவர்கள் ஈரானியர்கள் என்பதை இஸ்ரேல் சுட்டிக் காட்டுகிறது. ஈரானும் அல்-குவைதாவும் பரஸ்பர உதவி நாடும் நிலை உருவாகலாம் என்று மேலை நாடுகளின் பத்திரிகைகள் எச்சரிக்கின்றன.

ஈரானிய அணுக்கூட ஆராய்ச்சியாளர் ஒருவர் பட்டப் பகலில் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை யாருமே கண்டிக்கவில்லையே, ஐக்கிய நாடுகள் சபைகூட இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லையே என்று திருப்பிக் கேட்கிறது ஈரான். அணு ஆயுதத் திட்டத்தைக் குலைக்கும் நோக்கில் அந்த விஞ்ஞானி கொல்லப்பட்டிருக்கலாம் என்பதே பரவலான சந்தேகம்.

மேலைநாடுகள் இரட்டை நாக்குகள் கொண்டவை. அணு ஆயுதங்களை அவர்கள் வைத்துக்கொள்ளலாம்; ஆனால், நாம் (ஈரான்) வைத்துக்கொள்ளக்கூடாது என்கிறார்கள் என்று ஈரான் அதிபர் உறுமுகிறார்.

ஈரானிய அணு உலை விஞ்ஞானி கொல்லப்பட்டதைக் கண்டிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு கோரிக்கை வைக்கும் ஈரான், சர்வதேச அணுசக்தி முகாமை வல்லுநர்களைத் தங்கள் நாட்டின் அணு உலைக் கூடங்களுக்கு வந்து, அதன் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கு மறுப்பு தெரிவிப்பது ஏன்? என்று எதிர்கேள்வி எழுப்புகிறது மேற்குலகம். அணு உலைத் தொழில்நுட்பத்தில் ஈடுபடும் நாடுகள்- அது எரிசக்தியாக இருந்தாலும் சரி, அணு ஆயுதமாக இருந்தாலும் சரி- சர்வதேச அணுசக்தி முகாமைக்குக் கட்டுப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை ஈரான் மீறுவதுதான், அந்த நாட்டின் மீது மற்ற நாடுகள் சந்தேகம் கொள்ளக் காரணம்.

ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை அறிவித்துள்ளதால் பிரான்ஸ், இத்தாலி, ஹொலன்ட், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கு பெட்ரோலிய கச்சாய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்போவதில்லை என்று ஈரான் உடனடியாகத் தெரிவித்திருந்தாலும், இன்னும் சில தினங்களில் இந்த நிலைப்பாட்டில் தளர்வு ஏற்படலாம். கச்சாய் எண்ணெய்க் கப்பல்கள் செல்லவிடாமல் ஈரான் தடுத்தால் மட்டுமே பிரச்சினை மிகப்பெரிதாக வெடிக்கக் கூடும்.

இந்தப் பதற்றத்தைத் தணிக்கும் பொறுப்பு ஈரானுக்கு உள்ளது. பதற்றம் அதிகரிப்பதால் பாதிப்பு ஈரானுக்குத்தான் என்பதை உணர்ந்து செயல்படுவதுதான் ராஜதந்திரம். இல்லையேல் சதாம் ஹுசைன், கடாபி பட்டியலில் மெஹ்மூத் அகமத் நிஜாத்தையும் மேற்குலகம் சேர்த்துவிடக்கூடும்.

# வெற்றிக் கிண்ணங்களை கைப்பற்றிய அன்ரனிஸ், நண்பர்கள் அணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.21
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்றுக் கிண்ணங்களை வென்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னகண்டல் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## போட்டிகள் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.21
தென்மராட்சிப் பிரதேச பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

முதல் போட்டியாக ஆண், பெண் பிரிவுகளுக்கான எல்லே போட்டிகள் நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

போட்டிகளில் ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் வி.க.அணியும், பெண்கள் பிரிவில் மட்டுவில் தெற்கு வளர்மதி வி.க.அணியும் வெற்றி பெற்று பிரதேச சம்பியனாகின.

இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் வி.க.அணியும் மட்டுவில் வளர்மதி வி.க.அணியும் பெண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி வி.க. அணியும் சாவகச்சேரி வி.க.அணியும் மோதின.
(த-9)

## றோயல், பல்கலை அணிகள் ஆட்டங்களில் வென்றன

யாழ்ப்பாணம்.பெப்.21
யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையேயான அமரர் டாக்டர் ஜெ.பி.சி பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம், யாழ் பல்கலைக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றன.

முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ். பல்கலைக் கழக அணி 2.1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மற்றைய ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 2.1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

## தாச்சிச் சுற்றுப் போட்டி

கைதடி தென்கிழக்கு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்றை எதிர்வரும் மூன்றாம் திகதி நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குகொள்ள விரும்பும் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்கள் தங்கள் பெயர் விவரங்களை சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக செயலாளரிடம் அல்லது கைதடி டயானா சிகை அலங்கரிப்பு நிலையத்தில் இந்தமாதம் 25ஆம் திகதிக்குள் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-288)

## சுழிபுரம் விக்ரோறியா 3ஆம் இடம் வென்றது

வலி.வடக்கு.பெப்.21
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட போட்டியில் ஒரு ஒற்றையர் சுற்றையும் ஒரு இரட்டையர் சுற்றையும் விக்ரோறியாக் கல்லூரி வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

முதல் ஒற்றையர் சுற்றை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 18:21, 21:13, 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது

இரண்டாவது இரட்டையர் சுற்றையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம் .பெப்.21
இலங்கைக் கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 49 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட பிரிவின் ஆண்,பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டம் நடைபெற்று வருகிறது. இதில் தரம் ‘பி’ பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பம்பலப்பிட்டி பொலிஸ் பார்க் மைதானத்தில் இடம் பெறவுள்ளது . இதில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட அணி மோதவுள் ளது. (த- 23)

## கரைச்சிப் பிரதேசத்தின் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம். பெப்.21
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திலும், ஆண், பெண் இரு பாலாருக்குமான கபடிப் போட்டி எதிர் வரும் 7 ஆம் திகதி திங்கள்கிழமை ஒன்றிய விளையாட் டுக்கழக மைதா னத்திலும் இடம் பெறவுள்ளது.
(த-23)



## உதைபந்தாட்ட சுற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.21
விலகல் முறையிலான 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சற்றுப் போட்டி நேற்றுமுன்தினம் அராலியில் ஆரம்பமாகியுள்ளது.

அராலி கிழக்கு ஏ-எல் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் தலைவர் இ.அம்பிகைபாகன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் தர்மலிங்கம் நடனேந்திரன், சிவகுரு பாலகிருஸ்ணன் ஆகியோர் இணைந்து விளையாட்டை ஆரம்பித்து வைத்தனர். 20 நாள் தொடர்ந்து இடம் பெறும் உதைபந்தாட் டச் சுற்றுப் போட்டியில் குடாநாட்டின் முன்னணி அணிகள் பங்குபற்றவுள்ளன.

இந்நிகழ்வில் அராலி இராணுவ, பொலிஸ்படை அதிகாரிகளும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.
(த)

## எல்லேச் சம்பியன்கள்





கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின் 2012ஆம் ஆண்டுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் , ஆண், பெண் ஆகிய இரு பிரிவுகளிலும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றிக்கனியை எட்டிப் பிடித்த மனோகரா விளையாட்டுக் கழக வீரர்களும் வீராங்கனைகளும்.

## குமரநகர் அணி சம்பியன்

கைதடி,பெப்.21
கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகத்துக்கும் தென் மராட்சிக்குட்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக் கிடையே நடத்திய தாச்சிப் போட்டியில் கைதடி குமர நகர் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

மேற்படி போட்டிகள் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்தப்போட்டிகளில் 20இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றிபோதும் இறுதிப் போட்டிக்கு கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகமும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டியில் 7:3என்ற புள்ளி அடிப்படையில் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகம் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை வென்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

மேற்படி இந்தப் போட்டிக்கு நடுவர்களாக யாழ். மாவட்ட தாச்சி விளை யாட்டு சங்கத்தைச் சேர்ந்த செ.சண்முகலிங்கம்,இ வை.ஆனந்த ஜெஸ்கரன் ஆகியோர் கடமை புரிந் தனர். (த-288)

**இப் போட்டிகளில் 20 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றி இருந்தன.**

## உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் சம்பியன்



வடமராட்சி. பெப்.21
கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் அமெரிக்க மிஷன் கல்லூரி சம்பியன்ஆனது.

இரண்டாம் இடத்தை இமையாணன் இ.த.க பாடசாலையும் மூன்றாம் இடத்தை நெல்லியடி மெ.மி பாடசாலையும் நான்காம் இடத்தை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

# பணக்கார அமைப்பின் பிச்சைக்காரத்தனம்

உலகிலேயே பணக்கார விளையாட்டு அமைப்பான இந்திய கிரிக்கெட் சபை வருமான வரியை முறையாக செலுத்தாமல் ரூ.372 கோடி மீதி வைத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ) வருமான வரிச் சலுகை சமீபத்தில் ரத்து செய்யப்பட்டது. தற்போது வர்த்தக நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதால் சலுகை எதுவும் இல்லை.

கடந்த 2009-10 ஆம் ஆண்டு வருமானத்துக்கு 413 கோடி ரூபாய் வரி விதிக்கப்பட்டது. இதனை முழுமையாக செலுத்தவில்லை என்பது சுபாஷ் அகர்வால் என்பவர் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் விளக்கம் கேட்ட போது தெரிய வந்துள்ளது.

இது குறித்து அகர்வால் கூறுகையில், கடந்த 2009-10 ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் சபை ரூ.964 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. இதற்கு 413 கோடி ரூபாய் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் 41 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள சுமார் 372 கோடி செலுத்தப்படவில்லை. இதனை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர 2010-11, 2011-12 ஆம் ஆண்டுக்கான வருமான வரி கணக்குகள் இன்னும் தாக்கல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன என்றார்.

(5)

# பெடரர் வெற்றி



உலக உள்ளக ரெனிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தினை சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் சுவீகரித்தார்.

இந்தப் போட்டியில் ஆஜன்ரினாவின் ஜூவன் மாட்டின் டெல் போற்றோவை 2:0 என்ற செட்கணக்கில் ரொஜர் பெடரர் வெற்றிகொண்டார்.

இந்தப் போட்டியில் 6 -1 என்ற புள்ளிகள் கணக்கில் முதல் செட்டை கைப்பற்றிய பெடரர், இரண்டாவது செட்டை 6-4 என்று தன்வசப்படுத்தினார்.

(5)

## மரண அறிவித்தல்கள்



### இராமலிங்கம் அருள்நிதி (அருள்)

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அருள்நிதி (அருள்) நேற்று (20.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற, இராமலிங்கம் மற்றும் சோதிமலர் தம்பதியரின் அன்பு மக ளும், பாஸ்கரன் (கனடா), பரமேஸ்வரன், பாலேந்திரன் (பாலன் ஆட்டோ), சுதாகரன் (சுதன் ஆட்டோ), பத்மாவதி, பிரபாநிதி (சமுர்த்தி வங்கி - நெல்லியடி), இந்துமதி ஆகியோரின் சகோதரியும் இதயரஞ் சினி (கனடா), செல்வக்குமார், கெங்காதேவி, சாந்தினி, தயானந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2012) செவ் வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 5 மணியளவில் தகனக்கிரியைக்காக வேரக்கழி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

### பெரியார் தம்பு



பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி முருகமூர்த்தி வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பெரியார் தம்பு நேற்று (20.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சின்னராசா, சிவலிங்கம், சின்னமணி, அன்னபூரணம், கிளி, சரஸ்வதி, காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2012) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.'

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
முருகமூர்த்தி கோயில் வீதி, நெல்லியடி
வை.ஆனந்தராசா (ஆனந்தன்)
ஆனந்தன் மணப்பந்தல் சேவை

### திருமதி இராசன் அன்னம்மா




வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசன் அன்னம்மா (16.02.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற இராசனின் அன்பு மனைவியும் சந்திராதேவி, இரட்னேஸ்வரி, அரியரட்ணம் (அரி), காலஞ்சென்ற ஆனந்தன், உதயன் மற்றும் ரஞ்சனா, யோகராணி, ரஜனி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சின்னையா, சின்னமணி, கிளி, சின்னக்கிளி மற்றும் இராசா, மணி, பாலு ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.02.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டை. (14883)(2-19-9) குடும்பத்தினர்.

# கனேரியா மறுப்பு



பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற் பந்து வீரர் கனேரியா தன் மீது கூறப்பட்ட சூதாட்ட குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் நடந்த உள்ளூர் ஆட்டத்தில் தனது அணியை சேர்ந்த பந்துவீச்சாளர் மெர்வின் வெஸ்ட் பீல்டை 'ஸ்பொட் பிக்சிங்' என்னும் சூதாட்டத்தில் ஈடுபட வைத்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பாக லண்டன் பொலிசார் கனேரியாவை கைது செய்து பின்னர் விடுவித்தனர். இந்த வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் நடந்தது. வெஸ்ட் பீல்டு மோசமான பந்துவீச பணம் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டார். இதனால் அவருக்கு 4 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதனால் கனேரியாவுக்கு சிக்கல் ஏற்பட்டது. இந்த நிலையில்தான் 'ஸ்பொட் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபடவில்லை என்று கனேரியா மறுத்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, என் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டு தவறானது. ஏற்கனவே பொலிஸார் நான் குற்றமற்றவர் என்று தெரிவித்து விட்டனர். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடமும், இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடமும் நான் குற்றமற்றவன் என்பதற்கான சான்றிதழை பெற்றுள்ளேன். இதனால் எனக்கு எந்த நெருக்கடியும் இல்லை. தான் தொடர்ந்து மகிழ்ச்சியுடன் விளையாடி வருவதாகவும், வெஸ்ட் பீல்டு பொய்யை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் கனேரியா தெரிவித்துள்ளார்.

(5)


## தவறிவிட்டது

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரியுடைய வேல்ராஜா பிரதாபன் என்பவரது தே.அ.அ. (920853560V) பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0778689972 எனும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் உச்சரித்து வாசிக்க, எழுத, கதைக்க
தனிப்பட்ட அடிப்படை வகுப்புக்கள்
BY. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி சண்டிலிப்பாய்
இந்துக்கல்லூரி முன்பாக. T.P. 077 6751649

## தவறிவிட்டது

126/41, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய ஐயாத்துரை குணரத்தினம் என்பவரின் தே.அ.அ.(531471822V), குணரத்தினம் பவளம் என்பவரின் தே.அ.அ. BOC இன் A.T.M காட், வாகனங்களின் காப்புறுதிப்பத்திரம் மற்றும் வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், சிறு மோதிரம் மற்றும் ஒரு தொகைப்பணம், அடகுபற்றுச் சீட்டு என்பன அடங்கிய பேர்ஸ் கொழும்புத்துறைக்கும்,சரசாலைக்கும்இடையில்தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு : 077 9590469


சிவமயம்

## கரைச்சி
## புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவப் பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) சம்பந்தமான ஆலோசனைக் கூட்ட அறிவித்தல்

மேற்படி நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா (05.04.2012) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இது சம்பந்த மான ஆலோசனைக் கூட்டம் நாளை (22.02.2012) புதன்கிழமை 1.30 மணிக்கு மாவட்ட அரச அதிபர் மதிப்பிக்குரிய ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(சி/01441) (45-6) ஆலய பரிபாலன சபை

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னையா தர்மலிங்கம்

திதி: மாசி அமாவாசை

தோற்றம்
29★05★1932

மறைவு
13★02★2010

*நீங்கள் மறைந்து நிறைந்து போயின*
*இரண்டு ஆண்டுகள் ஐயா,*
*உங்கள் பாதம் பட்ட இடம் எல்லாம்*
*பார்த்து மனம் ஏங்குது ஐயா,*

*உங்கள் பிள்ளைகளுடன் பேரப்பிள்ளைகளும்*
*உங்களைத் தேடுகிறார்கள் ஐயா,*
*ஒவ்வொரு நாளும் உங்களை வணங்குகிறோம் ஐயா,*
*புவியினில் வாழும் வரை கண்ணீர்ப் பூக்களை*
*காணிக்கையாக்குகின்றோம் ஐயா.*

(சி/9454)(2-19-9)

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.
தொ.பே.0776141907
- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கணேஸ் சின்னம்மா

பருத்தித்துறை, புலோலியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேஸ் சின்னம்மா நேற்று (20.02.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணேஸ்ஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பவளம், இராசமணி, மார்க்கண்டு மற்றும் மகேந்திரன் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசலாவின் அன்புத் தாயும் கோ.கண்ணதாசனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பிரதான வீதி சங்கானை.
கோ. கண்ணதாசன்
(மருமகன், வைஸ்ணவி நகைப்பூங்கா நெல்லியடி)

# டோனிக்கு வந்தது தடை



இந்திய அணி ஆஸ்திரேலியாவுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்து வீசி முடிக்கத் தவறியது. இதன் காரணமாக டோனிக்கு அடுத்த ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி இந்த ஆட்டத்தில் 2 பந்து பரிமாற்றங்கள் தாமதமாக வீசியது. இதற்காக அணித் தலைவர் என்ற முறையில் டோனிக்கு 40 சதவீத அபராதம் மற்றும் ஒரு ஆட்டத் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து இன்று இடம்பெற உள்ள இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் இவர் விளையாட முடியாது. மற்ற இந்திய வீரர்களுக்கு 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. ஐ.சி.சி. விதி முறைப்படி 12 மாதத்தில் இரண்டு முறை தாமதமாக பந்துவீசினால் அணித்தலைவருக்கு தடை விதிக்கப்படும். இந்திய அணி ஏற்கனவே கடந்த 2011, ஏப்ரலில் மும்பையில் நடந்த உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கைக்கு எதிராக தாமதமாக பந்து வீசியிருந்தது.

இதே போன்று டெஸ்ட் ஆட்டத்திலும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக போர்தில் தாமதமாக பந்துவீசிய விவகாரத்தில் சிக்கிய டோனிக்கு தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து அடிலெய்டில் நடந்த நான்காவது டெஸ்டில் அணியின் தலைமைப் பொறுப்பை சேவாக் ஏற்றார்.

இதேவேளை அணித்தலைவர் டோனியினால், 2015 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரைக் கருத்தில் கொண்டு இந்திய அணியில் இளம் வீரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக, அணியின் முன்னணி வீரர்களான சச்சின், சேவாக், கம்பீர் சுழற்சி முறையிலேயே தெரிவு செய்யப்பட்டு வந்தனர். இருப்பினும் இறுதியில் டோனியே தடை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதால் முன்னணி வீரர்கள் மூவரும் இலங்கைக்கு எதிரான இன்றைய ஆட்டத்தில் விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (5)

# முன்னேற்றம் காண்கிறார் யுவராஜ் சிங்




"இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யுவராஜ் சிங் நுரையீரலில் ஏற்பட்ட புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்."

இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கின் உடல்நிலையில் நாளுக்கு நாள் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று அவரது தாயார் ஷப்னம்சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யுவராஜ் சிங் நுரையீரலில் ஏற்பட்ட புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யுவராஜ்சிங்குக்கு கீமோதெரபி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. யுவராஜ்சிங் குணமடைந்து விரைவில் விளையாட வருவார் என்று அவரது தாயார் ஷப்னம்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது,

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கீமோதெரபி சிகிச்சை பெற்று வரும் யுவராஜ் சிங்கின் உடல் நிலையில் நாளுக்கு நாள் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. யுவராஜ் பூரண குணமடைந்து விரைவில் விளையாடுவார் என்ற நம்பிக்கை உள்ளது. யுவராஜ்சிங் குழந்தை பருவத்திலேயே பல்வேறு இன்னல்களை சந்தித்துதான் முன்னேறி இருக்கிறான்.

புற்றுநோய்க்கு எதிராக நடக்கும் போராட்டத்தில் இருந்து அவன் மீண்டு வருவான். நான் யுவராஜ்சிங்குக்கு தாயார் என்று மட்டுமே எல்லோருக்கும் தெரியும், ஆனால் எனது 18 வயதில் கூடைப்பந்து விளையாட்டில் தேசிய பட்டம் பெற்றுள்ளேன்.

எனக்கு திருமணம் ஆனதில் இருந்தே கஷ்டப்பட்டுதான் முன்னேறி வந்தேன். அவனை கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கியதால் யுவராஜ் மேல் பிரியம் அதிகம். தனக்காக வாழ்வதாக யுவராஜ்சிங் என்னிடம் அடிக்கடி கூறுவான். அவனது தந்தைக்கு கிரிக்கெட்டில் 'கிங்காக' இருக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதை அவரது மகன் யுவராஜ் நிறைவேற்றி உள்ளான் என்றார். (5)

# சச்சின் சரியில்லை



*சச்சின் சதத்தில் சதம் அடிக்க வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து விளையாட வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.*

*அவர் மேலும் கூறியதாவது,*

*ஆஸ்திரேலியாவில் சச்சின் தொடர்ந்து மோசமாக விளையாடி வருகிறார். இதற்கு காரணம் 100 ஆவது சதத்தை அடிக்க வேண்டும் என்ற நெருக்கடி தான். அந்தச் சாதனையை அவர் மறக்க வேண்டும்.*

*அப்போதுதான் சச்சினால் வழக்கம் போல் விளையாட முடியும். விரைவில் சச்சின் தன்னை மாற்றிக் கொள்வார் என்று நம்புகிறேன் என்றார்.*

*இதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தில், களத்தடுப்பின் போது, முழங்காலுக்கு கீழே பந்து தாக்கியதால் வலியால் அவதிப்பட்ட இவர், சிறிது நேரம் களத்தடுப்பில் ஈடுபடவில்லை. (5)*

# தூக்கி வீசப்பட்ட ரிக்கி பொண்டிங்



"பொண்டிங் முன்னெப்போதுமில்லாதவாறு தொடர்ச்சியாக 5 போட்டிகளில் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துள்ளார்."

ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான ஆஸ்திரேலிய அணியிலிருந்து அந்த அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் நீக்கப்பட்டுள்ளார். இலங்கை, இந்திய அணிகளுடனான முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் பொண்டிங்கின் துடுப்பாட்டம் மோசமாக இருந்ததையடுத்து அவர் இந்தத் தொடரின் எஞ்சிய போட்டிகளுக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக நேற்று திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் அவர் 5 போட்டிகளில் பங்குபற்றி முறையே 2, 1, 6,2, 7 ஆகிய ஓட்டங்களையே பெற்றார். இலங்கை அணியுடனான ஆட்டத்தின் போது அவர் ஆஸ்திரேலிய அணிக்கு தலைமை தாங்கினார். அந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவின் தேசிய கிரிக்கெட் தேர்வாளர் ஜோன் இன்வேராரிட்டி இது குறித்து பொண்டிங்கிற்கு தொலை பேசி மூலம் அறிவித்துள்ளார்.

நிலைமை மோசமடைந்தால், போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக இன்வே ராரிட்டிக்கு பொண்டிங் அறிவிக்கவேண்டும். அல்லது பொண்டிங் நீக்கப்படுவதாக அவருக்கு இன்வேராரிட்டி அறிவிப்பார் என்று இருவருக்கும் இடையில் ஏற்கெனவே உடன்பாடு காணப்பட்டி ருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பொண்டிங் முன்னெப்போதுமில்லாதவாறு தொடர்ச்சியாக 5 போட்டிகளில் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததையடுத்து அவர் அணியிலிருந்து நீக்கப்படுவதாக ஜோன் இன்வேராரிட்டி தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளார்.

ஒரு நாள் ஆட்டங்களுக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டதையடுத்து பொண்டிங் சகலவித போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவிக்கக்கூடும் அல்லது டெஸ்ட் துடுப்பாட்ட வீரராக மாத்திரம் விளையாடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# இந்திய அணிக்குள் பிளவு?

டோனியின் சுழற்சி முறை தந்திரத்தால் இந்திய அணியில் பெரும் சர்ச்சை வெடித்துள்ளது. இவர், தனக்கு பிடித்தமான ரோகித் சர்மா, ரெய்னாவை தக்க வைக்கவே ''சீனியர்களை' பலிகடா ஆக்குவதாக குற்றம்சாட்டப்படுகிறது. தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வரும் இவரிடம் இருந்து, அணித்தலைவர் பதவியை பறிப்பதற்கான வேலைகளும் மும்முரமாக நடக்கின்றன.

முத்தரப்பு ஒருநாள் தொடரில் சச்சின், சேவாக், கம்பீர் ஆகிய முன்னணி வீரர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்பு அளிக்கப்படும் என டோனி தெரிவித்தார். இதன்படி சேவாக் ''வெளியே' இருந்தால், சச்சின் ''உள்ளே' வருவார். ஒரு போட்டியில் கம்பிருக்கு ஓய்வு தரப்பட்டது. ''சீனியர்' வீரர்களான இவர்கள் களத்தடுப்பில் மந்தமாக செயல்படுவதாக இன்னொரு குண்டை தூக்கி போட்டார் டோனி. இதில், ஓரளவுக்கு தான் உண்மை உள்ளது. சச்சின் 'ஸ்லிப்' பகுதியில் சிறந்த களத்தடுப்பாளரே. கம்பிர் டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்களுக்கு மிக அருகில் சிறப்பாக களத்தடுப்புச் செய்யக்கூடியவர். சேவாக் மட்டுமே அவ்வப்போது சொதப்புவார்.

இது பற்றி பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த வீரர் ஒருவர் கூறுகையில், ''இந்திய அணியின் பலம் களத்தடுப்பு அல்ல. துடுப்பாட்டம் தான். 2011ல் துடுப்பாட்டப் பலத்தால் தான் உலகக் கிண்ணத்தை வென்றோம். 2007இல் ''ருவென்ரி-20' உலக கம்பீர் ஓட்ட மழை பொழிந்தார். இதே போல யுவராஜ் ஒரே ஓவரில் 6 சிக்சர் விளாசியது போன்றவற்றால் தான் சம்பியன் பட்டம் வெல்ல முடிந்தது'' என்றார்.

டோனி மீது அதிக கோபத்தில் இருப்பவர் கம்பீர் தான். முத்தரப்பு தொடரில் இரு முறை 90 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்த தன்னை குறி வைப்பது இவருக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. டோனியை மறைமுகமாக விமர்சிக்க துவங்கினார். உதாரணமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில், கடைசி பந்தில் சிக்சர் அடித்து டோனி வெற்றி தேடித் தந்தார். அப்போது பேசிய கம்பீர், ''48வது ஓவரிலேயே வென்றிருக்க வேண்டும். 50வது ஓவர் வரை சென்றிருக்க தேவையில்லை,''என்றார். இது இவர்கள் இருவருக்கும் இடையே இருந்த மோதலை அம்பலப்படுத்தியது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இந்தியா தொடர்ச்சியாக 8 டெஸ்ட் தோல்விகளைச் சந்தித்தது. இதனால் டோனியின் தலைமைப் பதவி குறித்து கேள்வி எழுந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி இவரிடம் இருந்து அணித்தலைவர் பதவியை தட்டிச் செல்லும் ஆசை சில வீரர்களின் மனதில் பிறந்துள்ளது. இவரது சுழற்சி முறை வீரர்கள் தேர்வு, டெஸ்டில் தற்காப்பு பாணியிலான களத்தடுப்பு வியூகம், தாமதமாக பந்துவீசி தடையை சந்தித்தல் என்பவற்றை விமர்சகர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். வேறு ஒருவரிடம் அணித்தலைவர் பதவியை தர வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.


தற்போதைய முத்தரப்பு தொடரில் துடுப்பாட்டத்தில் சோபித்த போதும், அணித் தலைவராக டோனி பிரகாசிக்கவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடந்த போட்டியில் மீண்டும் தாமதமாக பந்துவீசிய பிரச்சினையில் சிக்கினார். இதனால் ஒரு போட்டிக்கு தடை விதிக்கப்பட்டதால், இவர் இலங்கைக்கு எதிரான இன்றைய முக்கிய போட்டியில் பங்கேற்க முடியாமல் போய் விட்டது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடந்த போட்டியில் நான்கு வேகங்களுடன் களமிறங்கிய நிலையில், ஓவர்களை விரைவாக முடிக்கும் பொருட்டு சுழற்பந்துவீச்சாளரான ரவிந்திர ஜடேஜாவை டோனி பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், இவருக்கு ஒரு ஓவர் கூட கொடுக்கவில்லை.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக தான் சுழற்சி முறை என்ற இவரது கருத்தை யாரும் ஏற்கவில்லை. முன்னணியில்உள்ள மூன்று வீரர்களுக்கு மட்டுமே சுழற்சி முறை பொருந்தும் என்பது தனக்கு பிடித்தமான ரோகித் சர்மா, ரெய்னாவை அணியில் வைத்திருக்க அரங்கேற்றும் தந்திரம் என கூறப்படுகிறது. இவர்கள் இருவரும் பெரிதாக சோபிக்காத நிலையிலும், தொடர்ந்து வாய்ப்பு பெறுகின்றனர். அதே நேரத்தில் மற்றொரு இளம் வீரரான மனோஜ் திவாரி, மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான போட்டியில் சதம் அடித்த கையோடு ஆஸ்திரேலியாவுக்கு வந்தார். ஆனால் அவருக்கு வாய்ப்பு கொடுக்க மறுக்கிறார்.

# அரச பஸ் சேவை இல்லை அவலப்படும் பயணிகள்

மன்னார், பெப்.21



மன்னாரில் இருந்து சங்குப்பிட்டி வீதியூடாக அரச பஸ்கள் சேவையில் ஈடுபடாததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மன்னாரில் இருந்து சங்குப்பிட்டிப் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்குத் தனியார் பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் அரச பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடுவதில்லை.

இதே சமயம் மன்னாரில் இருந்து வவுனியா சென்று ஓமந்தையூடாக யாழ்ப்பாணத்துக்கு அரச பஸ்கள் ஒரே தடவையில் செல்வதில்லை.

இதற்கு மாறாக மன்னாரில் இருந்து வவுனியாவுக்கு ஒன்றும், வவுனியாவில் இருந்து ஓமந்தைப் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு ஒன்றுமாக இரு வேறு பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

இதன் போது பயணிகள் இரண்டு தடவைகள் பயணச்சீட்டுப் பெற வேண்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் புத்தளம் மற்றும் கற்பிட்டி போன்ற இடங்களுக்குத் தேவைக்கு அதிமாக அரச பஸ்கள் மன்னாரிலிருந்து சேவையில் ஈடுபடுவதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே முதலில் மன்னார் சாலையில் இருந்து சங்குப்பிட்டிப் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கான அரச பஸ் ஒன்றை, உடன் சேவையில் ஈடுபடுத்துமாறு மன்னார் பயணிகள் மன்னார் சாலை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (க-12)

## சுய உதவிக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி,பெப்.21


கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமூக சேவைகள் அமைச்சின் சி.பி.ஆர். திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக அமைச்சு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் தலா 39 ஆயிரத்து 400 ரூபாவை வழங்கியுள்ளது. இது தொடர்பான பயிற்சிகளைப் பெற்ற சமூக சேவைகள் அதிகாரிகள், பிரதேச செயலர்களின் வழிகாட்டலில் கிராமங்கள் தோறும் சுய உதவிக்குழுக்களை அமைக்கவுள்ளனர்.

கிராம அலுவலர், மாற்று வலுவுள்ளோர், அரச அதிகாரிகள், மதகுருக்கள், சமாதான நீதிவான்கள், கிராமப் பெரியார்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இந்தச் சுய உதவிக் குழுக்கள் அமையும்.

இந்தக் குழுக்கள் தமது கிராமங்களின் தேவைகளை இனங்கண்டு அரச, அரசசார் பற்ற துறைகள் மூலம் பொருத்தமான உதவிகளைப் பெற்றுக்கொடுக்கவும் முயற்சிகளைச் செய்யவுள்ளது என்றும் தெரியவந்துள்ளது. (க-121)

## மன்னார் மீனவர்கள் தொழில் புறக்கணிப்பு



மன்னார், பெப்.21

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்த சிலாபம் மீனவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக மன்னார் மீனவர்கள் ஒரு நாள் தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்துச் சிலாபத்தில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்த மீனவர் வர்ணகுல சூரிய அன்ரனி பெர்னாண்டோ என்பவருக்கு, இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடற்தொழிலை ஒரு நாள் நிறுத்தினர்.

**மன்னாரில் மீன் வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, விலையும் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது.**

அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல், அடுத்தநாள் சனிக்கிழமை மாலை 4 மணி வரை தமது தொழிலை நிறுத்தினர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 8ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை.

இதனால் மன்னார் கடற்கரையோரப்பகுதிகள் வெறிச்சோடிய நிலையிலே காணப்பட்டன.

இது இவ்வாறிருக்க, கடந்த திங்கட்கிழமை முதல் மன்னாரில் மீன் வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு விலையும் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. (க-12)

## கண்ணிவெடியகற்றிய பகுதி ஜெயபுரத்தில் கையளிப்பு

அக்கராயன்,பெப்.21

ஜெயபுரம் வடக்கில் கண்ணிவெடியகற்றப்பட்ட பகுதி கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரம் வடக்குப் பகுதியில் டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் கண்ணிவெடிகளை அகற்றிய பகுதிகளே நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார், டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவின் உயரதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜெயபுரம் பாற்பண்ணைப் பகுதியிலிருந்து இத்தாவில் குளம் வரையான சுமார் 1.5 கிலோ மீற்றர் நீளமான பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

விவசாயத்துக்குரிய வளமான மண்ணை இந்தப் பிரதேசம் கொண்டுள்ளது.

சுமார் 30 குடும்பங்கள் வரையில் இங்கு குடியமர்வரென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-18)

## சர்வமத இணக்கப்பாடு தொடர்பான கூட்டம்

மன்னார், பெப்.21

இலங்கை சமாதானப் பேரவையினால் மன்னாரில் சர்வமத இணக்கப்பாடு தொடர்பான கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

'சர்வ மத இணக்கப்பாட்டினூடாக மனித நேயத் தீர்வுகளை சாத்தியமாக்கல்' எனும் தொனிப்பொருளில் பொதுச் சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மன்னார் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம் பெற்றது.

சமாதானத்திற்கும், மீள் இணக்கத்துக்குமான வளங்கள் அமைப்பு மன்னாரில் குறித்த பொதுச் சபைக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தின் போது இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் இணைப்பாளர் சமன் தர்மரத்தின, உதவி இணைப்பாளர் மணிமாறன், உதவிச் செயற்திட்ட இணைப்பாளர் ரசிகா செனவிரட்ன உட்பட சர்வமதத்தவர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள் எனச் சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் சர்வமதங்களுக்கிடையிலான இன ஒற்றுமையை எவ்வாறு பேணுவது, இணக்கப்பாட்டினூடாக மனித நேயத் தீர்வுகளை எவ்வாறு சாத்தியமாக்குதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (க-12)

## குளம் புனரமைக்கப்படாததால் விவசாயத்தில் பெரும் பாதிப்பு

அக்கராயன், பெப்.21

மதியமடுக் கிராமத்திலுள்ள கட்டையன் குளம் புனரமைக்கப்படாமையால் விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கில் மதிய மடுக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்கள் விவசாயத்தையே முக்கிய தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இந்தக் கிராமத்திலுள்ள கட்டையன் குளம் புனரமைக்கப்படாமையால் விவசாய முயற்சிகளை முழு அளவில் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்தக் கிராமத்தின் மிகவும் பழைமை வாய்ந்த கட்டையன் குளம் புனரமைக்கப்படுமாயின் 200 ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபட முடியும். மேலும் மீள்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தையும் உயர்த்திக் கொள்வதற்கு ஏதுவாகவும் இருக்கும். (க-410)

## யூனியன்குளம் பாலத்தில் புனரமைப்பு வேலைகள்



அக்கராயன்,பெப்.21

அக்கராயன் யூனியன் குளம் பாலத்தை 6 மில்லியன் செலவில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யூனியன்குளம் அ.த.க. பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிரதி அதிபர் திருமதி கி.அருள்தாஸ் வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கரைச்சிக் கோட்டக் கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம், அருட்தந்தை எம்.ஜெயானந்தன், அக்கராயன் மருத்துவர் சந்திக்க பஸ்நாயக்கா, பிரதேச சபை உறுப்பினர் ப.இராமச்சந்திரன், ஆசிரிய ஆலோசகர் மெ.கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். (க-18)

## பற்றைகளுக்குள் மலசல கூடங்கள் மறைவிடங்களை நாடும் பிரயாணிகள்


முல்லைத்தீவு,பெப்.21

ஒட்டுசுட்டான் சந்தியில் முன்பு அமைக்கப்பட்டிருந்த மலசல கூடங்கள் கவனிப்பாரற்றுப் பற்றைகள் மூடிக் காணப்படுவதால் பிரயாணிகள் பற்றைகளையே நாடுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதான சந்தியில் மலசலகூட வசதிகள் இல்லாததால், அங்கு கூடும் பிரயாணிகள் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்தச் சந்தியில் பல்வேறு இடங்களுக்கும் பஸ்களில் செல்வதற்கென ஏராளமான பிரயாணிகள் கூடுவது வழக்கமாகும்.

இவர்கள் நெடுங்கேணி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனியா எனப் பல இடங்களுக்கும் இங்கிருந்து செல்கின்றனர். ஆனால் இவர்களுக்கென மலசலகூட வசதிகள் இங்கில்லை.



ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்ட இரு மலசலகூடங்கள் கவனிப்பாரற்றுப் பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் தமது அவசரமான இயற்கைக் கடன்களைக் கழிப்பதில் இங்கு கூடும்மக்கள்பெரும் அவலங்களைச் சந்திக்கின்றனர்.

பிரதேச சபையினர் இதனைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும், இந்தச் சந்தியில் இறங்கி நிற்கும் போது அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

இனிமேலாவது பிரதேசசபையினர் இந்த மலசலகூடங்களைப் புனரமைத்து, மக்களின் பாவனைக்கு உதவ வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (க-500)


## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி யோகசிங்கம்

193, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி யோகசிங்கம் நேற்று (20.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மித்திராவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமல்ஸ்ரோன் மற்றும் நிரோஷா, அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(22.02.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடைக்கலமாதா கோயிலில் (O.L.R) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# சிங்களக் கடும்போக்காளரை ஒன்றிணைத்து அமெரிக்காவுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும்

## ஹெல உறுமய தெரிவிப்பு

சிங்களக் கடும் போக்காளர்களை ஒன்றிணைத்து, அமெரிக்காவுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையகத்தில் கடந்த வாரம் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தலைமையில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில், சிங்களக் கடும் போக்காளர்களை ஓரணியில் திரட்டும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

வியட்நாமில் அமெரிக்கா கற்றுக் கொண்ட பாடத்தை இலங்கையில் அவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை தடுக்க வேண்டும்.

மக்களின் எதிர்ப்பை மீறி இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டில் பிரச்சினைகள் தலைதூக்கும் என்பன போன்றவிடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இதையடுத்து, சிங்களக் கடும் போக்காளர்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும், வியட்நாமில் அமெரிக்கா கற்ற பாடத்தை இலங்கையிலும் கற்பிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் அழுத்தங்கள், குற்றச்சாட்டுக்கள் இலங்கைக்கு எதிராக நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இதற்கு எதிராகப் போராடும் காலம் வந்துவிட்டதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகச் செயலாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (ங-சி)

# ஜெனிவா மாநாடு ஆரம்ப நாளன்று ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டம்

»1 டம் நடத்தவுள்ளனர் என்று நம்பகரமாக அறியமுடிகின்றது.

ஜெனிவா மாநாடு ஆரம்பமாவதற்கு இன்னும் ஆறு நாள்களே எஞ்சியுள்ள நிலையில், இரு சாராரும் ஆர்ப்பாட்டங்களுக்கான ஏற்பாடுகளைத் தடல்புடலாகச் செய்து வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.

மனித உரிமைகள் பேரவை அமைந்துள்ள வளாகத்தில் இருபுறங்களிலும் ஒரே தினத்தன்று இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளமையால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை சுவிற்சர்லாந்து அரசு முன்னெடுத்து வருகின்றது என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் வாழும்தமிழர்களுக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுமாறு தமிழ் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ள அதே வேளை, சிங்கள மக்களுக்கும் அவர்களின் ஏற்பாட்டாளர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

உலகின் முக்கிய உறுப்பினர்கள் ஜெனிவா மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வரும் தறுவாயில், இலங்கை விவகாரம் தொடர்பில் ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளதானது இலங்கைக்கு ஏதோவொரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையொன்றை நடத்தி, தமிழர்களுக்கு நீதியை வழங்குமாறு சர்வதேச சமூகம் இலங்கையை வலியுறுத்த வேண்டும் எனக் கோரியே புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க, இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் மூக்கை நுழைக்கக் கூடாது என்றும், இலங்கைக்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனக் கோரியுமே புலம்பெயர் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

போர்க்குற்றச்சாட்டுப் படங்கள், இலங்கைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை புலம்பெயர் தமிழர்கள் தயாரித்து வருகின்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக சில மாற்றினத்தவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அதே வேளை, தமிழருக்கு நேர்ந்த அநீதிகளை எழுத்து வடிவில் வடிவமைத்து துண்டுப் பிரசுர விநியோகமும் இடம் பெறவுள்ளது. (த-சி)

# ஜெனிவா மாநாட்டில் இலங்கையை இலக்கு வைத்தே சிலாபக் கலவரம்

»1 றப்படுகின்றன என்றும் அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில் குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கடுவெல பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு :-

''சிலாபத்தில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடியதன் பின்னணியில் அரசசார்பற்ற நிறுவனமொன்று செயற்பட்டுள்ளது. மீனவர் ஒருவரின் கையிலிருந்த சுலோக அட்டை இந்த விடயத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. ''நிவாரணம் வேண்டாம் எண்ணெய் விலையைக் குறை'' என்ற வாசகம் அதில் எழுதப்பட்டிருந்தது.

ஒரு பின்னணியைக் கருத்திற்கொண்டே அந்த அரசசார்பற்ற நிறுவனம் மீனவர்களை வீதிக்கு இறக்கிப் பிடிவாதத்தனமான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. ஜெனிவா மாநாட்டில் இலங்கையை இலக்குவைத்தே இந்த ஆர்ப்பாட்டம் அரங்கேற்றப்பட்டுள்ளது. சர்வதேச ஊடகங்களினூடாக இலங்கைக்கு எதிரான அழுத்தங்களை உண்டுபண்ணும் நோக்கிலேயே இது நடத்தப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைப் போன்று இங்கு ஏற்படுத்தவேண்டும் என்பதே அதன் நோக்கம்.

லிபியா, டுனிசீனியா, சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளைப் போன்று இலங்கையையும் பட்டியல்படுத்திக் காட்டுவதற்கே அந்த அமைப்பு 'கொந்தராத்துக்காரராக' செயற்படுகின்றது. ஆனால், பரிதாபகரமாக உயிரொன்றே இந்தச் சம்பவத்தில் காவுகொள்ளப்பட்டது.

ஜனாதிபதியும், அரசும் ஒருபோதும் மக்களை மறந்துவிடவில்லை. அதற்காகத்தான் நிவாரணத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம்'' - என்றார். (த-சி)

# உலக நியதிகளை மதிக்காது இலங்கை ஆட முடியாது

»1 பட்டதாலேயே அங்கு அவலங்கள் நேர்ந்தன என்றும் அவர் கூறினார்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்ததற்கான முழு உரிமையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனித்து அனுபவிக்க முடியாது. சந்திரிகா, ரணில் போன்ற தலைவர்களுக்கும் அதில் பங்குண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியி லேயே மங்கள சமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் முக்கியமாகக் கூறியுள்ள விடயங்கள் வருமாறு:-

யுத்தத்தின் பின்னர் நாடு ஆச்சரியமான பாதையை நோக்கிப் பயணிக்கின்றது. நாட்டின் அபிவிருத்தி 8 சதவீதமாகவுள்ளது. இப்படியெல்லாம் கூறுவது அரசே தவிர, மக்கள் அல்லர்.

8 சதவீத அபிவிருத்தி இருக்குமானால் அது மக்களின் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பதன் மர்மம் என்ன? இந்த அரசுக்கு சிறந்த முறையில் பொருளாதார முறைமையை வழிநடத்தத் தெரியாது என்பதை விட அதனால் முடியாது எனக் கூறுவதே பொருத்தமாகவிருக்கும். இந்த நாடு தற்போதைய அரசின் கீழ் பயணிக்க முடியாது. அவ்வாறு செல்லும் பட்சத்தில் நாட்டின் எதிர்காலம் நாசமாகிவிடும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததன் உரிமையில் ஒரு பகுதியே மஹிந்த ராஜபக்ஷவைச் சாரும். அதை அவர் தனியாக உரிமை கொண்டாட முடியாது.

சந்திரிகா, ரணில் உள்ளிட்ட தலைவர்களும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குப் பாடுபட்டவர்களாவர். சந்திரிகா. இராணுவத்தைப் பலப்படுத்தினார். எல்.ரி.ரி.ஈயிடமிருந்து கருணாவைப் பிரித்தெடுத்து அவ்வமைப்பை இரண்டாகப் பிளவுபடுத்தி யுத்தம் செய்யும் சக்தியை மழுங்கடிக்கச் செய்தவர் ரணில்.

நான் வெளிவிவகார அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் 26 ஐரோப்பிய நாடுகளில் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளும் தடைசெய்தன. அதேபோன்று பொன்சேகா உள்ளிட்ட இராணுவத்தினரின் அர்ப்பணிப்பு காரணமாகவே யுத்தத்தை வெற்றி பெறக்கூடியதாக இருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி நம்பிக்கையை ஏற்படுத்தி அரசியல் தீர்வொன்றை வழங்கி சர்வதேசத்துடன் இணைந்து துரித அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால், ஆட்சியாளர்கள் அப்போது மூளையில்லாத மடையர்களாக இருந்தனர். சர்வதேசத்திற்குப் பொய் வாக்குறுதிகளை அள்ளிவீசினர். இன்று நாட்டின் அபிவிருத்திக்கு சர்வதேசம் உதவாமல் மாறாகப் பொருளாதார அரசியல் ரீதியிலான தடைகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முதலீடுகள் வருவதற்குப் பதிலாக உள்ள முதலீட்டாளர்களும் நாட்டைவிட்டு ஓடுகின்றனர். பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுகின்றன. ஐ.தே.க. பெற்றுக்கொடுத்த 5 ஆயிரம் கோடி 'ஜி.எஸ்.பி' வரிச்சலுகையையும் இழந்துள்ளது இந்த அரசு.

மக்கள் தொடர்ந்தும் அரசின் ஏமாற்று வித்தையான ஆச்சரியம் என்ற கதையை நம்பமாட்டர். ஆசியாவில் அதிக மின்கட்டணம், தெற்காசியாவில் அதிகளவான எரிபொருள் விலைக்கட்டணம், வேலையின்மை, குடும்ப ஆட்சி, ஜனநர்யக விரோதச்செயல், ஊடக அடக்குமுறை என்பன இலங்கையிலேயே உள்ளது. உலக நாடுகள் தற்போது இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றன. இந்நிலையில், நாட்டை ஆச்சரியமாக்க முடியுமா?

'காப்பெற்' வீதிகளுக்கு மேலாக 'காப்பெற்' போட்டு பணத்தை ஆட்சியாளர்கள் கொள்ளையடித்தால் நாடு எப்படி அபிவிருத்தியடையும்? முன்னைய அரசுகள் ஆரம்பித்துவைத்த செயற்றிட்டங்களுக்கு இந்த அரசு பெயர்ப்பலகையை மாத்திரமே பொருத்தியுள்ளது. நாட்டின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு சந்திரிகா, ரணில் போன்றவர்களே நிதியுதவிகளைத் தங்களது ஆட்சிக்காலத்தில் பெற்றுக்கொடுத்தனர்.

சர்வதேசத்தைப் பகைத்துக் கொண்டுள்ளமையால் இந்த அரசு சீனாவிடம் அதிக வட்டிக்கு கடன் பெறுகின்றது. எரிபொருள்களின் விலையை 40 சதவீதத்தால் அதிகரித்த நாடொன்று உலகில் இல்லை. இந்த ஆட்சியாளர்களுக்கு நிர்வாகம் தெரியவில்லை. மக்கள் வழங்கிய ஆணையை தங்களின் இருப்பைத்தக்கவைத்துக்கொள்வதற்கே பயன்படுத்து கின்றனர்.

# புகைக்குண்டுகளை இறக்குமதி செய்கிறது இலங்கைப் பொலிஸ்

»1 அண்மைக் காலமாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் கட்சிகள் மற்றும் மக்களின் போராட்டங்களின் போது பொலிஸார் அதிகளவில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தமை தெரிந்ததே.

# ஜெனிவாவில் தப்ப அரசு எடுத்த இறுதி முயற்சியும் பிசுபிசுத்தது

»1 வின் சில நாடுகளும், ஆபிரிக்க நாடுகள் சிலவும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொள்ளாதிருக்கத் தீர்மானித்துள்ளன என அறியமுடிகின்றது. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, ஜெனிவா மாநாட்டில் கொண்டுவரவுள்ள தீர்மானத்தை இந்த நாடுகள் ஆதரிக்கவுள்ள காரணத்தினால், மேற்படி ஒன்றுகூடலில் கலந்துகொள்ளாதிருக்கத் தீர்மானித்துள்ளன எனப் பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த இராஜதந்திரியொருவர் நேற்று மாலை 'உதய'னிடம் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக ஜெனிவா மாநாட்டில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானம் தொடர்பில் நடுநிலையான கொள்கையை வகிப்பதற்கு ஆசியாவின் சில நாடுகள் தீர்மானித்துள்ளன எனக் குறிப்பிட்ட அந்த இராஜதந்திரி, இந்தியா இதுவிடயத்தில் இலங்கைக்குச் சார்பாக செயற்படுமென்றும் உறுதியாகத் தெரிவித்தார். (த-சி)

# ஜனநாயகப் போராட்டத்தை நாங்கள் தடுக்க மாட்டோம்

»1 தையும் தடுத்து நிறுத்த பாதுகாப்புத் தரப்பினர் முயற்சிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியோ, ஜே.வி.பியோ அல்லது வேறு அரசியல் கட்சிகளோ ஜனநாயக ரீதியில் நடத்தும் போராட்டங்களைப் பொலிஸார் தடுக்கவில்லை.

எனினும், போராட்டம் நடத்துவோர் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினருடன் வேண்டும் என்றே மோதலை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றனர். கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட போது, அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டேன்.

எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் திசையை மாற்றி அலரி மாளிகை நோக்கிச் செல்ல முற்பட்ட போதே பொலிஸார் அவர்களைத் தடுத்தனர். பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள்தான் கற்களை வீசி எறிந்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதே பொலிஸாரின் முதன்மைக் கடமையாகும். அவர்களுக்கு போராட்டங்களை தடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எனினும், எந்தவொரு ஜனநாயக நடவடிக்கைக்கும் ஓர் எல்லையுண்டு. எல்லை மீறிச் செயற்படும் போது அதனை தடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

சிலாபம் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்படும். பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்திய பல சந்தர்ப்பங்களை என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

மிகப் பெரும் தியாகங்களுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர். அதன்பின்னர் நாட்டை பின்நோக்கி நகர்த்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் அனுமதியளிக்க முடியாது''- என்றார்.

# மக்கள் போராட்டங்களை நசுக்க முயல்கிறது அரசு

»1 கான உரிமை நாளுக்கு நாள் பறிக்கப்பட்டு வரும் நிலையில், அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனநாயக ரீதியில் எதிர்ப்பை வெளியிடக்கூட மக்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

விவசாயிகள், தொழிலாளிகள், மீனவர்கள் உள்ளிட்ட பலரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் அதிருப்தி அடைந்துள்ளனர். மக்களின் எதிர்ப்பை தடுத்து நிறுத்தும் நோக்கில் நாடு முழுவதிலும் பாதுகாப்பு தரப்பினர் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் அடக்குமுறைகளை மீறி மக்களின் எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுவடைந்து செல்கின்றது''- என்றார். (ங)

நாடு பற்றியெரியும் போது ....!



தங்காலை மீனவர் துறைமுகத்துக்கு நேற்றைய தினம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அங்கிருந்த மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

# அரசின் பொருளாதாரக் கொள்கை நாட்டை விரைவில் சீரழித்துவிடும்

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



**அரசு எமது கருத்தை செவிமடுக்காமல் தன்னிச்சையாக செயற்படுகின்றது. பொருளாதார முறைகள் தெரியாவிட்டால் ஏதேனும் புத்தகங்களைப் படித்தாவது தெரிந்து கொள்ளவேண்டும். அதைத் தவிர்த்து, நாட்டிற்குப் பொருந்தாத பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடாது**

கொழும்பு, பெப். 21

அரசின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமாயின், நாட்டின் பொருளாதாரம் இன்னும் சில நாட்களில் சீரழிந்து சின்னாபின்னமாகிவிடும். மீனவரைக் கொன்றதாலோ, மானியங்களை வழங்குவதாலோ அல்லது அரசிற்கு எதிரான மக்கள் போராட்டங்களை முடக்குவதாலோ நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. நாட்டு மக்களின் சிறந்த எதிர்காலம் குறித்து அரசு சிந்தித்து செயற்படுமாயின், மிஹின் எயார் விமானசேவைகளை நாளையதினமே மூடவேண்டும். அப்போதுதான் மூன்று மாதத்திற்கு பருப்பாவது சாப்பிட முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் தற்போதைய பொருளாதார கொள்கைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமாயின் நாடு சீரழிந்து போய்விடும்.

நமது நாட்டிற்கு நடைமுறையிலுள்ள பொருளாதாரக் கொள்கை முறை பொருந்தாது என கடந்த ஒன்பது மாதகாலமாக அரசிற்கு நாம் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், அரசு எமது கருத்தை செவிமடுக்காமல் தன்னிச்சையாக செயற்படுகின்றது. பொருளாதார முறைகள் தெரியாவிட்டால் ஏதேனும் புத்தகங்களைப் படித்தாவது தெரிந்து கொள்ளவேண்டும். அதைத் தவிர்த்து, நாட்டிற்குப் பொருந்தாத பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தக்கூடாது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் எமக்குத் தேவையில்லை என வீறாப்புப் பேசிய அரசு, எமக்குக் கடன் தாருங்கள் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிஷாட் கப்ரால் மற்றும் பிரதியமைச்சர் சியம்பலாபிடிய ஆகியோர் கூழைக் கும்பிடுபோட்டு சர்வதேசநாணய நிதியத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற வேண்டுமானால், அவர்களின் நிபந்தனைகளுக்கு இலங்கை அடிபணியவேண்டும். அதனால் நாணய பெறுமதி இறங்கும். வட்டிவீதக் கொள்கையில் மற்றும் மானியங்கள் வழங்குவதை நிறுத்தல் ஆகிய கொள்கைகள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் ஆட்டங்கண்டுள்ளது.

வட்டி வீதத்தைக் கீழே வைத்துக் கொள்வதற்காக மத்தியவங்கி இரண்டு பில்லியனுக்கும் அதிகமான பணத்தை அச்சிட்டு, செய்யக் கூடாதசெயலைச்செய்துள்ளது.

எரிபொருள் விலையேற்றத்திற்காக அரசு மானியம் வழங்குகின்றது. வழங்கப்படுகின்ற மானியம் மக்களுக்கு உரியமுறையில் வழங்கப்படவேண்டும். மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பிற்காக மாதாந்தம் 200 ரூபா மானியம் வழங்கப்படும். இருநூறு ரூபாவை வைத்து மக்கள் என்ன செய்வார்கள்? இந்த மானியமானது ஐந்து லட்சம்குடும்பங்களுக்குவழங்கப்படும் என்றும், இதற்காக 80 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதெனவும் அரசு கூறுகின்றது.

ஐந்து லட்சம் குடும்பங்களுக்கு 200 ரூபா மானியம் வழங்கப்படுமெனின் 100 மில்லியன் ரூபாவை ஒதுக்க வேண்டும். ஆனால், அரசோ 80 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது எனக் கூறுகின்றது. இது என்னவென்று எமக்குப் புரியவில்லை. எவ்வாறாயினும், மானியம் குறித்த பாதிப்புக்குரிய மக்களைச் சென்றடையவேண்டும்.

நாட்டுமக்களின் எதிர்கால நலன்கருதி அரசு செயற்படுமாயின், அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அநாவசிய செலவுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றார்.

(ந-சி)

**SAAMSON ENGLISH** **3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி**

மொழியறிவு எதுவுமற்ற சிறு குழந்தையாக இருந்தபோது 2-4 வயதுக்குள் தமிழ் மொழியை சரளமாகப் பேசப் பழகிய உங்களால், 15 வருடங்களுக்கு மேலாக முயற்சி செய்தும் ஆங்கிலத்தில் பேச முடியாதிருப்பதற்கான காரணம் அதை வாய்மொழி வழியாக பேசிப்பழகாமல் கொப்பியில் எழுதியும், புத்தகம், CD வழியாக படித்தமையாலாகுமே!

கொப்பியில் எழுதுவதற்கும், புத்தகம் படிப்பதற்கும் ஆங்கிலம், விஞ்ஞானமோ அல்லது கணிதமோ அல்ல! அது ஒரு மொழியாகும். ஒரு மொழியை மற்றவர்களுடன் பேசிப் பேசி பழகுவதன் மூலமே அதில் தேர்ச்சி பெற முடியும்.

**எமது பயிற்சிநெறி எவ்வாறானது?**

- ★ புத்தகப் படிப்பு இல்லை
- ★ இலக்கணம், CD பயிற்சி இல்லை
- ★ மனப்பாடம் செய்வதில்லை.

மாணவர்களுக்கு ஆங்கில வசனங்களை உருவாக்குவதற்கான ஒரு பொதுவான வழிமுறையை வழங்கி, மற்றையவர்களுடன் தொடர்ச்சியான ஆங்கில உரையாடல் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் அதை சரளமாக பயிற்றுவிக்கும் ஒரு முறையாகும்.

**புதிய பயிற்சிப்பட்டறைகள் ஆரம்பம் 25-02-2012**

சனி, ஞாயிறு பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு | I 09-11 | பிரிவு | III 02-04 |
| பிரிவு | II 11-01 | பிரிவு | IV 04-06 |

(C\9446) (6,1

**SAAMSON ENGLISH** 279, மணிக்கூட்டு வீதி, யாழ். Tel : 077 621 4567

**திசைகாட்டியின்**
**பிறந்தநாள் கொண்டாட்டங்கள் ஆரம்பம்**
**கைதடி முதியோர் இல்லம்**



எதிர்வரும் 25.02.2012 "திசைகாட்டி" தனது முதலாவது அகவையைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு நேற்று 20.02.2012 கைதடி முதியோர் இல்ல நிர்வாகியிடம் ஒரு தொகுதி உடுபுடவைகளை திசைகாட்டியின் வடக்கு மாகாண முகாமையாளர் S. சஜீந்திரன் அவர்களால் கையளித்தபோது.....

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதன் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 2219016.
115, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 0214914527
மெல்பேர்ன், அவுஸ்திரேலியா - 0061412479209.

**அலுவலக உத்தியோகத்தர் தேவை**

A/L படித்த ஆண்(லைசன்ஸ் உள்ளவர்கள்)/
பெண்(நல்ல கையெழுத்துடன்) தேவை
கணினி அறிவு விரும்பத்தக்கது
சுயவிபரக்கோவையுடன் 22.02.2012 புதன்
காலை 9.00-9.30 வரை நேரில் வரவும்

**MyWay** 182 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
**077 33 63 456**

**கணினி மலிவு விற்பனை**

HP 3.0GHz, 16' LCD Monitor
மற்றும் அதனுடன் கூடிய
பொருட்களும் 24,750/-
விலையில் விற்பனைக்குண்டு.
ஒரு வருட உத்தரவாதம்

**ST. ANTONY'S.COM (SKY)**
187, K.K.S. Road, Jaffna.
TP : 021 2224865, 0750698608.
(மின்சார நிலைய வீதி எதிரில்)
FREE - WEBGAM / 4GB PEN DRIVE / HEADPHONE
Power S/Y - 1,250/-, I3 Dell Laptop 62,500, DDR III 2GB 2300, DDR I 512 1500 (Whole
14ஆவது ஆண்டு சேவையில்

**ஆங்கிலம்**
**ஒரு மணிநேர இலவச கற்கைநெறி**
**23.02.2012 வியாழன்**

| | |
|---|---|
| 1 : காலை 8.00 – 9.00 | 2 : காலை 10.00 – 11.00 |
| 3 : மாலை 3.00 – 4.00 | 4 : மாலை 5.00 – 6.00 |

**அனுமதி இலவசம், பயிற்சி புத்தகம் இலவசம்**
**பயிற்சிக்கான சான்றிதழ் இலவசம்**

(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)
**இந்த விளம்பரத்துடன்** வகுப்புக்கு வரும் அனைவருக்கும் ஆங்கில கற்கைநெறிக்கான **CD** முற்றிலும் இலவசம்

**MyWay English**
182 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
077 33 63 456

**Diploma in Web Development**

குறுகியகாலத்தில் அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்களையோ or சுயதொழில் வாய்ப்புக்களையோ தேடி நிற்கும் மாணவர்களின் சிறந்த தெரிவு....

நீங்கள் வீட்டில் இருந்து கொண்டே அதிகளவு பணம் ஈட்டிக்கொள்ளுங்கள்



New Batch Starts on 25.02.2012
காலை 10.00 மணி

அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்

**Institute of Informatics Studies**
இல 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி :-021 222 2831 தொ.நகல் :- 021 222 6933

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.